# பரீதுத்தீன் கஞ்செ-ஷகர் (ரஹ்)

**ஷை**கு அபூ ஸயீத் தப்ரேஸி (ரஹ்) அவர்களின் ஆன்மீகத் தலை மாணவரான ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி (ரஹ்) அவர்கள், தம் ஆசான் இறந்தபின் சிலகாலம் ஷைகு ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களின் நட்புறவில் வாழ்ந்துவிட்டு, தம் உற்ற நண்பர்களான ஷைகு பஹாவுத்தீன் ஜகரிய்யா (ரஹ்) அவர்களும், காஜா குத்புத்தீன் பக்தியார் காக்கி (ரஹ்) அவர்களும் வாழ்ந்து வந்த இந்தியா வந்து சேர்ந்தார்கள். இந்தியா வந்து சேர்ந்த அவர்கள், அக்காலை இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சித் தலைநகராக விளங்கிய டில்லி நோக்கிச் செல்லும்பொழுது, வழியில் கஹ்த்வால் என்ற சிற்றூர் ஒன்றில் தங்கினர். அங்குள்ள மக்களிடம், ''இங்கு எவரேனும் ஆன்மீகச் செல்வர் உளரோ?'' என்று அவர்கள் வினவ, ''அத்தகு பேறு பெற்றவர்கள் ஒருவரும் இங்கு இல்லை. ஆனால் எங்கள் ஊர் காஜியின் மகன் ஒருவர் உள்ளார். அவரை நாங்கள் 'காஜி பச்சா தீவானா' (காஜி மகன் கிறுக்கன்) என்று அழைப்போம். அவர் தாம் பள்ளி வாயிலின் பின்புறத்தில், எப்பொழுது பார்த்தாலும், வணக்கத்திலும், வழிபாட்டிலும், ஈடுபட்டுள்ளார்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள். அதுகேட்ட ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி (ரஹ்) அவர்கள், தம்மை அவரிடம் அழைத்துச் செல்லுமாறு கூறினர். அவர்களும் அவ்விதமே செய்தார்கள். வழியில் ஒருவர் எதிர்ப்பட்டு, ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி (ரஹ்) அவர்களுக்கு ஒரு மாதளம் பழத்தைத் தம் அன்புக் காணிக்கையாக வழங்கினார். அதனைப் பெற்றுக் கொண்ட அவர்கள், காஜியின் மகனைச் சந்தித்ததும், உடைத்து அவரிடம் கொடுத்து உண்ணுமாறு கூற, ''மன்னிக்க வேண்டும். நான் நோன்பு நோற்றுள்ளேன்'' என்று கூறி, அதனை உண்ண மறுத்துவிட்டார். அதற்கு மேல் ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி (ரஹ்) அவர்களும் அவரை வற்புறுத்தவில்லை.

சிறிது நேரம் உரையாடி விட்டு, ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி (ரஹ்) அவர்கள் பிரிந்ததும், அந்த காஜியின் மகன் அங்கு ஒரு மாதளஞ்சுளை கிடப்பதைக் கண்டு, அதனை எடுத்துப் பத்திரமாகத் தம் கைத்துண்டில் முடிந்து வைத்துக் கொண்டு, நோன்பு திறந்ததும் உண்டார். அடுத்த கணம்

அவரின் உள்ளின் உள்ளே ஒரு பேரின்பக் கிளுகிளுப்பு ஏற்பட்டது. ஆன்மீகப் பேரொளி பெற்றது போன்ற உணர்வைப் பெற்றார் அவர். அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை; அப் பெரியார் அந்த மாதளம் பழத்தைத் தந்த பொழுது, அதனை வாங்கி முழுவதையும் உண்ணாதிருந்துவிட்டேனே. உண்டிருப்பின் எத்துணை பெரும் பயனை என்னால் எய்தியிருக்க இயலும். என்ன கை சேதம்! என்ன கைசேதம்!! என்று தம்மையே தாம் நொந்து கொண்டார் அவர். இந்த எண்ணம், இந்தக் கவலை, அவருடைய உள்ளத்தைப் பலகாலம் நீங்காது கௌவிப் பிடித்துக் கொண்டிருந்தது. பிற்காலத்தில் அவர் தம் ஆன்மீக ஆசான் காஜா குத்புத்தீன் பக்தியார் காக்கி (ரஹ்) அவர்களிடம், இச் செய்தியைப் பெரிதும் வருத்தத்துடன் எடுத்துரைத்த பொழுது, ''ஒன்றிற்கும் கவலற்க! எல்லா ஆன்மீக அருட்கொடைகளும், நீர் உண்ட அந்த ஒரு சுளையில் தான் இருந்தது. அது உமக்கென நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அது உம்மை அடைந்துவிட்டது. மிச்சப் பழத்தில் யாதொன்றும் இல்லை'' என்று அருண்மொழி பகர்ந்தார்கள்.

இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா உமர் பாரூக் (ரலி) அவர்களின் அருமைத் திருமகன், அறிவெலாம் ஒருங்கெய்தப் பெற்ற ஆன்றோர், அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் கொடி வழியில் பூத்த நறுமலரான ஷைகு ஷுஐப் என்பவர், காபூலில் வாழ்ந்து வந்தார். ஹிஜ்ரி 552 (கி.பி. 1157) ஆம் ஆண்டில் குஸ் இனத்தார் காபூலின் மீது படையெடுத்த பொழுது, ஷைகு ஷுஐபின் குடும்பத்தினர் அதில் ஷஹீதானார்கள். எஞ்சிய தம் மூன்று ஆண் மக்களையும் அழைத்துக் கொண்டு, காபூலிலிருந்து புறப்பட்டு 'சிறிய கஸ்னி' என்று அழைக்கப்பட்ட, லாகூரில் வந்து குடியேறினார் ஷைகு ஷுஐப், அவ் ஊரின் சூழலும், சுற்றுச் சார்புகளும் ஷைகு ஷுஐபுக்கு ஏற்றதாக இல்லாததனால், அவர் சில திங்கள் கழிந்தபின் அங்கிருந்து தென்கிழக்கே, 34 கல்லில் இருந்த கசூர் என்ற ஊருக்குத் தம் குடும்பத்தினருடன் குடிபெயர்ந்தார்.

ஷைகு ஷுஐபையும், அவரின் குடும்பத்தின் மாண்பினையும் பற்றி ஏற்கனவே கேள்வியுற்றிருந்த அவ் ஊர் காஜியார் தம் ஊருக்கு எழுந்தருளிய தொல் குலத்துத் தோன்றல்களை அகமலர, முகமலர வரவேற்றதோடு, அவர்களின் வரவை லாகூரில் ஆண்டு வந்த கஸ்னவி அரசாங்கப் பிரதிநிதிக்குத் தெரியப்படுத்தினார். உடனே அந்த ஆளுநரிடமிருந்து, அன்பும் அனுதாபமும் நிறைந்த ஒரு மடல் ஷைகு ஷுஐபுக்கு வந்தது. அதில், அவர் அவர்களின் வரவைப் பற்றித் தம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டதுடன், தம்மாலான அனைத்து உதவிகளையும் அவர்களுக்குச் செய்யத் தாம் எப்பொழுதும் தயாராக இருப்பதாக அதில் குறிப்பிட்டிருந்தார்.



ஆன்மீக வாழ்வில் ஊறிப் போன ஷைகு ஷுஐபோ, ''அரசாங்கத்தில் எத்தகு பதவியும் நான் வேண்டேன்'' என்று ஆன்றவிந்த முறையில் பதில் தீட்ட அதுகண்ட ஆளுநர், ''நல்லது; அரசாங்கத்தில் பதவி வகிக்க வேண்டாம். நான் தங்களை கஹ்த்வால் என்ற ஊரின் காஜியாக நியமனம் செய்துள்ளேன். அங்குச் சென்று, அப்பொறுப்பினை ஏற்கவும்!'' என்று அன்பில் தோய்ந்த ஆணை பிறப்பித்தார்.

அவ்வாறே ஷைகு ஷுஐப், மூல்த்தான் மாவட்டத்திலுள்ள கஹ்த்வால் என்ற ஊருக்குத் தம் குடும்பத்தினருடன் வந்து, காஜி பதவி ஏற்று வாழ்ந்து வரும் நாளில், தம் மகன் ஜமாலுத்தீன் சுலைமானுக்கு அவ் ஊரில் வாழ்ந்து வந்த ஷைகு வஜீஹுத்தின் கோஜந்தியின் கண்மணி மகள், பீபி கர்ஸும் காத்தூனை மணமுடித்து மகிழ்ந்தார் அவர். அந்த இன்ப மணமக்களின் இரண்டாவது திருமகனாக ஹிஜ்ரி 571 (கி.பி. 1175)ஆம் ஆண்டில் ஃபரீதுத்தீன் மஸ்வூத் (ரஹ்) அவர்கள் பிறந்தார்கள்.

ஃபரீதுத்தீன் மஸ்வூத் (ரஹ்) அவர்களைத் தம் மணி வயிற்றிலே பத்து மாதங்கள் சுமந்து, மாநிலத்திலே விட்ட அவர்களின் அன்னை கர்ஸும் காத்தூன், 'கற்பெலாம் திரண்டுருக் கொண்ட கன்னி'யாக விளங்கினார். இறை பக்தியில் மூழ்கித் திளைத்த அவர், இரவின் பெரும் பகுதியைத் தொழுகையிலும், தியானத்திலும் செலவழித்து வந்தார். ஒரு நள்ளிரவில் அவர் தம் தொழுகை விரிப்பில் அமர்ந்து தியானத்தில் வீற்றிருந்த பொழுது, அங்குக் களவாடப் புகுந்த திருடர் ஒருவர், அவரின் திருமுகத்திலிருந்து வீசிய பேரொளியைக் கண்டு திகைப்புற்று, மனம் திருந்தி, அவரின் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டதோடு, அடுத்த நாள் தம் குடும்பத்தினருடன் வந்து இஸ்லாத்தைத் தழுவி, அப்துல்லாஹ் என்னும் அழகுத் திருப்பெயர் சூட்டப்பெற்று அறவாழ்வு வாழ்ந்து, இறைநேசத் தன்மையை எய்தப் பெற்றாரென்றும், அவர் இறந்தபின் அருள்வேண்டி அவரின் அடக்கவிடத்திற்கு மக்கள் சாரி சாரியாகச் சென்று வந்தனர் என்றும், 'ஸியருல் ஆரிஃபின்' என்ற நூலில் பொறிக்கப்பட்டுள்ளது.

தம் போன்று தம் சின்னஞ்சிறு மகன் ஃபரீதுத்தீன் மஸ்வூதும், தொழுகையிலும், வணக்கங்களிலும் ஈடுபட வேண்டுமென்று விரும்பிய அன்னை கர்ஸும் காத்தூன், அவர்களுக்குத் தொழுகையில் ஓர் இன்பம் ஏற்படுவதற்காக, அவர்கள் தொழுது முடித்ததும் எடுத்து உண்பதற்காக ஒவ்வொரு நாளும், அவர்களின் தொழுகை விரிப்பின் கீழே சிறிதளவு சர்க்கரையைத் தாளில் மடித்து வைத்து வந்தார். ஒருநாள் அவ்விதம் செய்ய அம்மையார் மறந்துவிட்டனர். ஆனால் தனயர் தொழுது முடிந்ததும், தொழுகை விரிப்பின் கீழ் தம் கையைவிட, சர்க்கரை அவர்களின் கையில்

வந்தது. அதனைத் தனயர் சுவைத்துச் சுவைத்துத் தின்று கொண்டிருப் பதைக் கண்டதும், அன்னைக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. திட்டமாக, தம் காதல் திருமகன் இறையருள் பெற்றவரே என்று எண்ணினார். அன்றிலிருந்து அவர்களுக்கு, 'கஞ்செ-ஷகர்' (சர்க்கரைக் கருவூலம்) என்ற பட்டம் ஏற்பட்டது.

ஆனால், 'ஸியருல் ஔலியா' என்ற நூலில், அவர்களுக்கு 'கஞ்செ-ஷகர்' அல்லது 'ஷகர்-பார்' என்ற பெயர் ஏற்பட்டதற்குக் காரணம், அவர்கள் தொடர்ந்து நோன்பு நோற்று வந்ததன் காரணமாக, அவர்களுக்குச் சில பொழுது கடுமையான பசி ஏற்பட்ட பொழுது, தம் வாயில் கூழாங் கற்களைப் போட்டு அதக்கிக் கொண்டிருப்பர் என்றும், அவையோ சர்க்கரைக் கட்டிகளாக மாறிவிட்டதேயாகும் என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

'ஸியருல் ஆரிஃபீன்' என்ற நூலிலோ, மௌலானா ஜமாலி கூறுவதாகப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு நாள் பாபா ஃபரீத் மரக்கட்டைகளாலான பாத அணிகளை அணிந்து கொண்டு, தம் ஆசானைக் கண்டு வரச் சென்றார்கள். அப் பொழுது மழையின் காரணமாக வழி முழுவதும் சகதியாக இருந்தது. ஏழு நாட்களாகத் தொடர்ந்து நோன்பு நோற்றதன் காரணமாக, மெலிந்து பலவீனமாயிருந்த அவர்கள், சகதியில் வழுக்கிக் கீழே விழுந்துவிட, சகதி அவர்களின் வாய்க்குள் செல்ல, அடுத்த கணமே அது சர்க்கரையாக மாறியது. பின்னர் அவர்கள் தம் ஆசானின் இருப்பிடத்தை அடைய, வழியில் நடந்த அனைத்தையும் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட அவர்களின் ஆசான், அவர்களை நோக்கி, ''பாபா ஃபரிதுத்தீன் மஸ்வூத்! உம் வாய்க்குள் சென்ற சிறிதளவு சகதி, சர்க்கரையாக மாறிவிட்டது. எல்லாம் வல்ல இறைவன் உம் ஆகம் முழுவதையும் சர்க்கரைக் கருவூல மாக ஆக்கி, அதனை எப்பொழுதும் இனிமையுடையதாகச் செய்யின், வியப்புறுவதற்கில்லை'' என்று நவின்றனர்.

பின்னர் ஆசானிடமிருந்து விடைபெற்று அவர்கள் இல்லம் திரும்பிய பொழுது, மக்கள் அவர்களைப் பார்த்து, 'இதோ ஷைகு ஃபரித் கஞ்செ ஷகர் வருகிறார்' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டது அவர்களின் செவியில் விழுந்தது.

'குல்ஸாரெ-அப்ரார்' என்ற நூலின் கையெழுத்துப் பிரதியில் இது வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ''பஞ்சாராக்கள் என்ற வணிகக் கூட்டத்தினர் தம் ஒட்டகங்கள் மீது பொதிகளை ஏற்றிக் கொண்டு செல்வதைக் கண்ட ஷைகு ஃபரிதுத்தீன் மஸ்வூத் (ரஹ்) அவர்கள் ''என்ன



ஏற்றிச் செல்கின்றீர்கள்?'' என்று வினவினர். உண்மையை உரைப்பின் அவர்கள் அதிலிருந்து ஏதேனும் தமக்குக் கேட்பர் என்று எண்ணிக் கொண்ட அவ்வணிகக் குழுவின் தலைவன், 'உப்பு' என்று ஒரே சொல்லில் மறுமொழி பகர்ந்தான். ''அப்படியா!! உப்பா!!'' என்று ஷைகு அவர்கள் கூறினர். பின்னர் அப்பொதிகளை அவிழ்த்துப் பார்க்கும் பொழுது, அதிலிருந்த சர்க்கரையெல்லாம் உப்பாக மாறியிருப்பதைக் கண்ட அவன், ஷைகு அவர்களிடம் வந்து, தன்னை மன்னித்தருளுமாறு வேண்ட, அவர்களும் அவ்விதமே செய்ய, உப்பு முன்பு போல் சர்க்கரையாக மாறிவிட்டது. இதிலிருந்து அவர்களுக்கு கஞ்செ ஷகர் என்ற பட்டம் ஏற்பட்டது. இதைப் பற்றி, அவர்கள்மீது அளவற்ற அன்பு செலுத்திய பைராம் கான் கானெ கானன் பாடும் பொழுது,

'சர்க்கரையை உப்பாக மாற்றக் கூடிய உப்புச் சுரங்கமே போற்றி!

உப்பைச் சர்க்கரையாக மாற்றக் கூடிய சர்க்கரையின் உலகமே போற்றி!

கடலின் அதிபதியே போற்றி!!!

உலகத்தின் எசமானரே போற்றி!'

என்று வாயார்ந்து பண்ணிசைக்கிறார்.

'கஸீனத்துல் அஸ்ஃபியா' என்ற நூலில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

பாபா ஃபரீத் (ரஹ்) அவர்கள் காடுகளில் வசித்துக் கடும் தவம் செய்து கொண்டிருந்த பொழுது ஒரு நாள் தாக மேலீட்டால் ஒரு கிணற்றை அடைந்தனர். ஆனால் அங்கோ தண்ணீர் எடுக்க வாளியும் இல்லை; கயிறும் இல்லை. என் செய்வதென்றறியாது அவர்கள் திகைத்துக் கொண்டிருந்த பொழுது, இரண்டு மான்கள் நீர் அருந்தக் கிணற்றருகே வந்தன. உடனே கிணற்றிலிருந்த தண்ணீர் பொங்கி, விளிம்பு வரை வந்தது. அந்த இரண்டு மான்களும் நீர் அருந்திச் சென்றன. அது கண்ட பாபா ஃபரீத் (ரஹ்) அவர்களும், நீர் அருந்தக் கிணற்றை நெருங்கிய பொழுது, நீர் தரை மட்டத்துக்குச் சென்று விட்டது. அப்பொழுது அவர் களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவில்லை. ''இறைவ எம்பெரும! நான் யாது பிழை செய்தேன்? மான்களுக்கு நீர் புகட்டிய நீ, எனக்கேன் மறுத்தாய்!'' என்று கல்லும் கரைந்துருகும் வண்ணம் இறைஞ்சினர்.

அப்பொழுது ''ஃபரீதே! உமக்கும் மான்களுக்கும் ஒப்புவமை ஏது? நீர் நீர் அருந்த கயிற்றையும், வாளியையும் நம்பினீர்? அந்த வாயில்லாப் பிராணிகளோ, என்னையே நம்பிக் கிணற்றருகே வந்தன. எனவே

அவற்றிற்கு நீர் புகட்டினோம். உமக்குப் புகட்டவில்லை'' என்ற அசரீரி முழங்கியது.

தம் தவற்றை உணர்ந்த பாபா ஃபரீத் (ரஹ்) அவர்கள், அதற்குப் பிராயச்சித்தம் செய்யும் முறையில், நாற்பது நாட்கள் கடும் தவம் மேற்கொண்டனர். அந்த நாற்பது நாட்களும், அவர்கள் ஒரு துளியேனும் தண்ணீர் அருந்தவில்லை. நாற்பதாம் நாள் முடிந்ததும், தம் இருவிரல் களால் ஒரு பிடிமண் எடுத்து வாயில் போட்டார்கள் அவர்கள். என்ன வியப்பு! அது சர்க்கரையாக இனித்தது. அதைத் தொடர்ந்து தேன் செய்தி ஒன்று அவர்களின் செவியில் ஒலித்தது ''ஃபரிதே! நாம் உம் பவம் பொறுத்தோம்; தவம் ஏற்றோம். உம்மை நம் அடியார்களின் குழுவில் இணைத்துக் கொண்டோம்.'' அதுகேட்டு பாபா ஃபரீத் (ரஹ்) அவர்கள், சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பெய்ய அதில் குளித்தது போன்ற உணர்வு பெற்றார்கள்.

இவ்வாறு அவர்களுக்கு கஞ்செ-ஷகர் என்ற பட்டம் ஏற்பட்ட தற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதினும், அவர்களின் இனிய இயல்பும், எழிலார்ந்த நற்பண்புகளும், தேனினும் இனிய தீஞ்சொற் களுமே அவர்களுக்கு இப்பட்டத்தை ஈட்டித் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இளமையிலே இனிய இயல்பு வாய்க்கப் பெற்றிருந்த இப்பெரு மகனார், தம் அருமை அன்னையால், இளமையிலேயே இறை வணக்கத்தில் ஈடுபடுத்தப்பட்ட இத் திருமகனார், வயதேற, ஏற இறை வணக்கத்திலேயே ஈடுபட்டிருந்த பொழுதுதான், நாம் துவக்கத்தில் குறிப்பிட்ட ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி (ரஹ்) அவர்களின் சந்திப்பு அவர்களுக்குக் கிட்டியது. அப்பொழுது ஷைகு பரீதுத்தீன் மஸ்வூத் (ரஹ்) அவர்கள் தாம் அணிந்திருந்த உடையில் இருந்த கிழிசல்களை மறைக்க முயன்ற பொழுது, அதனைக் கவனித்துக் கொண்ட ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி (ரஹ்) அவர்கள், 'புகாராவில் ஒரு தர்வேஷ் இருந்தார். அவர் மார்க்கக் கல்வி பயில்வதில் பெரிதும் ஆர்வம் காட்டினார். ஏழாண்டு காலமாக அவர் அணிவதற்கு ஒரு 'பைஜாமா' கூட இல்லாமல் இருந்தது. ஒரு சிறு துண்டை உடுத்திக் கொண்டே வாழ்ந்து வந்தார். ஆதலின் நீரும் கவலைப்பட வேண்டாம். என்ன நடக்கின்றது என்பதைப் பாரும்'' என்று ஆறுதல் கலந்த அருண்மொழி பகர்ந்துவிட்டுச் சென்றார்கள்.

தம் துவக்கக் கல்வியை அன்னையின் மடியிலும் தந்தையின் முன்னிலும் பின்னர் கஹ்த்வாலில் இருந்த பள்ளியிலும் பயின்று முடித்த ஷைகு ஃபரித் (ரஹ்) அவர்கள், பதினெட்டு வயதை எய்திய பொழுது, உயர் கல்வி பெறுவதற்காக மூல்த்தான் நோக்கி அடியெடுத்து வைத்து



நடந்தார்கள். அங்கு சென்ற அவர்கள், மௌலானா மின்ஹாஜுத்தீன் திர்மிதி அவர்களின் பள்ளிவாயிலைச் சேர்ந்த மத்ரஸாவில் சேர்ந்து பயின்றனர். அங்கு குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து முடித்த அவர்கள், ஒவ்வொரு நாளும் அதனை முற்றிலும் ஓதி முடிக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இச் சமயத்தில்தான் அவர்களுக்கு அவர்களின் வருங்கால ஆன்மீக ஆசானைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது.

தம் ஆன்மீக ஆசான் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் குராஸானிலிருந்து இந்தியா சென்று விட்டார்கள் என்பதைக் கேள்வி யுற்று, அவர்கள் வந்த தடத்தின் மீது தம் தடம் பதித்து இந்தியா வந்த காஜா குத்புத்தீன் பக்தியார் காக்கி (ரஹ்) அவர்கள், வழியில் மூல்த்தானில் சில நாட்கள் தங்கினர். மூல்த்தானில் அவர்களின் இருப்பிடம் மௌலானா மின்ஹாஜுத்தீன் திர்மிதியின் பள்ளிவாசலாகவே இருந்தது.

ஒருநாள் -அது ஷைகு பரீத் (ரஹ்) அவர்களின் வாழ்வில் ஒரு பொன்னாளாக இருந்தது - ஷைகு பரீத் (ரஹ்) அவர்களின் பார்வை, அங்கு வந்து தங்கியிருக்கும் காஜா குத்புத்தீன் பக்தியார் காக்கி (ரஹ்) அவர்களின் மீது விழுந்தது. அவர்களின் வணக்கமும் ஒழுக்கமும் அவர்களைப் பெரிதும் கவர, அவர்களே தம் ஆன்மீக ஆசானாக, ஆன்மீக வழிகாட்டி யாக இருக்கத் தகுதி வாய்ந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களின் நெஞ்சத்திலே பூத்தது. அடுத்த கணம் அவர்களை அறியாமல் அவர்களின் கால்கள் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் நின்று தொழுது கொண்டிருந்த இடத்தை நோக்கி இழுத்துச் சென்றன.

தொழுது முடித்ததும் தம் அருகே வீற்றிருந்த இளவலை குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் நோக்கினர். அவர்களின் கூரிய பார்வை, ஷைகு பரீத் (ரஹ்) அவர்களின் நெஞ்சத்தில் ஊடுருவிப் பாய்ந்து, அதில் பூத்திருந்த அவர்களின் எண்ணத்தைப் படம் பிடித்து, அவர்களின் மனக்கண்முன் காட்டியது. தம் ஆன்மீக மாணவராக ஆக அவரே தகுதி வாய்ந்தவர் என்று அடுத்த கணம் எண்ணினார்கள். அவ்வளவு தான். அடுத்தகணம் ஷைகு பரீத் (ரஹ்) அவர்களின் செங்கமலக் கண்கள் குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் அரவிந்தமன்ன பொற்பாதங்களை முத்தமிட்டன. அவர்களின் வாய் தம்மை மாணவராக ஏற்று தீட்சை நல்குமாறு வேண்டி நின்றது.

இதன்பின் மூல்த்தானை விட்டு குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் புறப்பட்ட பொழுது அவர்களுடன் கூடவே ஷைகு ஃபரீத் (ரஹ்) அவர்களும் சென்றார்கள். வழியில் ஹான்ஸியில் அவர்கள் தங்கினர். அங்கு வைத்து ஃபரீத் (ரஹ்) அவர்களுக்கு குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தீட்சை வழங்கிவார்கள். இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 548-ஆம் ஆண்டிலாகும்.

ஹான்ஸியிலிருந்து குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் டில்லி புறப்பட்ட பொழுது, அவர்களுடன் சேர்ந்து ஷைகு ஃபரீத் (ரஹ்) அவர்களும் புறப்படத் தயாரானார்கள். அச்சமயம் 'பாபா ஃபரீத்! நீர் என்னுடன் டில்லி வரவேண்டாம். மூல்த்தானுக்கே திரும்பி, மார்க்கத்தின் வெளிப்படையான கல்விகளைப் படியும். ஏனெனில் அவற்றில் தேர்ச்சியுறாதிருப்பது, ஷைத்தான் பரிகாசம் செய்வதற்கு இடமாகிவிடும். ஆதலின் அவற்றில் தேர்ச்சி அடைந்தபின், அந்தரங்கமான ஆன்மீகக் கல்விகளைப் பயில என்னிடம் வாரும்'' என்று இதமாக எடுத்துரைத்தார்கள் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள்.

எனினும் குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் ஆணையை ஷைகு ஃபரீத் (ரஹ்) அவர்களின் இளம் இதயம் எளிதில் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அவர்களுடன் சேர்ந்து மூன்று மன்ஸில் தொலை, ஷைகு ஃபரீத் (ரஹ்) அவர்களும் வந்தார்கள். இதனைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்ட குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், மீண்டும் தம் மாணவர் பால் திரும்பி ''பாபா ஃபரீத்! திரும்பிச் சென்று நான் கூறிய வண்ணம் செய்து முடித்து என்னிடம் வந்து சேரும்'' என்று சிறிது வற்புறுத்திக் கூறினர்.

அதன்பின் மூல்த்தான் திரும்பிய பாபா ஃபரீத் (ரஹ்) அவர்கள், பின்னர் காண்டஹார் சென்று, அங்கு ஐந்தாண்டுகள் தங்கி உயர்தர மார்க்கக் கல்விகளை எல்லாம் பயின்று, டில்லி மாநகர் வந்து சேர்ந்தார்கள்.* அப்பொழுது அவர்களை ஆரத் தழுவி வரவேற்ற குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் தவமடத்தின் அடுக்களையின் அண்மையில் இருந்த ஓர் அறையில் அவர்களைத் தங்கியிருக்குமாறு பணித்தனர்.

ஆசானின் ஆணையின் படி, அந்த அறையிலேயே தங்கி அகோர தவமிருந்தனர் பாபா ஃபரீத். மற்ற மாணவர்களெல்லாம் தம் ஆசானை அடிக்கடி சென்று சந்தித்து வந்த பொழுது, இவர்களோ அவர்களை மாதம் இருமுறை தான் சந்திக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். அந்த அறையில் தனியே அகோர தவமிருந்து துரும்பாய் மெலிந்துவிட்டனர் பாபா. இச் சமயத்தில் தான் காஜா குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் மட்டுமின்றி, அவர்களின் ஆசான் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களும் அங்கு வந்து அவர்களை ஆசீர்வதித்தனர்.

* அவர்கள் ஏனைய ஊர்களுக்குச் செல்லவில்லையென்றும், அவர்கள் பல ஊர்களுக்குச் சென்று, பல பெரியார்களைச் சந்தித்ததற்கு ஆதாரமில்லை என்றும், கூறப்படுவதால், அவை பற்றி இங்கு குறிப்பிடப் படவில்லை. தம் ஆசான் 'ஹஜ்'ஜு செய்யச் செல்லவில்லை என்று கூறி, அவர்களும் ஹஜ்ஜு செய்ய மக்கா செல்லவில்லை என்றும் கூறப்படு கிறது.



ஒருநாள் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தனியே அமர்ந்திருக்கும் பொழுது, பாபா ஃபரீத் (ரஹ்) அவர்கள், அவர்களை அணுகி, ''ஷைகு அவர்கள் அனுமதியளிப்பின், நான் சில்லா* இருக்க நாடியுள்ளேன்'' என்று வினயமாக எடுத்துரைத்தனர். ''வேண்டாம்; அஃதெல்லாம் வீண் விளம்பரமாகும். நம் சில்சிலாவின் முன்னோர்களெல்லாம், அது போன்று யாதொன்றையும் செய்யவில்லை'' என்று கூறினர் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள். எனினும் மாணவர் விடாது ''விளம்பரத்தை நான் நாடவில்லை என்பது ஷைகு அவர்களுக்கு உள்ளுணர்வின் மூலம் நன்கு தெரிந்திருக்கலாம் தானே'' என்று கூறினர். குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் யாதொன்றும் கூறவில்லை. சற்று நேரம் கழித்து அவர்கள், தம் மாணவரை நோக்கி, ''நீர் விரும்பின் 'சில்லா-யெ-மஃக்கூஸை'ச் செய்யுமே'' என்று கூறினார்கள்.

சில்லா-யெ-மஃக்கூஸ்! இச் சொற்களை பாபா ஃபரீத் (ரஹ்) அவர்கள் இதுவரைக் கேள்வியுற்றதே இல்லை. அதுபற்றிய விவரங்களைத் தம் ஷைகிடம் கேட்டறிய அவர்களுக்குத் துணிவும் ஏற்படவில்லை. எனவே, சற்று நேரம் வாய்பொத்தி வீற்றிருந்த அவர்கள், பின்னர் தம் ஷைகிடம் விடைபெற்று, வெளியே வந்து, ஷைகு பத்ருத்தீன் கஸ்னவி (ரஹ்) அவர்களைச் சந்தித்து, நடந்ததைக் கூறி, '''சில்லா-யெ-மஃகூஸ்' என்றால் என்ன?'' என்று வினவினர். அதுகேட்ட அவர்கள், ''சில்லா- யெ-மஃகூஸ் என்றால், காலில் கயிற்றைக் கட்டி தலைகீழாக ஒரு கிணற்றிற்குள் நாற்பது இரவு அல்லது நாற்பது பகல் கிடந்து தவம் செய்வதாகும்'' என்று விளக்கம் பகர்ந்தனர்.

இதன்பின் பாபா ஃபரித் (ரஹ்) அவர்களின் மூளை வேகமாக வேலை செயயத் துவங்கியது. ஆசான் இட்ட பணியை விரைவில் சிரமேற்றாங்கிச் செயலாற்ற வேண்டுமென்று அவர்களின் ஒவ்வோர் அணுவும், அவர்களைப் பிடர் பிடித்து உந்தியது. சில்லா-யெ-மஃக்கூஸை மேற்கொள்வதற்கு ஏற்ற, பள்ளியோடு கிணறும் சேர்ந்த தனித்த ஓர் இடத்தை அவர்களின் கண்கள் துளாவிக் கொண்டிருந்தன. விளம்பரத்தை அணுவத்தனையும் விரும்பாத அவர்கள், அத்தகு இடத்தைத் தேடித் திரிந்ததில், எவ்வித வியப்புமில்லை. அத்தகு இடம் டில்லியில் கிடைக்காத பொழுது அவர்கள் ஹான்ஸி சென்று, அங்கும் அத்தகு இடத்தைத் தேடித் திரிந்தனர். அங்கும் அவர்களின் முயற்சி பயனற்றுப் போகவே, அவர்கள் பற்பல ஊர்களிலும், அத்தகு இடத்தைத் தேடித்திரிந்து, இறுதியாக 'உச்' என்ற ஊரை வந்தடைந்தனர்.

* சில்லா என்றால், ஆன்மீகப் பரிபக்குவம் அடையப் பெறுவதற்காகத் தனித்து ஓரிடத்தில் அமர்ந்து நாற்பது நாட்கள் தியானத்தில் இருப்பதாகும்.

'உச்' என்ற ஊரின் ஒரு மூலையில் 'மஸ்ஜிதெ-ஹஜ்' என்ற பெயருடன் ஒரு சிறுபள்ளி இருந்தது. அப்பகுதி மனித நடமாட்டம் அதிகம் இல்லாததாக இருந்தது. அப்பள்ளியின் அருகே ஒரு கிணறும் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அப்பள்ளியின் முஅஸ்ஸினாக ஹான்ஸியைச் சேர்ந்த ரஷீதுத்தீன் மினாயீ என்பவர் இருந்தார். அவர் பாபா அவர்களை எதிர்பாரா முறையில் அங்கு கண்டதும், அளவற்ற மகிழ்ச்சியுற்று, அவர்களை இருகை கொண்டும் வரவேற்று உபசரித்தார்.

பாபா அவர்கள் அப்பள்ளியில் மூன்று நாட்கள் தங்கி, அந்த முஅஸ்ஸினுடைய குண நலன்களையும், அவர் தம் இரகசியத்தைக் காக்கும் தகுதியுடையவரா என்பதையும் ஆழ்ந்து கவனித்து வந்தனர். அதன்பின் அவரின் தகுதி பற்றி அவர்களுக்கு ஓரளவு மனநிறைவு ஏற்பட்டபொழுது, ஓரிரவு இஷாத் தொழுகைக்குப் பின் அவரைத் தனியே அழைத்துச் சென்று, தம் உள்ளக்கிடக்கையை அவரிடம் எடுத்தோதினர். அதுகேட்டு முஅஸ்ஸினின் புருவங்கள் வியப்பால் மேலேறின. எனினும், பாபா அவர்களின் மாண்பினை அவர் ஏற்கனவே ஹன்ஸியில் வைத்து நன்கு அறிந்திருந்தாராதாலின், அவர் அவர்களின் திட்டத்திற்கு உடன்பட்டு, கயிறு கொண்டு வந்து, அதனை அவர்களின் காலில் கட்டி, அதன் பின் அக் கயிற்றைக் கிணற்றின் மேல் படர்ந்திருந்த மரக்கிளையில் பிணைத்து, அவர்களைத் தலைகீழாகக் கிணற்றிற்குள் இறக்கினார். இரவு முழுவதும் அந்நிலையிலேயே கிடந்து, இறைவனைத் துதித்துக் கொண்டிருந்தார்கள் பாபா அவர்கள். ஏற்கனவே பேசிய வண்ணம் வைகறைத் தொழுகைக்கு முன் முஅஸ்ஸின் அங்கு வந்து, கயிற்றை இழுத்து பாபா அவர்களைக் கிணற்றிலிருந்து வெளியேற்றினார். கிணற்றிலிருந்து வெளியேறிய அவர்கள் சந்தடி செய்யாமல் பள்ளிவாயிலுக்கு வந்து கூட்டுத் தொழுகையில் கலந்து கொண்டு, தொழுதார்கள். இவ்வாறு நாற்பது இரவுகள் நகர்ந்தன.

இதைப்பற்றிப் பிற்காலத்தில் சையிது முஹம்மது கேசுதராஸ் (ரஹ்) அவர்கள் தம் மாணவர்களிடம் எடுத்துரைத்த பொழுது ''தலைகீழாகக் கிணற்றிற்குள் தொங்கிக் கொண்டு கிடந்தால், வயிற்றிலுள்ள உணவு வாயின் வழியே வெளியே வந்துவிடாதா? இரத்தம் கண்கள் வழியாகவும் மூக்கின் வழியாகவும் வெளியேறாதா?'' என்று மாணவர்கள் வியப்புடன் வினவியபொழுது ''பாபா அவர்களோ, நோன்பு நோற்றும், வணக்கத்தில் ஈடுபட்டும், மெலிந்து துரும்பாகி இருந்த நிலையில், அவர்களின் உடலிலிருந்தும் வயிற்றிலிருந்தும், வெளியேறுவதற்கு இரத்தமும் ஏது? உணவும் ஏது?'' என்று ஒரே வாக்கியத்தில் மறுமொழி பகர்ந்தார்கள் சையிது முஹம்மது கேசுதராஸ் (ரஹ்) அவர்கள்.



உண்மையில் பாபா அவர்கள் மேற்கொண்ட ஆன்மீகப் பயிற்சிகளோ, மிகவும் கடுமையாக இருந்தன. சுவனத்தை விரும்பியோ, நரகத்திற்கு அஞ்சியோ அவர்கள் அவ்விதப் பயிற்சியை மேற்கொள்ளவில்லை. தமக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தடைகளெல்லாம் நீங்கி, அவனை எளிதில் எய்தப் பெறுவதற்கான ஆன்மீகப் பரிபக்குவத்தை அடையப் பெறுவதற்காகவே அவர்கள், அவ்விதப் பயிற்சிகளை மேற்கொண்டார்கள்.*

தம் ஆசான் கூறிய வண்ணம் சில்லா-யெ-மஃக்கூஸை அவர்கள் செய்து முடித்ததோடு, தம் ஆசானின் ஆணைப்படி 'தை' உண்ணா நோன்பையும் அவர்கள் நோற்று வந்தார்கள். அதன்படி அவர்கள் மூன்று நாட்கள் தொடர்ந்து நோன்பு நோற்று வந்தார்கள். ஒவ்வொரு நாளும் நோன்பு திறக்கும் வேளையில் இரண்டு, மூன்று சொட்டுத் தண்ணீரை மட்டும் உட்கொண்டு விட்டு, வேறு எவ்வித உணவும் அருந்தாது வெறுமனே இருந்து விடுவார்கள். மூன்றாவது நாள் நோன்பு திறக்கும் பொழுது, எதிர்பாரா வண்ணம் எங்கிருந்தேனும் உணவுவரின் அதனை உண்பர். இல்லையெனில், இல்லை.

ஒரு தடவை அவர்கள் இவ்வாறு மூன்று நாட்கள் தொடர்ந்து நோன்பு நோற்று, நோன்பு திறந்து வீற்றிருக்கும் பொழுது, ஒரு மனிதர் வந்து அவர்களுக்குச் சில ரொட்டித் துண்டுகளைக் காணிக்கையாக வழங்கினார். அவற்றை அவர்கள் தின்று முடித்த பொழுது அவர்களின் முன்னே ஒரு பறவை தம் அலகால் நாறிப்போன குடல் ஒன்றைக் கொத்திக் கொத்தித் தின்று கொண்டிருப்பதைக் கண்டதும், அவர்களுக்குக் குமட்டல் ஏற்பட்டு, அவர்களின் வயிற்றிலிருந்த ரொட்டித் துண்டுகள் அனைத்தும் ஒன்று கூடப் பாக்கியில்லாது வெளியே வந்து விட்டன.

இச் செய்தியை அவர்கள் தம் ஆசானிடம் வந்து எடுத்துரைத்த பொழுது, ''பாபா! நீர் ஒரு குடிகாரன் கொண்டு வந்து கொடுத்த ரொட்டித் துண்டுகளை உண்டீர். அவை உம் வயிற்றிற்குள் சென்று செரித்து உம் இரத்தத்தோடு இரத்தமாக ஓடாமல், இறைவன் அவற்றை வெளியேற்றி

* ஒரு தடவை அவர்கள், "இறைவனே! என் நோக்கமெல்லாம் உன் அன்பால் தாக்குற வேண்டுமென்பதுதான். நான் வாழ்ந்தால் உன் பாதார விந்தங்களில் வீழ்ந்து துகள் துகளாக நொறுங்கிப் போகவேண்டுமென்பதே என் ஆசை. இம்மையிலும் சரி, மறுமையிலும் சரி, நீயே எனக்கு வேண்டும். உனக்காகவே நான் வாழ்ந்து, உனக்காகவே நான் இறப்பெய்த வேண்டும்" என்ற கருத்தமைந்த கவிதையினைப் பாடிக் கொண்டு, தம் அறையில் அமைதியற்ற நிலையில் உலவவும், பின்னர், சுஜூதில் விழவும், அதன்பின் எழுந்து மீண்டும் இந்தக் கவிதையைக் கூறிய வண்ணம் உலவவும் செய்து, வந்ததைத் தாம் கண்ணுற்றதாக நிஜாமுத்தீன் ஔலியா கூறுகின்றார்கள்.

விட்டான். நீர் மீண்டும் சென்று மூன்று நாட்கள் தொடர்ந்து நோன்பு நோற்பீராக! மூன்றாம் நாளின் இறுதியில் எது உமக்கு மறைவான இடத்திலிருந்து (கைபாக) கிடைக்கிறதோ, அதைக் கொண்டு நோன்பு திறப்பீராக!'' என்று அவர்கள் கூறினார்கள்.

அவ்வாறே பாபா ஃபரீத் (ரஹ்) அவர்கள் தம் இருப்பிடம் மீண்டு, நோன்பு நோற்றனர். மூன்றாம் நாள் முடிவில் அவர்கள் நோன்பு திறந்ததும், அவர்களுக்கு ஏற்பட்ட பலவீனத்திற்கும் பசிக்கும் அளவே இல்லை. அண்மையில் கிடந்த சில கூழாங்கற்களை எடுத்துத் தம் வாயில் போட்டுச் சுவைத்தார்கள். என்ன வியப்பு! அவை சர்க்கரையாய் இனித்தன!! அது ஷைத்தானின் திருவிளையாடலாக இருக்குமோ என்று ஐயுற்ற பாபா ஃபரீத் (ரஹ்) அவர்கள் அவற்றைக் கீழே துப்பி விட்டு, வணக்கத்தில் ஈடுபட்டார்கள். ஆனால், நள்ளிரவில் அவர்களின் வயிறு அவர்களை வெறுமனே விடவில்லை. கத்தரியால் அவர்களின் குடலைக் கத்தரிப்பது போன்று, அவர்களுக்கு அகோரப் பசி ஏற்பட்டு, அவர்களின் வணக்கத்தைக் கலைத்தது. மீண்டும் தம் அருகே கிடந்த கூழாங்கற்களை எடுத்து வாயிலிட்டுச் சுவைத்தார்கள். மீண்டும் அவை சர்க்கரையாய் இனித்தன! மீண்டும் முந்தைய ஐயப்பாடு ஏற்பட்டு, அவர்கள் அவற்றைக் கீழே துப்பிவிட்டு வணக்கத்தில் ஈடுபட்டார்கள். வைகறையில் அவர் களுக்கு மீண்டும் அகோரப் பசி ஏற்பட, இனிமேல் யாதொன்றும் உண்ணாதிருப்பின் வைகறைத் தொழுகையைக் கூட நிறைவேற்ற இயலாது போய்விடுமோ என்று அவர்கள் ஐயுறும் வண்ணம், அவர்களின் நிலை ஆனது. எனவே மீண்டும் அவர்கள் தம் முன் கிடந்த கூழாங் கற்களை எடுத்து வாயிலிட்டுச் சுவைத்தார்கள். மீண்டும் அவை சர்க்கரையாய் இனித்தன!!! இத் தடவை அவர்கள் அவற்றைக் கீழே துப்பாது, சுவைத்துச் சுவைத்து உண்டார்கள். தொழுது முடிந்ததும், அவர்கள் தம் ஆசானை அணுகி, நடந்த செய்தியை எடுத்துரைக்க, அவர்கள் புன்முறுவலுடன் ''நீர் அவற்றைக் கொண்டு நோன்பு திறந்தது அறிந்து மகிழ்ச்சியுறுகிறேன். மறைவான இடத்திலிருந்து (காயிபாக) கிடைக்கக் கூடிய அனைத்தும் நன்மை பயப்பனவேயாகும். நீரும் சர்க்கரை போன்று இனிய இயல்புடையவராக விளங்குவீர்'' என்று அமுத வாய்விண்டனர். இதிலிருந்து அவர்களுக்கு 'பீரே ஷகர்பார்' என்றும், 'கஞ்செ-ஷகர்' என்றும் பட்டப் பெயர்கள் ஏற்பட்டன என்று அமீர் குர்து கூறுகிறார்.

நோன்பு நோற்பது தன்னடக்கத்தின் ஒரு பாதியென்றும், தன்னடக்க மானது இறை நம்பிக்கையின் ஒரு பாதி என்றும், இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள், தம்முடைய 'இஹ்யா'வில் எடுத்துரைக்கிறார்கள். இதனை நன்கு உணர்ந்த பாபா அவர்கள், தாவூத் (அலை) அவர்கள் போன்று



ரோஸா-யெ-தாவூதியை, அதாவது ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்பதை வழக்கமாக மேற்கொண்டிருந்தனர். ஆண்டு முழுவதும் தொடர்ந்து நோற்பதைவிட, இதுவே கடினமானதாகும். ஏனெனில் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நோற்பதால், அவ் வழக்கத்திற்கு ஒருவரின் வயிறும் உடலும் சில நாட்களில் ஒத்துப் போகின்றன. ஆனால் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்பது என்பது, ஒரு நாள் செய்த முறையை மறுநாள் மாற்றியமைப்பதாக இருப்பதால், வயிறும் உடலும் ஒருங்கு சேர்ந்து புரட்சிக் கொடியைத் தூக்கித் துன்பம் இழைத்து வந்தன. எனினும், அவை தரும் துன்பத்தை அவர்கள் சிறிதேனும் பொருட்படுத்தாது அவ் வழக்கத்தையே சிறிது காலம், அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டிருந் தார்கள்.

இவ்வாறு பற்பல ஆன்மீகப் பயிற்சிகள் மூலம் தம் மாணவர் பாபா அவர்களைப் புடம் போட்ட பொன்னே போல் ஆக்கினர் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள். பாபா அவர்களின் வணக்கமும், பண்பும் அவர்களின் புகழ் மணத்தை எங்கணும் பரப்பின. எனவே, அவர்களைத் தமக்காக 'துஆ'ச் செய்யுமாறு வேண்டியும், அவர்களிடம் தஃவீஸ் (தாயத்து) எழுதிப் பெற்றுச் செல்வதற்காகவும், மக்கள் அவர்களிடம் அலை அலையாக வந்து கொண்டிருந்தனர். இதன் காரணமாக அவர்களின் வணக்கங்கள் பாதிக்கப் பட்டன. இதனை அவர்கள் தம் ஆசானிடம் கூறி முறையிட்ட பொழுது, ''பாபா! இஃது உம் கையில் இல்லை. நாமோ இறைவனின் கைக் கருவிகளே அன்றி வேறில்லை. நீர் எழுதும் தஃவீஸில் அல்லாஹ்வின் திருப்பெயரே அன்றி வேறில்லை. அவன்தான் நலன் நல்குபவன். ஆதலின் எழுதிக் கொண்டே இரும்'' என்று கூறினர் ஆசான்.

சிலகாலம் கழித்து ஒருநாள் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், தம் ஆன்மீக மாணவரை நோக்கி, ''பாபா! நீர் ஹான்ஸி சென்று, ஆன்மீக முயற்சியில் ஈடுபட்டு வாழ்வீராக!'' என்று அருளுரை பகர்ந்தார்கள்.

ஹான்ஸி என்பது ஹிஸார் மாவட்டத்திலுள்ள ஒரு பழம்பதியாகும். அங்கு பல போர்கள் நடந்துள்ளன. அது பல அரசர்களின் கையில் மாறி, மாறி இருந்து வந்துள்ளது. அது ஓர் இராணுவ கேந்திரமாக இருந்ததால், பொதுமக்கள் அங்கு அதிகமாக வரமாட்டார்கள் என்றும், எனவே அங்கு தாம் அமைதியாக அமர்ந்து இறை வழிபாட்டில் ஈடுபட்டிருக்கலா மென்றும் பாபா அவர்கள் எண்ணிக் கொண்டு, அங்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால், அவர்கள் எண்ணி வந்ததற்கு மாறாக அங்கு சம்பவங்கள் நிகழ்ந்தன.

பாபா அவர்கள் ஹான்ஸி வந்து வாழத் துவங்கிய சில நாட்களில் பிரபல சூஃபியும், பேச்சாளரும், குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் ஆன்மீக மாணவர்களில் ஒருவருமான மௌலானா நூர் துர்க் என்பவர் அங்கு வந்தார். அவர் தர்வேஷ்களுடைய வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். அவரால் விடுதலையளிக்கப்பட்ட அடிமை ஒருவன், அவர் மீது தாம் கொண்ட பேரபிமானத்தின் காரணமாக, ஒவ்வொரு நாளும் தம் ஊதியத்தி லிருந்து ஒரு 'தங்கா' நாணயத்தை அவருக்குக் காணிக்கையாக வழங்கி வந்தான். அதைக் கொண்டே அவர் தம் வாழ்க்கையை எளிய முறையில் நடத்தி வந்தார். அவரின் வறிய நிலையைக் கண்ட சுல்தானா ரஸியா ஒரு தடவை அவருக்குச் சில பொன் நாணயங்களை அன்பளிப்பாக அனுப்பி வைத்த பொழுது. அவற்றை அவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அவரைப் பற்றி நிஜாமுத்தீன் ஔலியா பிற்காலத்தில் குறிப்பிடும் பொழுது, 'மழை நீரைவிடத் தூயவர்' என்று கூறியுள்ளது, அவரின் மாண்பினை இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கும் மணிவாசகமாகும்.

சிறந்த பேச்சாளரான மௌலானா நூர் துர்க்கின் பேச்சைக் கேட்க ஹான்ஸியே திரண்டு சென்றது. அவருடைய வரவைப் பற்றிக் கேள்வி யுற்ற பாபா அவர்களும், அவருடைய பேச்சைக் கேட்பதற்காகச் சென்றனர். அவர்களைக் கண்டதும், மௌலானா நூர் துர்க், அங்கு குழுமி யிருந்த மக்களை நோக்கி, "முஸ்லிம்களே! உண்மைப் பேச்சின் திருஉரு இதோ வந்து கொண்டிருக்கிறது" என்று கூறினார். அவ்வளவுதான். அங்கு குழுமியிருந்த அனைவருடைய கண்களும், பாபா அவர்களையே நோக்கின. அத்துடன் அவர் நின்றாரில்லை. பாபா அவர்களின் மாண்பினை வானளாவப் புகழ்ந்து வாயார்ந்தார். அதுகேட்டு அனை வருடைய வாய்களும் வியப்பால் பிளந்தன. "ஆ! இத்தகு மாண்பாளரா இவர்கள். இவர்களைச் சாமான்யர் என்றல்லவோ இதுகாறும் நாம் கருதிக் கொண்டிருந்தோம். என்ன அறிவீனம்! என்ன மதியீனம்!!" என்று அவர்கள் தங்களையே தாங்கள் நொந்து கொண்டார்கள்.

இதன்பின் என்ன? இச் செய்தி நொடியில் காட்டுத் தீ போல் ஹான்ஸி யிலும், அதன் சூழலிலும் பரவலாயிற்று. அமைதியை நாடி ஹான்ஸி வந்த அவர்களுக்கு, டில்லி நிலையைப் பரிகசிக்கும் வகையில், ஹான்ஸி நிலை ஆனது. மக்கள் வெள்ளம் பாபா அவர்களின் இருப்பிடத்தை இரவு பகலாகச் சூழ்ந்து நின்றது.

ஹான்ஸியில் பாபா அவர்களின் கரம்பிடித்து, 'பைஅத்' பெற்றவர் களில் முக்கியமானவர் ஷைகு ஜமாலுத்தீன் என்பவராவார். துவக்கத்தில் அவர் ஹான்ஸியின் கதீப் ஆகப் பணியாற்றி வந்தார். தம் சீடர்கள் அரசாங்க ஊழியத்தில் இருப்பதை பாபா அவர்கள் விரும்பாததன் காரணமாக,



அவர் அப்பதவியைத் துறந்து பாபா அவர்களின் ஊழியத்திலேயே இருந்து வந்தார். பாபா அவர்கள் அவர் மீது கொண்ட அன்போ, அளவிறந்த தாகும். "ஜமால் நம்முடைய ஜமால் (அழகு)" என்று அவர்கள் அவரைப் பற்றி அடிக்கடி கூறி வந்தார்கள்.

இவரின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்ற ஷைகு பஹாவுத்தீன் ஜகரிய்யா (ரஹ்) அவர்கள், ஷைகு ஜமாலுத்தீனைத் தம்மிடம் அனுப்பி வைப்பின், அவருக்குப் பகரமாகத் தம்முடைய சீடர்கள் அனைவரையும் ஹான்ஸிக்கு அனுப்பி வைப்பதாக பாபா (ரஹ்) அவர்களுக்கு மடல் தீட்டிய பொழுது, "மால் (சொத்து) பற்றியே பரிவர்த்தனை செய்து கொள்ள இயலுமேயன்றி, ஜமால் (அழகு) பற்றிய வரையில் பரிவர்த்தனை செய்து கொள்ள இயலாதே" என்று பதில் வரைந்தனர் பாபா அவர்கள். பாபா அவர்கள், தம் சீடர்களில் எவரையும் தம்முடைய கலீஃபாவாக ஆக்கிக் கிலாஃபத் நாமா எழுதிக் கொடுப்பின், அதனை ஷைகு ஜமாலுத்தீனிடமும் காட்டி, அவருடைய ஒப்புதலையும் பெறுமாறு கூறுவர் பாபா. அவ்வாறே அவர்கள் ஷைகு நிஜாமுத்தீன் ஔலியாவிடமும் கூறினர். ஷைகு அலாவுத்தீன் ஸாபி (ரஹ்) அவர் களிடமும் கூறினர்.

பாபா அவர்களிடம் கிலாஃபத் நாமாவைப் பெற்ற அலாவுத்தீன் ஸாபி (ரஹ்) அவர்கள், அதனை ஷைகு ஜமாலுத்தீனிடம் ஒப்புதல் பெறுவதற்காக எடுத்துச் சென்ற பொழுது, அதனைக் கிழித்தெறிந்து விட்டார் ஷைகு ஜமாலுத்தீன். இதனை அலாவுத்தீன் ஸாபி (ரஹ்) அவர்கள் தம் ஆசானிடம் வந்து எடுத்துரைத்த பொழுது, "நான் என் செய்வது? ஜமால் கிழித்தெறிந்ததை என்னால் ஒன்று சேர்க்க இயலாதே" என்று கூறி விட்டார்கள் பாபா அவர்கள்.

பாபா அவர்கள் ஹான்ஸியில் பன்னிரண்டு ஆண்டுகாலமோ, பத்தொன்பது ஆண்டு காலமோ தங்கி வாழ்ந்தார்கள் என்றால், அதற்கு மூலகாரணம், அவர்கள் ஷைகு ஜமாலுத்தீன் மீது கொண்ட அன்பே யாகும். ஒரு தடவை பாபா அவர்கள் ஷைகு ஜமாலுத்தீனை நோக்கி "என் இதயம் தங்களை 'தவாப்' செய்ய (சுற்றி வர) விரும்புகிறது" என்று கூடக் கூறியுள்ளார்கள்.

பாபா அவர்களின் ஹான்ஸி வாழ்க்கை கடுமையான தவ வாழ்க்கையாகவே இருந்தது. ஒரு தடவை ஷைகு அலீ என்பவர் மூல்த்தானிலிருந்து அவர்களைப் பார்க்க வந்திருந்தார். இருவரும் அமர்ந்து உணவுண்டு கொண்டிருந்த பொழுது, 'ஷைகு அவர்கள் தொடர்ந்து நோன்பு நோற்று வந்தால், அவர்களின் மாண்பினுக்குப் பொருத்தமாக இருக்குமே' என்று எண்ணினார் இதனை உள்ளுணர்வால்

விளங்கிக் கொண்ட பாபா அவர்கள், அக்கணமே தங்களின் கையை உணவுத் தட்டிலிருந்து எடுத்துவிட்டு, ''ஷைகு அலீ! நான் இன்றிருந்து தொடர்ந்து நோன்பு நோற்று வருவேன்'' என்று கூறினர். அன்றிருந்து ஆண்டில் நோன்பு நோற்க அனுமதிக்கப்படாத ஐந்து நாட்களைத் தவிர்த்து, ஏனைய நாட்களில் நோன்பு நோற்று வருவதை அவர்கள் தங்களின் நீங்காத வழக்கமாகக் கொண்டனர்.

இத்தகு தவ வாழ்க்கையின் இடையே அவர்கள் சமயா சமயங்களில் டில்லி சென்று, தம் ஆன்மீக ஆசானைக் கண்டு வந்தார்கள். அவர்களின் ஆன்மீக ஆசான் இறந்தபின், டில்லி வந்த அவர்கள், சில நாட்களே அங்கு தங்கி இருந்தனர். அதற்குள் அவர்களுக்கு டில்லி வாழ்க்கையே கசந்து விட்டது. அங்குள்ள சூழல் அவர்களுக்குப் பிடிக்காததால், அங்குள்ள பொறுப்புகளை ஷைகு பத்ருத்தீன் கஸ்னவீயிடம் ஒப்படைத்துவிட்டு, அவர்கள் ஹான்ஸி மீண்டார்கள்.

குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் நிர்யாணமடைந்த சில மாதங்களில் சுல்தான் அல்தமிஷூம் இவ் உலகு நீத்தார். அதன்பின் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பில், ஒவ்வொரு துருக்கியப் பெருமகனும், தம் நிலையை வலுப்படுத்திக் கொள்ள, ஒவ்வொரு ஷைகின் துணையை நாடினர். அவ்விதம் துணையை நாடியவர்களில், கருவூலக் காவலர் மலிக் நிஜாமுத்தீன் ஹரித்தஹ்தாரும் ஒருவர். அவர் ஷைகு பத்ருத்தீன் கஸ்னவீயின் உதவி வேண்டி அவரை அணுகி, அவருக்காக ஒரு தவமடத்தையும் நிர்மாணித்துக் கொடுத்ததோடு, அதன் செலவினங்கள் அனைத்தையும் அவரே ஏற்று நடத்தி வந்தார்.

திடீரென அரசாங்கம் அவர் மீது ஊழல் குற்றம் சாட்டி, அவரைக் காராக்கிரஹத்தில் அடைத்தது. அவர் நிர்மாணித்த தவமடமும் கவனிப் பாரற்றுக் கிடந்தது. ஷைகு பத்ருத்தீன் கஸ்னவீயின் மதிப்பும் சீர் குலைந்து சின்னா பின்னமாகியது, என் செய்வதென அறியாது விழித்த அவர், பாபா அவர்களுக்குப் பின் வருமாறு மடல் தீட்டினார்.

''அரசாங்க ஊழியர்களில் ஒருவர் எனக்காக ஒரு கான்காஹ்வை நிர்மாணித்து தர்வேஷ்களை ஆதரித்து அரவணைத்து வந்தார். இப் பொழுது அரசாங்கம் அவர் மீது ஊழல் குற்றம் சாட்டி, அவரைக் கைது செய்துள்ளது. அவர் விரைவில் விடுதலை பெறவும், கான்காஹ் முன்பு போல் ஒழுங்காக நடந்து வரவும் இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டிக் கொள்கிறேன்.''

இம்மடல் கண்டதும் பாபா அவர்கள் பெரிதும் வருத்தமுற்றவர் களாய், ''எவர் தம் ஆசானின் கொள்கைகளைச் சரியாகப் பின்பற்ற



வில்லையோ, அவர் இத்தகு துன்பம், துயரங்களுக்கு ஆளாவதில் வியப் பில்லை. தாங்கள் செய்தது போன்று, நம்முடைய ஆசான்களில் எவர் தமக்கென ஒரு கான்காஹ்வை நிர்மாணித்து அங்கு வாழ்ந்து வந்தார்? நம்முடைய ஆசானாகிய ஷைகு குத்புத்தீன் (ரஹ்) அவர்களோ, அவர்களின் ஆசானாகிய காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களோ, அவ்விதம் செய்து முரீதுக் கடையைத் திறந்து வைக்கவில்லையே. அவர்கள் எங்கு சென்ற பொழுதும், தங்களைப் பொதுமக்களின் கண்களிலிருந்து மறைத்துக் கொள்ளவல்லவோ படாத பாடுபட்டார்கள்'' என்று பதில் வரைந்தார்கள்.

உண்மையில் பாபா அவர்களும், தங்களின் சில்சிலா பாரம்பரியத்திற் கேற்ப, தங்களின் மாண்பினை மறைத்துக் கொள்ள விரும்பிய போதினும், மௌலானா நூர் துர்க் அவர்கள் மீது பொழிந்த-அவர்களே பிற்காலத்தில் கூறிய வண்ணம், அரசர்கள் மீதும் பொழியப்படாத அத்தகு புகழ் மொழி களால் அவர்களின் புகழ் நாலா பக்கங்களிலும் பரவ, மக்கள் அவர்களைத் தேனை ஈ மொய்ப்பது போன்று மொய்த்துக் கொண்டிருந்தார்கள். எனவே அவர்கள், ஹான்ஸியை விட்டு நீங்கித் தம் பிறந்த ஊராகிய கஹ்த்வால் சென்று, அங்குச் சில காலம் தங்கி இருந்தார்கள். அங்கும் அவர்களைக் காண வந்த மக்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகமாகவே, அவர்கள் அதை விட்டு நீங்கி, அஜூதன் என்ற இடத்தில் போய்க் குடியேறினர்.

அஜூதன் என்பது ஒரு பழமையான ஊராக இருந்தது. டேரா காஸிகானிலிருந்தும், டேரா இஸ்மாயீல் கானிலிருந்தும் வரும் சாலைகள் சந்திக்கும் மத்திய நிலையமாக அது இருந்தது. அது காடுகளால் சூழப் பட்டிருந்தது. அக்காடுகளில் கொடிய வனவிலங்குகளும், பாம்புகளும் நிறைந்திருந்தன. அங்கு வாழ்ந்து வந்தவர்களோ, கல்லையும் மரத்தையும் கடவுளென வணங்கும் மூட நம்பிக்கை மிகுந்தவர்களாய் இருந்தார்கள்.

அங்கு சென்ற பாபா அவர்கள், ஊருக்கு வெளியே உள்ள காட்டில் ஒரு மரத்தடியில் தம் போர்வையை விரித்து, அதன் மீது தனிமையில் மோனத் தியானத்தில் இருந்தார்கள். இவ்வாறு சில காலம் இருந்து ஆன்மீகப் பரிபக்குவம் எய்தப் பெற்ற பின், மக்கள் தம்மிடம் வர அவர்கள் அனுமதியளித்தனர். அப்பொழுதும் அவர்கள் கூறியது என்னவென்றால், ''ஒருவர் பின் ஒருவராக வாருங்கள். நான் உங்கள் ஒவ்வொருவருடைய பிரச்சினைகளையும் கவனித்து ஆவன செய்கிறேன்'' என்பதாகவே இருந்தது. எனினும் மக்கள் தாம் கும்பல் கும்பலாகக் கூட்டம் கூட்டமாக அவர்களைக் காண வந்தார்கள்.

அஜூதன் வந்ததும், அவர்கள் செய்த முதல் வேலை தம் இளவல் ஷைகு நஜீபுத்தீன் முதவக்கிலுக்குக் கடிதம் எழுதித் தம் வயோதிக

அன்னையைக் கஹ்த்வாலிலிருந்து அஜோதன் அழைத்து வர ஏற்பாடு செய்ததேயாகும். அவரின் இளவலோ, டில்லியில் ஒரு துருக்கியப் பிரமுகர் நிர்மாணித்த பள்ளியில் இமாமாகப் பணிபுரிந்து வந்தார். அந்தப் பிரமுகர் தம் மகளின் திருமணத்திற்கு ஓரிலட்சம் ஜித்தால் நாணயங்களைச் செலவழித்ததைக் கண்டு அவர் தம் வெறுப்பை வெளியிடவே, அவரை வேலையிலிருந்து நீக்கினார் அந்தத் துருக்கி பிரமுகர்.

வேலையின்றி இருந்த அவர், தம் தமயனாரின் வேண்டுகோளின்படி கஹ்த்வால் சென்று, தம் அன்னையை ஒரு புரவி மீது ஏற்றி அஜோதன் அழைத்து வந்த பொழுது, கானகத்தின் நடுவே அன்னைக்குத் தாகவிடாய் ஏற்பட அன்னையைப் புரவியிலிருந்து இறக்கி, ஒரு மரத்தின் நிழலில் அமரச் செய்துவிட்டு, புரவி இவர்ந்து தண்ணீர் தேடி அங்குமிங்கும் அலைந்து திரிந்தார். இறுதியாக, ஒரு நீர்த் தேக்கத்தைக் கண்டு தண்ணீர் அள்ளிக் கொண்டு வந்த பொழுது, அன்னையைக் காணோம். அங்கு தேடினார்; இங்கு தேடினார். எங்கும் காணவில்லை. அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. எனினும், இறைவன் விட்ட விதிக்குத் தலைசாய்த்துத் தம் அண்ணனிடம் வந்து வழியில் நடந்ததை எடுத்துரைத்த பொழுது, பாபா அவர்களின் உள்ளம் செந்நீரைச் சிந்தியது. தம் அன்னையை ஏதோ வனவிலங்குகள் தூக்கிச் சென்றிருக்க வேண்டுமென்று கருதிய அவர்கள் தம் அன்னையின் ஆன்ம நலனிற்காக இறைவனிடம் இறைஞ்சினார்கள்.

இது நிகழ்ந்து சில காலத்திற்குப்பின் ஷைகு நஜீபுத்தீன் இக்கானகத்தைக் கடந்து செல்ல நேர்ந்த பொழுது இறைவனைத் தொழுது தம் அன்னையின் இறப்பைப் பற்றிய இரகசியத்தைத் தமக்கு வெளியாக்கித் தருமாறு இறைஞ்சிய பொழுது, அங்கு ஓரிடத்தில் எலும்புகள் குவிந்து கிடப்பதைக் கண்டனர். அவை தம் அன்னையின் எலும்புகளாகத் தாம் இருக்க வேண்டுமென்று எண்ணிய அவர், அவற்றை ஒரு பையில் போட்டு, தம் அண்ணன் பால் எடுத்து வந்தார். அந்தப் பையைத் தம் தொழுகை விரிப்பின் மீது வைக்குமாறு பணித்தனர் தமையர். ஆனால், பின்னர் அதனைத் திறந்து பார்த்த பொழுது, அதில் ஒன்றுமே இல்லாதிருப்பதைக் கண்டு, அங்கிருந்தோர் அனைவருக்கும் ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

அஜோதனில் பள்ளியின் அண்மையில் அமைக்கப்பட்ட ஒரு சிறு குடிலில் தம் குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்த பாபா ஃபரீத் (ரஹ்) அவர்கள் ஏழ்மையில் இன்பம் கண்டார்கள்.

நாளாக, ஆக அவர்களின் குடும்பமும் பெருகி, அவர்களின் மக்களும் பெரியவர்களான பொழுது அவர்கள் வாழ்ந்து வந்த மண்குடில் போதாது போகவே, அவர்கள் தம் மக்களுக்கென ஒரு சிறு வீட்டைக் கட்டிக் கொடுத்துவிட்டு அவர்கள் மண்குடியில் வாழ்ந்து வந்தார்கள். பின்னர் பாபா அவர்களின் அபிமானிகளில் சிலர், அவர்களின் மக்கள் மூலம் அவர்களின் அனுமதி பெற்று, அவர்களின் மக்கள் வாழ்ந்து வந்த வீட்டைச் சுடாத செங்கல்லால் கட்டிக் கொடுத்தனர். பின்னர் சிலர் அவர்களிடம் வந்து, அவர்கள் வாழ்ந்து வந்த சிறு குடிலை இடித்துவிட்டுச் சுட்ட செங்கல்லால் கட்டடம் எழுப்பித் தருவதாகக் கூறிய பொழுது, ''மஸ்லூத் செங்கல் மீது செங்கல்லை வைக்கமாட்டார்'' என்று ஒரே வாக்கியத்தில் அதற்கு மறுப்புக் கூறிவிட்டனர் பாபா.



பாபா அவர்கள் இரண்டு அல்லது மூன்று மனைவியரை மணமுடித்து வாழ்ந்தனர். அவர்கள் தம் மனைவியரிடையே எவ்வித வேறுபாடும் காட்டாது, அவர்களை ஒரே விதமாக நடத்தி வந்தனர். அவர்களின் இல்லத்தில் இல்லாமை நீங்காது குடிகொண்டிருந்தது. அதன் காரணமாக அவர்களின் குடும்பத்தினர் அடிக்கடி பசியாலும் பட்டினியாலும் வருந்தினர். அவர்களின் பணிப்பெண், அவர்களிடம் வந்து ''காஜா! தங்களின் மகன் இரண்டு நாட்களாக உண்ண உணவின்றி பட்டினி கிடக்கிறார், தங்களின் இந்த மனைவி உணவுண்டு இரண்டு நாட்களாகி விட்டன'' என்று கூறுவாள். இந்த அவலக் கதைகளெல்லாம் தம் உள்ள அமைதியைக் கெடுக்க அவர்கள் அனுமதியாது மோனத் தியானத்தில் வீற்றிருப்பர்.

ஒருநாள் அவர்களின் மனைவியரில் ஒருவர் அவர்களிடம் வந்து, ''காஜா! என் மகன் பட்டினியால் சாகக் கிடக்கிறான். அவனுடைய உயிர் சிறிது சிறிதாகப் போய்க் கொண்டிருக்கிறது'' என்று அழுது கொண்டு கூறிய பொழுது, அதனால் தியானம் கலையப்பட்ட அவர்கள் சற்றுச் சினத்துடன் தலையை உயர்த்தியவர்களாய், ''இதுபற்றி ஏழை மஸ்லூதால் யாது செய்ய இயலும்? அல்லாஹ்வின் நாட்டமும் அவ்விதமே இருந்து அவன் இறந்துவிடின் அவனை எடுத்து நல்லடக்கம் செய்துவிட்டுவா'' என்று கூறினார்கள்.

மற்றொரு நாள் பாட்டியாலியிலிருந்து ஒருவர் பாபா அவர்களைக் காணவந்து ''தங்களின் அன்புத் திருமகன் நிஜாமுத்தீன் தங்களுக்கு 'ஸலாம்' கூறச் சொன்னார்'' என்று இயம்பினார். ஆழ்ந்த தியானத்திலிருந்து அப்பொழுதுதான் தியானம் கலையப் பெற்ற அவர்கள், அவர் குறிப்பிட்ட நபரை விளங்கிக் கொள்ளாது 'எவர் எனக்கு ஸலாம் கூறச் சொன்னார்? அவரை எனக்கு விளங்கவில்லையே' என்று திரும்பத் திரும்பக் கூறினார்கள். வந்தவரின் பாடோ பரிதாபகரமாகப் போய் விட்டது. தங்களின் அருமை மகன் நிஜாமுத்தீன் தான் தங்களுக்கு ஸலாம்

கூறிவிட்டார் என்று பெரிதும் சிரமப்பட்டு அவர்களுக்கு விளக்க வேண்டியதாகிவிட்டது.

இந்நிகழ்ச்சிகளெல்லாம் அவர்கள் தம்மை மறந்த நிலையில் எத்துணை ஆழமாகத் தியானத்தில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதைக் காட்டுவதற்காகக் குறிப்பிடப்படுகின்றனவே அன்றி இவற்றிலிருந்து, அவர்கள் குடும்பப் பற்று, பாசம் அற்றவர்களாக இருந்தனர் என்று கொள்வதற்கில்லை, ''கடந்த ஞானியும் மறப்பரோ தம் மக்கள் மேல் காதல்'' என்பதை மெய்ப்பிக்கும் முறையில், அவர்கள் தம் மனைவி, மக்களைப் பெரிதும் நேசித்தனர்.

ஒரு தடவை அவர்கள் தம் படுக்கையில் அமர்ந்திருக்கும் பொழுது, அவர்களின் சின்னஞ்சிறு பேரன் அலாவுத்தீன் அவர்களிடம் வந்த பொழுது, தம் வாயிலிருந்து சிறிதளவு வெற்றிலைக் குதப்பலை எடுத்துத் தம் பேரனின் பிஞ்சு வாயில் வைத்து, 'தின்னு! தின்னு!!' என்று கூறினர். அதன்பின் எழுந்து சென்று, 'உளூ'ச் செய்து விட்டுத் தொழ வந்த பொழுது தம் தொழுகை விரிப்பின் மீது தம் அருமைப் பேரன் விளையாடிக் கொண் டிருப்பதைக் கண்டதும், அச் சிறுவரை அத் தொழுகை விரிப்பிலிருந்தும் அப்புறப்படுத்த அவர்களின் சீடர்களில் ஒருவரான ஈஸா முன் பாய்ந்த பொழுது, ''ஈஸா! குழந்தையை ஒன்றும் செய்யவேண்டாம். அது அங்கு நின்று விளையாடட்டும்'' என்று மொழிந்தனர் பாபா.

துன்பச் சூழலில் சிறிதளவு இன்பத்தை நுகர்ந்தவர்களாக அவர்கள், அஜுதனில் வாழ்ந்து வந்த போதினும், அவர்களின் புகழ் நாட்டின் நாலாபக்கங்களிலும் பரவி, காந்தம் இரும்பை ஈர்ப்பது போன்று மக்களை அவர்கள் பால் கூட்டம் கூட்டமாக ஈர்த்து நிற்பதைக் கண்டு, அவ் ஊர்ப் பிரமுகர்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும், காஜி சாஹிபுக்கும் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சிக்கு அளவில்லை. அவர்கள் பாபா அவர்களுக்கு மறைமுகமாக இழைத்த துன்பங்களும், தொல்லைகளும் அளவில்லை. அவற்றையெல்லாம் பொறுமையின் புகலிடமான அம்மேதகை பொருட் படுத்தாது வாழ்ந்து வருவதைக் கண்டு, பெரிதும் எரிச்சலுற்ற காஜி சாஹிப், மூல்த்தான் சென்று அங்குள்ள உலமாப் பெருமக்களைச் சந்தித்து ''எங்கள் ஊருக்கு ஒருவர் வந்து பள்ளியின் அண்மையில் குடில் எழுப்பி வாழ்கின்றார். எப்பொழுது பார்த்தாலும் ஒரே பாட்டும் ஆட்டமும் தாம். அவரைப் பற்றித் தங்களின் கருத்து யாது?'' என்று வினயமாக வினவினார்.

அதுகேட்ட உலமாப் பெருமக்கள், தங்களின் கருத்தை அவசரப்பட்டு அள்ளித் தெளித்துவிடா வண்ணம், மிகவும் எச்சரிக்கையோடு ''யார் அவர்?'' என்று வினவினர்.



''அவர், தாம் பாபா என்று கூறிக் கொள்கிறார்களே, அவர்'' என்றார் காஜி சாஹிப்.

'பாபா' என்ற பெயரைக் கேட்டதும் உலமாப் பெருமக்களெல்லாம் தங்களின் காதுகளைக் கைகளால் பொத்தி ''இறைவன் எங்களை மன்னிப்பானாக! மாபெரும் இறைநேசச் செல்வர் பாபா அவர்களைப் பற்றியா எங்களிடம் குறை கூறி ஃபத்வா பெற வந்தீர். அவர்களுக்கு எதிராக ஒரு சிறு விரலையேனும் அசைக்க எங்களில் எவருக்கு ஆற்றல் உள்ளது? சென்றுவாரும்'' என்று கூறி அவரை அனுப்பி வைத்தனர். மூக்குடைந்து முக்காடிட்ட வண்ணம் அஜுதன் திரும்பிய அவர், பாபா அவர்களை ஒழித்துக் கட்டிவிட்டே மறுவேலை பார்ப்பது என்ற எண்ணத்துடன் அவர்களைக் கொல்லச் சதி சூழ்ந்தார்.

இதன்பின் நடந்தவற்றை, பாபா அவர்களின் ஆன்மீக மாணவர் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் இதோ கூறுகின்றார்கள். நாமும் கேட்போம்.

''ஒருநாள் ஷைகுல் இஸ்லாம் ஃபரீதுத்தீன் அவர்கள் வைகறைத் தொழுகை தொழுது விட்டுத் தம் தலையை சஜ்தாவில் வைத்த வண்ணம் இருந்தனர். இவ்வாறு அவர்கள் அடிக்கடி சிறிது நேரம் இருப்பது வழக்கம். அன்று கடுமையான குளிராக இருந்ததால் அவர்கள் மீது ஒரு போர்வை போர்த்தப்பட்டது. என்னைத் தவிர வேறு எப் பணியாளரும் அப்பொழுது அங்கு இல்லை. ஒரு மனிதன் திடீரென அங்கு வந்து உரத்த சப்தமிட்டு 'ஸலாம்' கூறினான். அதன் காரணமாக ஷைகு அவர்களின் தியானம் கலைந்தது. எனினும் சஜ்தா நிலையில் இருந்த வண்ணமே-போர்வையும் அவர்கள் மீது கலையாது கிடந்தது. 'இங்கே யார் உள்ளார்' என்றனர். 'நான் உள்ளேன்' என்று பதிலிறுத்தேன். ஷைகு அவர்கள் கூறினார்கள், ''ஒரு துருக்கியன் வந்துள்ளான். அவன் நடுத்தர உயரத்தினன். இலேசான மஞ்சள் நிறத்தினன்'' என்று. நான் அங்கு நின்று கொண்டிருந்த மனிதனை ஏறிட்டுப் பார்த்தேன். ஆம்; அவன் அவ்விதமே இருந்தான். ''ஆம்; அவன் தாங்கள் கூறுவது போன்றே இருக்கிறான்'' என்று நான் பதிலிறுத்தேன். பின்னர் ஷைகு அவர்கள் வினவினார்கள்: ''அவன் தன் மார்பில் சங்கிலியைப் பூண்டுள்ளானா?'' என்று. நான் அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு ''ஆம்'' என்றேன். மீண்டும் அவர்கள் வினவினார்கள் ''அவன் காதுகளில் ஏதேனும் அணிந்துள்ளானா?'' என்று. நான் மறுபடியும் அவனை உற்று நோக்கிவிட்டு ''ஆம்; அவன் தன் காதுகளில் தோடு அணிந்துள்ளான்'' என்று மறுமொழி பகர்ந்தேன். அவனை நான் ஏறிட்டுப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும் அவனுடைய முகம் வெளுத்தது. அப்பொழுது ஷைகு அவர்கள் சஜ்தாவில் இருந்த

வண்ணமே, ''அவனைப் போகச் சொல்லும்; நின்றால் அவமானமுற நேரிடும்'' என்று கூறும்'' என்றனர். அதுகேட்ட அவன் அவ்விடத்தை விட்டும் சிட்டாய்ப் பறந்து விட்டான்.

தம் சதி தோல்வியுற்றது கண்ட காஜி சாஹிப், பாபா அவர்களின் மக்கள் மீது தம் வெங்கணைகளைத் தொடுக்கலானார். அவர்களுக்கு அவர் செய்த கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன. அவற்றினைத் தாங்க இயலாது அவர்கள், தம் தந்தையாரிடம் முறையிட்ட பொழுது, ''சற்றுப் பொறுங்கள். விரைவில் அவர்கள் ஒழிந்து போவார்கள்'' என்றனர் பாபா. அவ்வாறே சின்னாட்களில் பாபா அவர்களின் விரோதிகள் சிதறுண்டு நாலா பக்கங்களிலும் வீசி எறியப்பட்டார்கள்.

புதிதாக நியமிக்கப்பட்டு அஜூதன் வந்த காஜியோ முன்னவரின் அடிச் சுவட்டைப் பின்பற்றி, பாபா அவர்களுக்கு சொல்லொணா இடுக்கண்கள் விளைவிக்கலானார்.

ஒரு வெள்ளிக்கிழமை பாபா அவர்கள் தம் சீடர்களுடன் ஜும்ஆ தொழ பள்ளிவாயில் வந்தபொழுது, தொழுகை முடிந்ததும் பாபா அவர்களையும் அவர்களின் சீடர்களையும் பெரிதும் இழித்துரைத்தார் காஜி சாஹிப். பாபா அவர்கள் யாதொன்றும் கூறாது, பள்ளிவாயிலை விட்டு வெளியேறினார்கள். காஜியின் அடாச் சொல்கேட்டுக் கொந்தளித்துக் குமுறிய தம்முடைய சீடர்களையும் அவர்கள் அமைதிப் படுத்தினார்கள்.

இத்துடன் நில்லாது அந்த காஜி சாஹிப் ஆளுநரை அணுகி, அவரின் உள்ளத்தில் நஞ்சு வித்தைத் தூவி, அதனை நீர் வார்த்து நெடுமரமாக வளர்த்தார். அதன் காரணமாக ஆளுநர் பாபா அவர்களின் மக்களுக்குச் செய்த கொடுமைகளோ சொல்லுந்தரத்தவையல்ல.

ஒரு நாள் பாபா அவர்களின் மூத்த மகன் தம் தந்தையை அணுகி, ''பாவா! தாங்களோ மாபெரும் இறைநேசச் செல்வர். ஆனால் அதற்குப் பகரமாக எங்களுக்குக் கைமேல் கிடைக்கும் பலன் ஆளுநரால் நாங்கள் படும் துன்பமும் துயரமுமேயாகும்'' என்று நீர் மல்கும் கண்களுடன் எடுத்துரைத்தார். அதுகேட்டு பெற்ற மனம் பித்தானது. சினமீக்குற்ற அவர்கள் தம் கைத்தடியை ஓங்கித் தரையில் குத்தினார்கள். அது உண்மையில் தரையின்மீது குத்தப்பட்ட குத்தல்ல; ஆளுநரின் வயிற்றினுள் குத்தப்பட்ட குத்தாகும்.

அக் கணமே தம் மாளிகையில் இருந்த ஆளுநர் வயிற்று வலி தாங்க இயலாது சுருண்டு கீழே விழுந்தார் என்று ஷைகு நஸீருத்தீன் சிராஹ் தெஹ்லவி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். கீழே விழுந்த அவர், ''என்னை ஷைகு ஃபரீதுத்தீனின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். எடுத்துச் செல்லுங்கள்'' என்று அலறினார். ஆனால், என் செய்தும் என்! அவரை அங்கு எடுத்துச் செல்வதற்கு முன் அவருடைய உயிர் அவருடைய உடலை விட்டும் பிரிந்து சென்றது!



இதன் பின் அஜூதனின் ஆளுநராகப் பதவி ஏற்று வந்தவர், பாபா அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர்களுக்குரிய மரியாதையை செலுத்தினார். ஆனால், வேறொரு பகுதியிலிருந்து பாபா அவர்களைக் கொன்றொழிக்க தீய முயற்சிகள் செய்யப்பட்டன. அதன் காரணமாக பாபா அவர்கள் கடுமையான நோய் வாய்ப்பட்டார்கள்.

நோயின் கடுமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. அவர்களின் உடல் பெரிதும் நலிவுற்றது. அஜூதனிலும், அதன் சூழலிலும் உள்ள மருத்துவர்கள் அனைவரும் வந்து பாபா அவர்களின் உடலைச் சோதித்துப் பார்த்தும், அவர்களால் நோயைக் கண்டுபிடிக்க இயல வில்லை.

இப்பொழுது பாபா அவர்கள், தம் மகன் ஷைகு பத்ருத்தீன் சுலைமானையும், தம் ஆன்மீக மாணவர் ஷைகு நிஜாமுத்தீனையும் தம் அருகழைத்துத் தாம் உடல் நலம் பெற இறைவனிடம் இறைஞ்சுமாறு கூறினர். அவ்வாறே அவர்களும் இறைஞ்சினார்கள்.

ஓரிரவு ஷைகு பத்ருத்தீன் சுலைமான் அயர்ந்து உறங்கும் பொழுது, கனவொன்று கண்டார். ஒரு முதியவர் அவரிடம் வந்து ''உம் தந்தை மீது சூனியம் செய்யப்பட்டுள்ளது'' என்று கூறினார். ''எவன் அதனைச் செய்துள்ளான்?'' என்று வினவினார் பத்ருத்தீன். ''மந்திரவாதி ஷிஹாபுத்தீனின் மகன் செய்துள்ளான்'' என்றார் அந்த முதியவர். ''அப்படியா! அதனை எவ்வாறு நீக்குவது?'' இது பத்ருத்தீனின் அடுத்த கேள்வி. ''ஷிஹாபுத்தீனின் அடக்கவிடத்தின் அருகில் அமர்ந்து இந்த இஸ்மை ஓதும்'' என்று கூறி அந்த இஸ்மையும் படித்துக் கொடுத்துவிட்டு அம் முதியவர் மறைந்தார்.

விடிந்தெழுந்ததும் பத்ருத்தீன் தம் தந்தையை அணுகித் தாம் கண்ட கனவை விண்டார். உடனே அவர்கள் அந்த இஸ்மை மனனம் செய்து கொண்டு ஷிஹாபுத்தீனின் அடக்கவிடத்தின் அருகில் அமர்ந்து அதனை ஓதுமாறு ஷைகு நிஜாமுத்தீனுக்குப் பணித்தனர்.

அவ்வாறே ஷைகு நிஜாமுத்தீன் செய்தார்கள். அப்பொழுது அவர்களின் கை ஷிஹாபுத்தீனின் அடக்கவிட மண்ணைக் கிளறியது. திடீரென அவர்களின் கையில் ஒரு கனமான பொருள் தட்டுப்பட்டது.

அதனை எடுத்துப் பார்த்த பொழுது, அது மாவால் செய்யப்பட்ட மனித உருவமாக இருந்தது. அதன் மீது குதிரை மயிர்கள் சுற்றப்பட்டிருந்தன. அதைச் சூழ ஊசிகள் குத்தப்பட்டிருந்தன.

அந்த உருவத்தை எடுத்துக் கொண்டு, ஷைகு நிஜாமுத்தீன், தம் ஆசானிடம் வந்த பொழுது, அதன் மீதுள்ள ஊசிகளை ஒவ்வொன்றாக எடுக்குமாறு தம் மாணவரைப் பணித்தார்கள் அவர்கள். அவ்வாறு செய்யப்பட்ட அடுத்தகணம், அவர்கள் முழுநலன் பெற்றார்கள். இதன்பின் பாபா ஆற்றிற்குச் சென்று குளித்தார்கள். அவ் ஆற்றிலேயே அந்த உருவமும் வீசி எறியப்பட்டது.

இச்செய்தி ஆளுநரின் செவிப்பட்டதும் அவர் உடனே ஷிஹாபுத் தீனின் மகனைப் பிடித்து விலங்கிட்டு, பாபா அவர்களிடம் அனுப்பி வைத்து, ''இவன் தங்களுக்குச் செய்த தீமைக்கு சிரச்சேதம் தான் உரிய தண்டனையாகும். தாங்கள் அனுமதியளிப்பின் உடனே அதனை நிறை வேற்றுகிறேன்'' என்று கூறினர். அதற்கு பாபா அவர்கள் அளித்த பதில்: ''அல்லாஹ் எனக்கு இப்பொழுது பூரண உடல் நலனை நல்கியுள்ளான். அதற்கு நன்றி செலுத்தும் முறையில் நான் அவனை மன்னிக்கிறேன்'' என்பதாக இருந்தது.

அஜுதனில் அபிமானிகள் கும்பல் கும்பலாக வந்து தரும் தொல்லைகள் போதாவென்று பொறாமைக்காரர்கள் செய்யும் சூழ்ச்சி களும் பாபா அவர்களை ஆங்கிருந்து கிளம்பி வேற்றூர் சென்று விடலாமா என்று கூட எண்ணச் செய்துவிட்டது. இச் சமயத்தில் அவர்களின் ஆசான் அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, அங்கேயே தங்கியிருக்கு மாறு அறிவுரை பகர்ந்துவிட்டு மறைந்தனர். இதன்பின் அசரீரி மூலமும், அவர்களுக்கு இத்தகு அறிவுரை கிடைத்தது. எனவே அவர்கள் தம் இறுதிநாள் வரை அஜுதனிலேயே தங்கி வாழ்ந்து வந்தார்கள்.

பாபா அவர்களைக் காண்பதற்காகவும், கண்டு அவர்களின் அறிவுரை பெறுவதற்காகவும், அவர்களின் 'துஆ' வைப் பெற்றுத் தொல்லை நீங்கப் பெறுவதற்காகவும், மற்றும் பல்வேறு காரணங்களுக்காகவும் வந்த மக்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. அதில் பல்வேறு விதமான மக்களும் அடங்கியிருந்தனர். அரசர்களும், அமைச்சர் களும், பிரபுக்களும், அரசியல் வாதிகளும், அறிஞர்களும், வீரர்களும், கலந்தர்களும், இந்து யோகிகளும் அவர்களைக் காண வந்தவர்களின் பெயர்ப்பட்டியலில் இடம் பெற்றிருந்தார்கள். அவர்கள் கூறுவதைச் செவி சாய்த்துக் கேட்டு ஆறுதல் கூறி, ஆவன செய்து, அன்புடன் அனுப்பி வைப்பதில் பாபா அவர்களுக்கு நிகர் பாபா அவர்களாகவே இருந் தார்கள்.



சுன்னாம் என்ற ஊரைச் சேர்ந்த ஷம்ஷ் என்பவர் பாபா அவர்களை அண்மி, அவர்களின் அனுமதி பெற்று, அவர்கள் மீது புகழ்ப்பா ஒன்றைப் பாடினார். அவர் அதனைப் பாடி முடித்ததும் பாபா அவரை நோக்கி, ''என்ன அலுவலாக நீர் இங்கு வந்தீர்?'' என்று வினவினர். அதற்கு அவர், ''எனக்கு ஒரு வயோதிகத் தாய் உள்ளார். அவரையும் நான் கவனிக்க வேண்டியுள்ளது. பணத்தொல்லைகளாலும் நான் பெரிதும் அவதியுறு கிறேன்'' என்று பதிலிறுத்தார். அதுகேட்ட பாபா அவர்கள், ''ஏழை களுக்கு அறம் செய்ய ஏதேனும் வைத்துள்ளீரா?'' என்று வினவினார். உடனே அவர் தம்மிடமிருந்த ஐம்பது ஜித்தால் நாணயங்களை எடுத்து பாபா அவர்களிடம் கொடுக்க, அவற்றை வாங்கி ஏழைகளுக்கு அறம் செய்தனர் பாபா அவர்கள். அதன் பின் இருகரம் ஏந்தி அவருக்காக இறைவனிடம் இறைஞ்சினார்கள். அதன் காரணமாக விரைவில் சுல்தான் பல்பனின் மகன் புக்ராகானின் கீழ் ஷம்சுக்கு 'தபீர்' வேலை கிடைத்து, அவரைப் பீடித்திருந்த துன்பங்களும், துயரங்களும் ஒழிந்தன.

மற்றொரு நாள் முஹம்மது ஷா என்பவர், தம் முன் துக்கம் தோய்ந்த முகத்துடன் வந்து வீற்றிருப்பதைக் கண்ட பாபா அவர்கள், அதற்கான காரணத்தை அவரிடம் வினவினர். அதற்கு அவர் தம் உடன் பிறந்தார் பெரிதும் நோய் வாய்ப்பட்டு மரணத் தறுவாயில் இருப்பதாகக் கூறினார். அது கேட்ட பாபா அவர்கள் ''நான் என் வாணாள் முழுவதும் இந் நிலை யிலேயே அல்லாஹ்வின் முன் இருக்கிறேன். எனினும் இதைப்பற்றி நான் எவரிடமும் எடுத்துரைப்பதில்லை' என்று கூறிவிட்டு, ''நீர் இல்லம் செல்லும். உம் உடன் பிறந்தார் நலம் பெறுவார்'' என்று கூறினர். முஹம்மது ஷா இல்லம் திரும்பிய பொழுது, அவரின் உடன் பிறந்தார் நலம் பெற்று, உணவுண்டு கொண்டிருப்பதைக் கண்டதும் அவருக்கு அவருடைய கண்களையே நம்ப இயலவில்லை.

வேறொரு நாள் ஒருவர் பாபா அவர்களிடம் வந்து, தாம் வறுமை யால் துன்புறுவதாகவும், தம் வறுமைபோக்க ஏதாவது வழி சொல்ல வேண்டுமென்றும் வேண்டி நின்றார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ஒவ்வோர் இரவும் 'இஷா'த் தொழுகைக்குப் பின் சூரா ஜுமுஆவை ஓதி வருமாறு பணித்தார்கள்.

வேறொரு நாள் அரசாங்க வரி வசூலிப்பவர் அவர்களை அணுகித் தம்மீது ஆளுநர் எவ்விதக் காரணமுமின்றிக் கடுமையாக நடந்து கொள்கிறார் என்றும், அவரிடம் தமக்காகப் பரிந்துரை செய்ய வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார். அதுகேட்ட பாபா அவர்கள், ஒரு தாளில் ''தயை கூர்ந்து இந்த தர்வேஷுக்காக இன்ன பெயருடைய வரிவசூலிப்பவர் செய்த தவறுகளை மன்னித்தருள்வீர்களாக!'' என்று

எழுதி, அதனைத் தம் பணியாளரிடம் அந்த ஆளுநருக்கு அனுப்பி வைத்தார்கள். அதனை அந்த ஆளுநர் சிறிதேனும் பொருட் படுத்தாது முன்பு போலவே அந்த வரிவசூலிப்பவரிடம் கடுமையாக நடந்து வந்தார்.

இதனை அந்த வரிவசூலிப்பவர், பாபா அவர்களிடம் வந்து பெரிதும் வருத்தத்துடன் எடுத்துரைத்த பொழுது, பாபா அவர்களின் உள்ளம் பெரிதும் கசிந்தது. ''நான் என் செய்வது? உமக்காக நான் அவருக்குப் பரிந்துரை செய்து எழுதினேன். அவர் அதனை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ஒருவேளை, நீரும், உம்மிடம் வந்த ஏழை, எளியவர்களிடம் கடுமையாக நடந்து கொண்டிருப்பீர் போல் தெரிகிறது. அதன் காரணமாகவே ஆளுநரிடம் என்னுடைய பரிந்துரை செல்லவில்லை என்று கருதுகிறேன்'' என்று கூறினார்கள். அக்கணமே அவர் தாம் செய்த தவறுகளுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கோரியதுடன், இனிமேல் தாம் தம் பகைவரிடமும் கடுமையாக நடந்து கொள்வதில்லை என்று பிரமாணம் செய்து விட்டுச் சென்றார்.

இது நடந்து சில நாட்களேயாயின. அரசாங்க அதிகாரியின் மனம் மாறுதலுற்றது. வரி வசூலிப்பவரிடம் அவர் கொண்டிருந்த பகைமை நட்பாக மாறியது. அவருக்குச் சில அன்பளிப்புகளை அனுப்பி வைத்ததோடு, பாபா அவர்களிடமும் வந்து தாம், இனிமேல் எவருக்கும் யாதொரு இன்னலும் செய்வதில்லை என்று இறைவன் மீது ஆணை இட்டுக் கூறிச் சென்றார்.

பிறிதொரு நாள் ஒருவர் டில்லியிலிருந்து பாபா அவர்களைக் காண அஜூதன் வந்தார். அவர் வந்த நோக்கம், பாபா அவர்களைச் சந்தித்து, அவர்களிடம் தாம் செய்த பாவச் செயல்களுக்கு மன்னிப்புக்கோரித் தாம் இனிமேல் அத்தகு பாவச் செயல்களை ஏறிட்டும் பார்ப்பதில்லை என்று உறுதிப் பிரமாணம் செய்து விட்டுச் செல்ல வேண்டும் என்பதாகும்.

அவர் வந்த பயணக் குழுவில் துர்நடத்தையுள்ள ஒரு பெண்ணும் இருந்தாள். அவள் அவரைக் கவரத் தன்னுடைய மாயா ஜால வித்தைகளையெல்லாம் பயன்படுத்திய போதினும், அவர் அவளை ஏறிட்டும் பாராது ஒதுங்கியே இருந்து வந்தார். ஆனால் பயணத்தின் ஒரு பகுதியில் விதி செய்த சதியின் காரணமாக, அவரும் அவளும் ஒரே படகில் பயணம் செய்ய வேண்டியதாயிற்று. அப்பொழுது அவர், அவளுடைய மாய வலையில் சிக்கி, அவளை நோக்கித் தம்முடைய கைகளை நீட்டினார். அப்பொழுது அவரின் மனக்கண்முன், மனித உரு ஒன்று தோன்றி, ''பாவமன்னிப்புச் செய்வதற்காக பாபாவிடம் செல்லும் நீ, என்ன வேலை செய்யப் போகிறாய்'' என்று ஓங்கி அவரின் கன்னத்தில் அறைந்தது. அடுத்த கணம் அவர் உணர்வு பெற்று, நீட்டிய கையை இழுத்துக்



கொண்டார். அதன்பின் அவளைக் கடைக்கண்ணால் பார்ப்பதற்குக் கூட அவருடைய கண்கள் அஞ்சின. அவர் அஜூதன் வந்து பாபா அவர்களைக் காணச் சென்ற பொழுது, அவர்கள் அவரை நோக்கிக் கூறிய முதல் வார்த்தை, ''அன்றையத் தினம் இறைவன் உன்னைக் காத்தருள் புரிந்தான்'' என்பதாக இருந்தது.

இதன் பின் அவர் பாபா அவர்களின் முன் தாம் இதுகாறும் செய்து வந்த பாவச் செயல்களுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கோரியதுடன், தாம் இனிமேல் பாவம் செய்யாதிருப்பதற்கான வழிமுறைகளையும் ஓதுதல்களையும் தமக்குச் சொல்லித் தருமாறு வேண்ட, அவ்விதமே பாபா அவர்கள் செய்தார்கள்.

சிலபொழுது பாபா அவர்கள் தம்மிடம் வந்து, தம் குறைகளை எடுத்துரைப்பவர்களிடம், தின்பண்டங்கள் வாங்கி வருமாறு கூறுவார்கள். பாபா அவர்கள் அவ்விதம் கூறிவிடின், தங்களின் கோரிக்கை நிறைவேறி விட்டது என்று வந்தவர்கள் நிச்சயமாக எண்ணிக் கொள்வார்கள். அவர்கள் ஓடோடிப் போய் தின்பண்டங்கள் வாங்கி வந்ததும், அவற்றை அங்கிருக்கும் தர்வேஷ்களுக்கும், ஏழைகளுக்கும், பகிர்ந்தளிக்குமாறு கூறுவர் பாபா. அதன்பின் வந்தவர்களுக்குச் சில ஆயத்துகளையும் இஸ்முகளையும் எடுத்துரைத்து, அவற்றை வழக்கமாக ஓதிவருமாறும், இறையருளால் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறும் என்றும் கூறி, அவர்களை வழியனுப்பி வைப்பார்கள்.

அவர்களைக் காண வந்தோரோ, பலவிதமான இயல்புடையவர்களாக இருந்தார்கள். சிலர் முரடர்களாகவும், முட்டாள்களாகவும் இருந்தார்கள். எனினும், அவர்களுடனும் பாபா அவர்கள் இனிமையுடனும், எளிமையுடனும் நடந்து கொண்டனர்.

ஒருநாள் கிழவர் ஒருவர் தம் இளம் மகன் ஒருவனுடன் பாபா அவர்களைக் காணவந்தார். தாம் அவர்களை, ஏற்கனவேயே டில்லியில் குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் தவமடத்தில் சந்தித்திருப்பதாக அவர் கூறினார். அவரின் இளம் மகனோ, பாபா அவர்களுடன் தேவையற்ற விவாதத்தில் ஈடுபட்டுத் தம் கருத்தை வலியுறுத்துவதற்காக உரத்து சப்தமிட்டு சிறிதளவும் மரியாதையின்றிப் பேசினான். இதனைப் பொறாத பாபா அவர்களின் மகன் ஷிஹாபுத்தீன் அவனுடைய கன்னத்தில் ஓங்கி அறைய, அவனும் சினமீக்குற்று ஷிஹாபுத்தீனை அடிக்கக் கையை ஓங்கினான். அப்பொழுது பாபா அவர்களின் சீடர் நிஜாமுத்தீன் ஔலியா அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டனர். உடனே பாபா அவர்கள் குறுக்கிட்டு தம் மகனைக் கண்டித்ததுடன், அந்த இளைஞனுக்கும்,

அவனுடைய முதிய தந்தைக்கும் பணமும் துணியும் அன்பளிப்பாக நல்கி அவர்களை மகிழ்ச்சி செய்து அனுப்பி வைத்தார்கள்.

மற்றொரு நாள் கலந்தர் ஒருவர், பாபா அவர்களின் ஜமாஅத் கானாவுக்கு வந்தார். வந்த அவர் பாபா அவர்களின் அறைக்கு வெளியே விரிக்கப்பட்டிருந்த பாபா அவர்களின் தொழுகை விரிப்பில் போய் அமர்ந்தார். மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக், அவரின் முன் உணவு கொண்டு வந்து வைக்க, அதனை உண்டார் அவர். அதன் பின் தம்மிட மிருந்த தோல் பையிலிருந்து சில பச்சிலைகளை எடுத்து, அதில் வெந்நீர் ஊற்றிக் கலக்கினார். அவர் தயாரித்த கஷாயத்தில் சில துளிகள் பாபா அவர்களின் தொழுகை விரிப்பில் விழுந்து, அதனை நனைத்தன. அப் பொழுது மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் முன் வந்து பாபா அவர் களின் தொழுகை விரிப்பை அசுத்தப்படுத்த வேண்டாமென்று கூறிய பொழுது, கலந்தருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. மௌலானா பத்ருத்தீனை ஏசிய வண்ணம் தம் கையிலிருந்த கோலால் அவரை அடிக்கப் பாய்ந்தார். உடனே பாபா அவர்கள் தம் அறையிலிருந்து வெளியே வந்து கலந்தரின் கையைப் பிடித்துக் கொண்டு, ''எனக்காக வேண்டி அவரை மன்னித்து விடுங்கள்'' என்று கெஞ்சும் குரலில் வேண்டினர். அதற்கு அந்தக் கலந்தர், ''தர்வேஷ்கள் தம் கைத்தடியை எவர்மீதும் ஓங்கவும், மாட்டார்கள். ஓங்கி விடின் அதனை வெறுமனே வைக்கவும் மாட்டார்கள்'' என்று கூறினார். ''அவ்விதமாயின் அதனை அதோ உள்ள மதிளின் மீது எறிந்து விடுங்கள்'' என்று கூறினர் பாபா. அவரும் அவ்விதமே செய்ய, மதிள் அடுத்தகணம் 'பொத்'தென்று கீழே விழுந்தது.

வேறொரு நாள் கிழிந்த ஆடைகளை அணிந்த தர்வேஷ் ஒருவர், பாபா அவர்களின் ஜமாஅத் கானாவுக்கு வந்தார். அவரின் அவல நிலையைக் கண்ட பாபா அவர்கள், அவருக்குத் தம்மாலான உதவிகள் செய்து அனுப்பி வைத்தனர். ஆனால் அவரோ புறப்படாது அங்கேயே சிறிது நேரம் நின்று கொண்டிருந்தார். அதன்பின் பாபா அவர்களின் தொழுகை விரிப்பின் மீது கிடந்த பாபா அவர்களின் பழைய சீப்பைச் சுட்டிக்காட்டி, ''ஷைகு அவர்கள் எனக்கு அந்தச் சீப்பைத் தந்தால், அவர்களுக்கு ஏராளமான நற்பாக்கியங்களெல்லாம் கிடைக்கும்'' என்று பாமரர்களிடம் கூறுவது போன்று கூறினார். அது கேட்ட பாபா அவர்கள் ''வீணே தொந்திரவு கொடுக்காது போய்விடும். உம்மையும் உம்முடைய நற்பாக்கியங்களையும் நான் ஆற்றில் தூக்கி எறிந்து விட்டேன்'' என்று கூறினர். அதன்பின் அங்கிருந்து புறப்பட்ட அவர் அஜூதனின் அண் மையில் ஓடிக் கொண்டிருந்த ஆறொன்றைக் கடக்க முற்பட்ட பொழுது அதில் மூழ்கி இறந்துவிட்டார்.



பிறிதொரு நாள் பாபா அவர்கள் தம்முடைய ஜமாஅத் கானாவில் வீற்றிருக்கும் பொழுது, ஐந்து தர்வேஷ்கள் அவர்களைக் காண வந்தார்கள். வந்த அவர்கள், பாபா அவர்களை நோக்கி, ''நாங்கள் பல நாடுகளிலும் சுற்றித் திரிந்தோம். ஆனால் எங்கேனும் ஒரு காமிலான ஷைகைக் காண வில்லை. மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் போலிகளையே கண்டோம்'' என்றனர். அது கேட்ட பாபா அவர்கள், ''நீங்கள் இங்கு சற்றுநேரம் தாமதிப்பின் காமிலான பக்கீர்களுடன் உங்களைச் சேர்த்து விடுகிறேன்.'' என்றனர். அதற்கு அவர்கள் ''எங்களுக்கு நேரமில்லை'' என்று கூறிக் கிளம்பிவிட்டார்கள். அப்பொழுது பாபா அவர்கள், அவர்களை நோக்கிப் பாலைவழியாகச் செல்லவேண்டாமென்றும், வேறு வழியில் செல்லு மாறும் ஆலோசனை பகர்ந்தார்கள். ஆனால் அந்தக் கலந்தர்களோ, பாபா அவர்கள் கூறியதைச் சிறிதேனும் பொருட்படுத்தாது, எந்த வழியில் செல்ல வேண்டாமென்று பாபா அவர்கள் எச்சரிக்கை செய்தார்களோ, அந்த வழியிலேயே நடந்து சென்றனர். அவர்கள் தாம் கூறியதற்கு மாற்றமாகச் செய்ததைக் கேள்வியுற்ற பாபா அவர்கள், ஆற்றொணாத் துக்கத்தில் மூழ்கி அழுதுவிட்டு, 'இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹிராஜிஊன்' என்று கூறினர். சின்னாட் கழித்து அவர்களில் நால்வர் பாலைவனத்தில் அடித்த நெருப்புக் காற்றில் கருகி மடிந்தார்கள் என்றும், ஐந்தாமவர் தாகவிடாய் தாங்காது வழியில் இருந்த கிணற்றில் இறங்கித் தண்ணீர் அருந்திவிட்டு வெளியே வந்த பொழுது, அவரும் அக்காற்றிற்கு பலியானார் என்றும் செய்தி வந்தது.

மற்றொரு நாள் பாபா அவர்கள் தம்முடைய ஜமாஅத் கானாவில் வீற்றிருக்கும் பொழுது, ஒரு கலந்தர் வந்து ''ஏன் நீர் உம்மை ஒரு தொழு உருவம் போன்று ஆக்கிக் கொண்டுள்ளீர்?'' என்று உரத்து சப்தமிட்டு வினவினார். ''நான் ஒன்றும் அப்படி என்னைச் செய்து கொள்ள வில்லையே'' என்று அமைதியுடன் பதிலிறுத்தனர் பாபா. கலந்தர் மீண்டும் பாபா அவர்களை நோக்கி, ''நீர் அப்படித்தான் உம்மைச் செய்து கொண்டுள்ளீர்'' என்று சப்தமிட்டு அலறினார். அப்பொழுதும் பாபா அவர்கள் சிறிதேனும் சினமுறாது, ''நான் எவராக இருக்கின்றேனோ, அவராக அல்லாஹ்வே என்னைச் செய்துள்ளான்'' என்றனர். ''இல்லை; நீர் தாம் உம்மை இது போன்று செய்துள்ளீர்'' என்று பெருங்குரலெடுத்துக் கத்தினார் அவர். ''இல்லை; உலகிலுள்ள அனைத்தையும் அல்லாஹ்வே படைத்துள்ளான்'' என்றனர் பாபா அழுத்தமாக. அதுகேட்டு அவர் பெரிதும் நாணமுற்றவராய், தம் தலையைத் தரையிலே வைத்து அவர்களின் பொறுமையை வியந்து போற்றிவிட்டு, அவ் இடத்தை விட்டும் அகன்றார்.

இப்பொழுது நாம் பாபா அவர்களின் ஜமாஅத் கானாவைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம். இதோ இருக்கிறதே பெரிய அறை, இதுதான்

பாபா அவர்களின் ஜமாஅத் கானா. இதுவே பல மெய்ஞ்ஞானிகளை, இறைநேசச் செல்வர்களை உற்பத்தி செய்த புண்ணியத்தலமாகும். இங்கு, அங்குமிங்கும் சிலர் அமர்ந்து ஓதிக் கொண்டும், தொழுது கொண்டும், உறங்கிக் கொண்டும், இருக்கிறார்களே, இவர்களே அவர்களின் சீடர்கள்.

இதோ வீற்றிருந்து, ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறாரே, இவரே மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் ஆவர். சிறந்த மார்க்க மேதையான இவர், துவக்கத்தில் டில்லியிலுள்ள மத்ரஸா ஒன்றில் பேராசிரியராகப் பணியாற்றினார். அவருக்கு சூஃபிகளையோ, தர்வேஷ்களையோ பிடிக்காது. அவர்கள் வேடதாரிகள் என்பது அவரின் எண்ணம். அவருக்குச் சில மார்க்கப் பிரச்சினைகளுக்கு சரியான விளக்கம் கிடைக்கவில்லை. தம்மை விடப் பெரிய மார்க்க அறிஞர்களையெல்லாம் அணுகி, அவற்றிற்கு விளக்கம் கேட்டும், அவருக்குச் சரியாள விடை கிடைக்கவில்லை. எனவே தம்முடைய ஐயங்களுக்குச் சரியான விளக்கம் பெறுவதற்காக, வெளிநாடுகளிலுள்ள மார்க்க அறிஞர்களைச் சந்திப்பதற்காக, அவர் தம் நண்பர்களுடன் டில்லியிலிருந்து புறப்பட்டு வரும் பொழுது, வழியில் ஒருநாள் அஜூதனில் தங்கினர். அப்பொழுது அவருடன் வந்த அவரின் நண்பர்கள், அங்கு புகழ்பெற்று விளங்கிய இறைநேசச் செல்வர் பாபா அவர்களைப் பற்றிக் கேள்வியுற்று, அவர்களைக் காண விழைந்தனர். ஆனால் பத்ருத்தீனோ தாம் வரவில்லை என்றும், அவர்கள் விரும்பினால் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்றும் கூறினார். பின்னர் நண்பர்களின் வற்புறுத்தலின் மீது பாபா அவர்களைக் காண வந்த அவர், தம் உள்ளத்தில் பல்லாண்டுகளாக அமுங்கிக் கிடந்த ஐயங்களையெல்லாம், ஒன்றின்பின் ஒன்றாக எடுத்துரைக்க, அவற்றிற்கெல்லாம் அறிவிற்குப் பொருத்தமான, சிறந்த விளக்கங்களை பாபா அவர்கள் நல்கினர். அக்கணமே அவர் பாபா அவர்களிடம் 'பைஅத்' பெற்று அவர்களின் ஆன்மீக மாணவராகிவிட்டார்.

ஒவ்வொரு நாளும் கானகம் சென்று விறகு சுமந்து வந்து ஜமாஅத் கானாவின் அடுக்களையில் போடுவது அவரின் தலையாய பணியாகும். பாபா அவர்களைத் தம் உயிரினும் மேலாக நேசித்த அவர், பாபா அவர்களுக்கு அனைத்து ஊழியங்களையும் அவரே செய்து வந்தார். அவருக்கு பாபா அவர்கள் தம் அருமை மகள் பீபி பாத்திமாவை மணமுடித்து மகிழ்ந்தனர். அவர் எப்பொழுதும் தம் பவம் நினைந்து அழுது கொண்டே இருப்பார். அவர் சஜ்தாவில் செல்லும் பொழுது, அவரின் கண்களிலிருந்து வழியும் கண்ணீர், அவரின் தொழுகை விரிப்பை நனைத்தது.

சிலபொழுது அவர் தம்மை மறந்த நிலையில் ஆகி விடுவார். ஒரு தடவை பாபா அவர்கள் அவரை இமாமாக நின்று தொழுகையை



நடத்துமாறு கூறியபொழுது, அவர் திருக்குர்ஆனின் ஏதாவதொரு அத்தியாயத்தை ஓதுவதற்குப் பதிலாக, பார்ஸிக் கவிதை ஒன்றைப் படித்து அதில் சொக்கி மகிழ்ந்தவண்ணம் உணர்வற்றுக் கீழே விழுந்தார். பாபா அவர்கள் அவரைக் கடிந்து மீண்டும் ஒழுங்காக ஓதித் தொழவைக்குமாறு பணித்தனர். சில பொழுது பாபா அவர்கள் அவரை அழைத்த போதும், பதில் கொடாது தன்னுணர்வற்ற நிலையில் மெய்மறந்து தியானத்தில் மூழ்கியிருப்பார்.

இதோ வீற்றிருக்கிறாரே, இவர் தாம் ஸையிது மஹ்மூது கிர்மானி, கிர்மான் என்ற ஊரில் பிறந்த இவர், அங்கு பெரும் வணிகம் செய்து வந்தார். பாபா அவர்களைப் பற்றிக் கேள்வியுற்று, அவர்களைக் காண்பதற்காக அடிக்கடி அஜூதன் வந்து போய்க் கொண்டிருந்த அவர், திடீரெனத் தம் வணிக நிலையத்தை மூடிவிட்டு, தம் மனைவி பீபி ராணியுடன் பாபா அவர்களின் ஜமாஅத் கானாவுக்கு வந்து, அங்கேயே நிரந்தரமாகத் தங்கலானார். அவரின் மனைவி பீபி ராணியோ மூல்த்தானிலுள்ள ஒரு நாணய அச்சு நிலைய அதிகாரியின் செல்வ மகள். இங்கோ அவர் பஞ்சையைப் போல் உடையணிந்து, ஜமாஅத் கானாவிலுள்ள தர்வேஷ்களுக்கு ஊழியம் புரிகிறார். அவர்களெல்லாம் இவரைத் தம் உடன் பிறவாச் சகோதரியாகக் கருதுகின்றனர்.

ஒரு நாள் மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக்கின் கண்கள் அழுது, அழுது வீங்கி இருப்பதைக் கண்ட இவர், ''தம்பி! தாங்கள் அழுவதைச் சற்று நிறுத்துங்கள். தங்களுடைய கண்களுக்கு 'சுருமா'ப் போட்டு விடுகிறேன்'' என்று கூறினார். அதற்கு மௌலானா பத்ருத்தீனோ, ''என்ன அக்கா நான் செய்வேன்? என்னால் என் அழுகையை நிறுத்த இயலவில்லையே'' என்று ஆற்றாமையுடன் பதிலுரைத்தார்.

மற்றொரு நாள் ஷைகு நிஜாமுத்தீன் ஔலியா, கந்தல் உடை அணிந்திருப்பதைக் கண்ட அவர், அவர்களிடம் ஒரு துணியைக் கொடுத்து, ''தம்பி! இதனை அணிந்து கொண்டு, தங்களின் உடையைக் களைந்து தாருங்கள். நான் அதனை வெளுத்துத் தைத்துத் தருகிறேன்'' என்று கூறினார் அவர்.

அதோ தொழுது கொண்டிருக்கிறாரே, அவர் தாம் ஹமீத். அவர் இந்த ஜமாஅத் கானாவுக்கு வந்ததே ஒரு விசித்திர நிகழ்ச்சியாகும். அவர் திறமைக்கும், துணிவுக்கும், வள்ளன்மைக்கும் பேர் போன, மாலிக் துக்ரில் என்ற சுல்தான் பல்பனின் துருக்கிய அடிமையின் ஊழியராக டில்லியில் பணிபுரிந்து வந்தார். ஒரு நாள் அவர் மாலிக் துக்ரிலின் முன் கைகட்டி நின்று கொண்டிருந்த பொழுது, ஓர் உருவம் அவரின் முன் தோன்றி, ''ஹமீத் நீர் ஏன் அவரின் முன் கைகட்டி நின்று கொண்டி

ருக்கிறீர்?'' என்று வினவி விட்டு மறைந்தது. அது கண்டு பெரிதும் திகைப்படைந்தார் ஹமீத். மீண்டும் அவ் உருவம் அவரின் முன் தோன்றி, அதே கேள்வியை வினவி விட்டு மறைந்தது. மீண்டும் ஹமீதுக்கு ஒரே திகைப்பு! யாது பதில் கூறுவதென அறியாது அவர் விழித்துக் கொண்டிருந்த பொழுது, மீண்டும் அவ் உருவம் அவரின் முன் தோற்றம் வழங்கி, அதே கேள்வியைச் சிறிது உக்கிரத்துடன் வினவியது. இப்பொழுது ஹமீத் சற்றுத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு ''ஏன் நான் அவரின் முன் கைகட்டி நிற்கக் கூடாது? அவர் என் எசமானர். அவர் எனக்கு மாதா மாதம் சம்பளம் தருகிறார். அவர் இடும் பணிக்காகக் காத்து நிற்றல் என்மீது கடமையல்லவா?'' என்று பதில் கூறினார். அப்பொழுது அந்த உருவம் அவரை நோக்கி, ''நீரோ ஓர் அறிஞர். அவரோ ஓர் அறிவிலி. நீரோ சுதந்திரமுள்ளவர். அவரோ ஓர் அடிமை. நீரோ பக்திமான். அவரோ பாவி'' என்று கூறிவிட்டு மறைந்தது. அதன்பின் அவருக்கு நிலைக் கொள்ளவில்லை. தம் வேலையைத் துறந்து, பாபா அவர்களின் ஜமாஅத் கானாவுக்கு வந்து அங்கேயே தங்கி விட்டார் அவர்.

இதோ அமர்ந்து தியானித்துக் கொண்டிருக்கிறாரே ஒரு சூபி, அவரின் பெயர் தெரியவில்லை. அவர் எப்பொழுது பார்த்தாலும், ஓய்வு ஒழிவின்றி தியானத்திலே தான் வீற்றிருப்பார். ஒருநாள் அவர் மிகவும் அழுக்கடைந்த உடையை அணிந்திருப்பதைக் கண்ட மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் அவரை நோக்கி, ''தாங்கள், தங்களின் உடையைத் துவைத்து அணிந்து கொண்டால் என்ன?'' என்று வினவினார். அதற்கு அந்த ஸூஃபி யாதொரு பதிலும் கூறவில்லை. சில நாட்கள் கழித்து அவரிடம் இதே கேள்வியை மௌலானா பத்ருத்தீன் கேட்ட பொழுது, ''எனக்கு அதனைத் துவைப்பதற்கு நேரமேது?'' என்று மெல்லிய குரலில் பதில் மொழிந்தார் அந்த ஸூஃபி. அதைக்கேட்டு மௌலானாவின் கண்கள் பனித்தன.

இதோ வந்து கொண்டிருக்கிறாரே, இவர் தாம் ஷைகு நிஜாமுத்தீன், பதாவுனிலும், டில்லியிலும் கல்வி பயின்ற இவர், பாபா அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று அஜூதன் வந்து, பாபா அவர்களைச் சந்தித்தார். முதற் பார்வையிலேயே பாபா அவர்கள் இவரின் மாண்பினை நன்கு உணர்ந்து கொண்டனர். மற்றவர்களெல்லாம் தரையில் படுத் துறங்கும்பொழுது, இவருக்கு மட்டும் படுப்பதற்கு நாற்காலி போடுமாறு தம் ஊழியரிடம் பணித்தனர் பாபா.

இவ்வாறு பாபா அவர்களின் ஜமாஅத் கானாவில், பல்வேறு துறைப்பட்ட மக்களும் வந்து ஆன்மீக வாழ்வில் புகுந்து, வறுமையை அரவணைத்து வாழ்ந்து வந்தனர். அவர்கள் அனைவரும் ஜமாஅத்



கானாவின் அலுவல்களைத் தங்களுக்குள் வகுத்துக் கொண்டு, அதனைத் திறம்பட நிர்வகித்து வந்தனர். நாம் ஏற்கனவே கூறிய வண்ணம், மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் கானகம் சென்று விறகு சேர்த்து வருவார். மௌலானா ஜமாலுத்தீன் ஹான்ஸ்வி காடு சென்று அங்குள்ள கரீல் என்ற ஒரு வகை மரத்தின் காய்களைப் பறித்து வருவார். மௌலானா ஹுஸ்ஸாமுத்தீனோ தண்ணீர் கொணர்ந்து பாத்திரங்களைக் கழுவி வைக்கும் பணியை ஆற்றி வந்தார். இவ்வாறு ஒவ்வொருவரும், ஒவ் வொரு பணியைச் செய்து, உணவு சமைத்து உண்டு வந்தார்கள். உள்ளதைக் கொண்டு நல்லது செய்வதையே பாபா அவர்கள் விரும்பி னார்களே ஒழிய, கடன் வாங்கிக் காரியமாற்றுவதை அவர்கள் விரும்ப வில்லை.

பாபா அவர்களின் ஜமாஅத் கானாவில் வாரத்திற்கு ஒரிரு தடவை உணவு பற்றாக் குறையாகப் போய்விடும். ஒரு தடவை அத்தகு நிலை ஏற்பட்ட, பொழுது கானகத்திலிருந்து கொணரப்பட்ட 'பிலூ' என்னும் ஒருவகைக் காயை வெட்டி, ஒரு சட்டியிலிட்டு அடுப்பில் வைத்து வேக வைத்துக் கொண்டிருந்தார்கள் ஷைகு நிஜாமுத்தீன். அப்பொழுது ஜமாஅத் கானாவில் உப்பு இல்லை. எனவே பக்கத்திலிருந்த கடைக்குச் சென்று சிறிதளவு உப்பைக் கடனுக்கு வாங்கி வந்து பயன்படுத்தினர்.

'பிலூ' காய் வெந்ததும், அதனை அருந்த பாபா உட்பட ஜமாஅத் கானாவில் இருந்த அனைவரும் அமர்ந்தனர். பாபா அவர்கள் தம்முன் வைக்கப்பட்டிருந்த தட்டையில் இருந்த உணவை எடுத்து அருந்த முற்பட்ட பொழுது, திடீரென முகம் பேதலித்தவர்களாய், ''என் கை கனக்கின்றதே. என் கை வாய்க்குச் செல்ல மறுக்கின்றதே. இதில் ஏதோ தவறான பொருள் சேர்ந்திருப்பதுபோல் தோன்றுகிறதே'' என்று கூறிக் கையிலெடுத்த உணவை, மீண்டும் தட்டையிலேயே வைத்து விட்டனர்.

இதைக் கண்டு ஷைகு நிஜாமுத்தீன் அச்சம் மீக்குற்றவராய் பாபா அவர்களை நோக்கி ''ஷைகு அவர்களே! ஷைகு ஜலால், மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக், மௌலானா ஹுஸ்ஸாமுத்தீன் ஆகியோர் கானகம் சென்று விறகு கொணரவும் காய்களைப் பறித்து வரவும், தண்ணீர் கொணரவுமான பணிகளைச் செய்து வருகின்றனர். இந்த மிஸ்கீன், அவர்கள் கொணர்ந்த காய்களை நறுக்கி அடுப்பிலிட்டு வேகவைக்கும் பொறுப்பை மேற்கொண்டு, அவை வெந்ததும் தங்களின் முன் கொண்டு வந்து வைத்துள்ளேன், இதில் தவறு யாதும் நிகழ்வதற்கில்லை. அதற்குமேல் உண்மையை ஷைகு அவர்களே உணர்ந்தவர்கள்'' என்று வினயமாகக் கூறினர்.

அதுகேட்ட பாபா அவர்கள் ஷைகு நிஜாமுத்தீனை ஏறிட்டுப் பார்த்து, ''உப்பு எங்கிருந்து கிடைத்தது?'' என்று வினவினர். ஷைகு நிஜாமுத்தீன் நடந்ததை அவர்களிடம் எடுத்துரைத்தார்.

அப்பொழுது பாபா அவர்கள் அனைவரையும் நோக்கி, ''தர்வேஷ்கள் தங்களின் கீழ்த்தரமான ஆசைகளைத் திருப்தி படுத்துவதற்காகக் கடன் வாங்குவதை விடப் பட்டினி கிடந்து சாவதையே மேலானதாகக் கருதுவர். கடன் வாங்குவதும், இறையருளில், ஆதரவு வைப்பதான தவக்குலும் என்றென்றும் ஒன்று சேரா. அவை இரண்டிற்கும் இடையே எழுவானுக்கும், படுவானுக்கும் இடையேயுள்ள தொலைவு உள்ளது. ஒரு தர்வேஷ் கடன்காரனாயிருக்கும் நிலையில் திடீரென இறந்துவிடின், அவன் மறுமையில் இறைவனின் திருமுன் தலை குனிந்தல்லவோ நிற்க வேண்டி ஏற்படும்'' என்று கூறிவிட்டு, சமைத்த அந்த உணவு முழுவதையும் ஜமாஅத் கானாவிலிருந்து அப்புறப்படுத்துமாறு பணித்தனர். இதன்பின் அவர்கள் தங்களின் கம்பளி ஒன்றை ஷைகு நிஜாமுத்தீனுக்கு அன்பளிப்பாக வழங்கி, ''இதனை வைத்துக் கொள்ளும். இனிமேல் பிறரிடம் போய் எதையும் கேட்கும் நிலை உமக்கு ஒருபோதும் ஏற்படாது'' என்று கூறினர்.

ஒரு தடவை பாபா அவர்கள் மூன்று நாட்கள் தொடர் நோன்பு நோற்றனர். நோன்பு திறக்கும் வேளையில் ஒருவர் உணவு கொண்டு வந்து கொடுக்க அதனை இறைவன் அளித்த இரணம் எனக் கருதி அவர்கள் உண்டனர். உண்ட சிறிது நேரத்தில் ஒருவிதக் குமட்டல் ஏற்பட்டு அதனை வாந்தியெடுத்து விட்டனர். பின்னர் விசாரிக்கப்பட்ட பொழுது, அதனைக் கொண்டு வந்து தந்தவர் ஒரு மதுப்பிரியர் எனத்தெரிய வந்தது.

ஜமாஅத் கானாவில் வாழ்ந்து வந்தவர்களில், பாபா அவர்களுக்குப் பணியாற்றுவதைத் தம்முடைய தலையாய கடமையாகக் கொண்டிருந்தவர் ஷைகு பத்ருத்தீன் இஸ்ஹாக் ஆவார். பத்து ஊழியர்கள் ஆற்றக்கூடிய பணியை, அவர் ஒருவரே பாபா அவர்களுக்குச் செய்து வந்தார் என்று ஷைகு நிஜாமுத்தீன் ஒளலியா நற்சான்று பகர்கின்றார்கள். எப்பொழுதும் பாபா அவர்கள் இட்ட பணியை ஆற்றுவதற்காக, அவர்களின் அருகிலே இருந்த அவர், பாபா அவர்கள் தம் அறைக் கதவை மூடித் தியானத்தில் ஈடுபடின், அறையின் வாசலில் அமர்ந்திருப்பார். ஒரு தடவை அவர் தொழுது கொண்டிருந்த பொழுது, பாபா அவர்கள் அறையின் உள்ளிருந்து அவரை அழைக்கவே அவர் தொழுத நிலையிலேயே தம்மையறியாமல் ''இதோ வந்துவிட்டேன்'' என்று பதில் கூறினார் என்றால், பாபா அவர்கள் மீது அவர் கொண்டிருந்த பக்தியை என்னென்போம்!



ஷைகு பத்ருத்தீன் இஸ்ஹாக்குக்கு அடுத்தபடியாக, காஜா அஹ்மது சிவிஸ்தானியும் பாபா அவர்களுக்குத் தனிப்பட்ட ஊழியம் செய்து வந்தார். பாபா அவர்களுக்கு 'உளூச்' செய்வதற்கான தண்ணீர் கொணர்தல் முதலான குற்றேவல்களைச் செய்து வந்தவர் இவரேயாவார். ஒரு தடவை இவரின் முதுகில் ஏற்பட்ட வேதனையின் காரணமாக, இவரால் தண்ணீர்ப் பையைச் சுமந்து வர இயலாமல்போன பொழுது, பாபா அவர்கள் அவரை அருகழைத்துத் தம் கையால் அவரின் முதுகைத் தடவினார்கள். அக்கணமே அவ்வேதனை மாயமாய் மறைந்ததோடு, பின்பு எக்காலமும் அது அவருக்கு ஏற்படவில்லை.

ஒருநாள் பாபா அவர்கள், அவரை நோக்கித் தம்முடைய துணிகளைத் துவைத்து வருமாறு கூறினர். அவரும் அவற்றை எடுத்துக் கொண்டு ஆற்றுக்குச் சென்று, அவற்றைத் துவைத்துக் காயவைத்துக் கொண்டு வந்தார். பாபா அவர்கள் அவரை நோக்கி, மீண்டும் அவற்றைத் துவைத்துக் கொண்டு வருமாறு பணித்தார்கள். தாம் துவைத்துக் கொண்டு வந்ததில் ஏதோ தவறு நிகழ்ந்திருக்கலாம் என்று கருதிய காஜா அஹ்மது இப்பொழுது 'உளூ'ச் செய்து தம்மை முதலில் துப்பரவு செய்து கொண்டு, துணிகளைத் துவைத்துக் காய வைத்துக் கொண்டு வந்தார். இப்பொழுது பாபா அவர்கள் அவரை நோக்கி, மீண்டும் அதனைத் துவைத்துக் கொண்டு வருமாறு பணித்தார்கள். அதுகேட்டு காஜா அஹ்மதுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. ''என்ன தவறு நிகழ்ந்து விட்டது? ஏன் இவ்வாறு பாபா அவர்கள் திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்'' என்று சிந்தித்தார். அதன்பின் தான் தாம் அவற்றைத் துவைத்துக் காயப் போட்ட மரக்கிளையில் பறவைகள் எச்சலிட்டிருந்தது அவருக்கு நினைவுக்கு வந்தது.

பாபா அவர்களிடம் ஒரு சில துணிமணிகளே இருந்தன. அவை கூடக் கிழிந்து ஒட்டுப் போடப்பட்டவையாக இருந்தன. அவர்கள் தம் வாணாள் முழுவதும், கிழிந்த ஒட்டுப் போடப்பட்ட உடைகளையே அணிந்திருந்தார்கள். ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி அவர்கள், பாபா அவர்களை இளமையில் சந்தித்த பொழுதும், பாபா அவர்கள் ஒட்டுப் போடப்பட்ட உடைகளையே அணிந்திருந்தனர். பின்னர் மௌலானா நூர் துர்க், பாபா அவர்களைச் சந்தித்த பொழுதும், பாபா அவர்கள் அணிந்திருந்த உடை ஒட்டுப் போடப்பட்டதாகவே இருந்தது. அவர்கள் டில்லியில் இருந்த பொழுதும், அவ்வித உடைகளையே அவர்கள் அணிந்திருந்தார்கள்.

அவர்கள் டில்லியில் ஷைகு பத்ருத்தீன் கஸ்னவீ நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்கச் சென்ற பொழுது, அவர் பாபா அவர்களைப்

பெரிதும் பாராட்டிப் பேசினார். அப்பொழுது பாபா அவர்கள், அழுக் கடைந்த ஒட்டுப் போடப்பட்ட உடைகளையே அணிந்திருந்தார்கள். அவர்கள் இல்லம் திரும்பிய பொழுது, ஒருவர் வந்து அவர்களுக்குப் புத்தாடை ஒன்றை அன்பளிப்பாக வழங்கிவிட்டுச் சென்றார். அதனை ஏற்று பாபா அவர்கள் சற்று நேரம் அணிந்து கொண்டனர். பின்னர் அதனைக் கழற்றித் தம் இளவல் ஷைகு நஜீபுத்தீன் முதவக்கிலிடம் கொடுத்து, ''பழைய ஒட்டுப் போடப்பட்ட ஆடைகளை அணிந்து கொண்டிருப்பதில் எனக்கு ஏற்படும் இன்பம், புதுத்துணிகளை அணிந்து கொண்டிருப்பதில் ஏற்படவில்லை'' என்று கூறினார்கள்.

அவர்கள் அஜூதனில் வாழ்ந்த பொழுதும் பழைய ஒட்டுப் போடப் பட்ட ஆடைகளையே அணிந்து வந்தனர். எவரேனும் அவர்களுக்குப் புத்தாடைகளைக் காணிக்கையாக அளிப்பின், அவற்றை உடனே ஏழை, எளியவர்களுக்கு அறம் செய்துவிட்டுத்தான், அவர்கள் மறு வேலை பார்ப்பர்.

''பாபா அவர்களிடம் எப்பொழுதும் நான்கு உடைகளே இருந்து வந்தன. ஒன்று அவர்களின் உடலின் மீது; மற்றொன்று வண்ணானிடம்; வேறொன்று தொழுவதற்கு இயலாவண்ணம் அவர்களின் உடை அசுத்தமாய் விடின் மாற்றிக் கொள்வதற்கு; பிறிதொன்று, உடையின்றி வரும் ஏழைகளுக்கு வழங்குவதற்கு'' என்று சையிது முஹம்மது ஜேசுதராஸ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர்.

பாபா அவர்களிடம் ஒரு விரிப்பு இருந்தது. அதனை விரித்து அதன் மீது அவர்கள் பகலில் அமர்ந்திருப்பர். இரவில் அதனை அவர்கள் நாற்காலி மீது விரித்து, அதன் மீது படுத்துக் கொள்வர். அதன் நீளம் நாற்காலியின் நீளத்திற்குச் சரியாக இல்லாததால், எஞ்சிய பகுதியில் அவர்களின் போர்வை மடித்து வைக்கப்பட்டிருக்கும். குளிர்காலத்தில் அதனை எடுத்து பாபா அவர்கள் போர்த்திக் கொள்வர். அவர்கள் தலை யணையைப் பயன்படுத்துவதில்லை. தம் ஆசான் தமக்களித்த அஸாவை எடுத்து மரியாதையுடன் முத்தமிட்ட பின், அதனைத் தலைக்கடியில் வைத்துக் கொண்டு அவர்கள் உறங்குவர்.

தொடர்ந்து நோன்பு நோற்பதை வழக்கமாகக் கொண்டிருந்த பாபா அவர்கள், ஸஹ்ரின் போது யாதோர் உணவும் அருந்துவதில்லை. நோன்பு திறக்க அவர்களின் முன் ஒரு கோப்பையில் ஷர்பத்தும், ஒரு தட்டையில் கிஸ்மிஸ் பழங்களும், இரண்டு ரொட்டித் துண்டுகளும் கொண்டு வந்து வைக்கப்படும். அவற்றில் பாதியை அவர்கள் அருந்திவிட்டு மற்றொரு பாதியை, அவர்கள் அங்கிருப்போருக்குப் பகிர்ந்தளித்து விடுவர்.



இவ்வளவுதான் இருபத்து நான்கு மணி நேரத்தில், அவர்கள் வழக்கமாக உண்ணும் உணவாக இருந்தது.

அவர்கள் ஒவ்வொரு நாளும் நீராடி வந்தனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் ஐந்து வேளை-ஒவ்வொரு தொழுகைக்கு முன்பும்- நீராடி வந்ததாக, அமீர் குர்து குறிப்பிடுகிறார். வைகறைத் தொழுகைக்குப்பின் அவர்கள் இரண்டு மணி நேரம் 'சஜ்தா'விலேயே கிடப்பர். அவர்கள் தியானத்திலிருக்கும் பொழுது, அவர்களின் அறைக்கதவு மூடப்பட் டிருக்கும். அப்பொழுது ஒருவரும் உள்ளே நுழையமாட்டார்கள்.

நண்பகல் தொழுகைக்குப்பின் அவர்கள் தம்மைக் காண வந்திருப் போருக்கு பேட்டியளித்து, அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டுப் பரிகாரம் செய்வர். ''என்னைக் காண மக்கள் வந்து காத்துக் கிடக்கும் பொழுது, நான் அறைக்குள் சென்று தியானத்தில் ஈடுபடுவதில் இன்பம் இல்லை'' என்று கூறிய அவர்கள், தம்மைக் காண வந்தோர்களின் பிரச்சினைகளைத் தம்மால் இயன்ற வழிகளில் தீர்த்து வைத்த பின்னரே, தம் அறைக்குள் நுழைவார்கள்.

இதைப்பற்றிப் பிற்காலத்தில் நிஜாமுத்தீன் ஔலியா கூறும் பொழுது, ''பாபா அவர்கள் தம்மைக் காண வந்தவர்களிடம் நடந்து கொண்டது அற்புதமாக இருந்தது. அவர்கள் தம் நண்பர்களாகவோ, சீடர்களாகவோ, அந்நியராகவோ இருந்தபோதினும், அவர்கள் அனைவரையும் ஒரே கண் கொண்டு நோக்கி, அன்பொழுக உரையாடி, ஆலோசனை பகர்ந்து வந்தார்கள்'' என்று குறிப்பிடுகின்றனர். அவர்கள் தம்மால் இயலாததை, இயலாது என்று கூறவும் தயங்குவதில்லை. ஒரு தடவை அமைச்சர் உலுக் கான் பாபா அவர்களை அணுகி, சுல்தான் நாஸிருத்தீன் மஹ்மூதுக்கு ஆண் வாரிசு பிறக்க அருள்பாலிக்க வேண்டுமென்று வேண்டி நின்ற பொழுது, ''ஃபரீத் மனிதரேயன்றி வானவரல்ல. இதுபற்றி அவரால் யாதொன்றும் செய்ய இயலாது'' என்று கூறிவிட்டார்கள் அவர்கள்.

நோன்பு திறந்ததும் அவர்கள் ஷைகு நிஜாமுத்தீனையோ, மௌலானா ஷிஹாபுத்தீனையோ, மௌலானா ருக்னுத்தீனையோ அழைத்து, அன்றாட நிகழ்ச்சிகளையும், ஜமாஅத் கானாவில் உள்ளவர்களின் நலனையும் கேட்டறிவார்கள்.

மக்கள், பாபா அவர்களிடம் தஃவீஸ் பெறுவதற்காக வந்து குவிந்த வண்ணமாகவே இருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் தஃவீஸ்

எழுதிக் கொடுத்து, அவர்களின் கையும் வலியெடுத்தது. எனவே அவர்கள், அப்பணியை ஆற்றுமாறு சிலபொழுது, மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக்கையும் கேட்டுக் கொள்வார்கள். ஒரு நாள் மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக்கும் ஜமாஅத் கானாவில் இல்லாத பொழுது, அவர்கள் ஷைகு நிஜாமுத்தீனை நோக்கி, ''தஃவீஸ் எழுதி மக்களுக்கு அளிக்க நான் உமக்கு அனுமதி வழங்குகிறேன். செய்யும்'' என்று கூறினர்.

ஒரு தடவை ஷைகு நிஜாமுத்தீன், தம் ஊரிலிருந்து அஜூதனுக்குப் புறப்பட்ட பொழுது, கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்த அவரின் அண்டை வீட்டினர், தமக்கு பாபா அவர்களிடம் ஒரு தஃவீஸ் எழுதி வாங்கி வருமாறு வேண்டிக் கொண்டனர். இதனை ஷைகு நிஜாமுத்தீன், பாபா அவர்களிடம் எடுத்துரைத்த பொழுது, ''நீரே என் சார்பில் அவருக்கு ஒரு தஃவீஸ் எழுதிக் கொடும்'' என்று பணித்தனர். உடனே ஷைகு நிஜாமுத்தீன், ''அல்லாஹுஷ் ஷாஃபீ, அல்லாஹுல் காஃபீ, அல்லாஹுல் மஆஃபீ'' என்று எழுதி பாபாவிடம் கொடுக்க, பாபா அதனைத் தம் கையால் வாங்கிப் படித்து விட்டு, மடித்து ஷைகு நிஜாமுத்தீனிடம் கொடுத்து, அதனை அவரின் அண்டை வீட்டுக்காரரிடம் கொடுக்குமாறு பணித்தார்கள்.

ஒரு தடவை பாபா அவர்கள், கடுமையான நோய்வாய்ப்பட்ட பொழுது, அவர்கள் தம் ஜமாஅத் கானாவில் இருந்தவர்களிடம் தமக்கு நலன் ஏற்பட, சூராஃபாத்திஹாவை ஓரிலட்சம் தடவை ஓதுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

பாபா அவர்கள் அடிக்கடி ஊருக்கு வெளியே இருந்த அடக்க இடத்திற்குச் சென்று பிரார்த்தனை செய்துவிட்டு வருவர். ஒரு தடவை அவர்கள் பெரிதும் நோய் வாய்ப்பட்ட பொழுது, ஷைகு நிஜாமுத்தீனையும், ஏனையோரையும் அழைத்து, ஊருக்கு வெளியேயுள்ள அடக்க இடத்திற்குச் சென்று தம்முடைய உடல் நலனிற்காக இறைஞ்சி விட்டு வருமாறு கூறினர். அவ்வாறே அவர்கள் உணவுப் பொருட்களுடன் அங்கு சென்று சில நாட்கள் தங்கியிருந்து, இறைஞ்சிவிட்டு வந்த பொழுது, ''தங்களுடைய இறைஞ்சுதலினால் எனக்கு யாதொரு நலனும் ஏற்பட வில்லையே'' என்று கூறினர் பாபா. அது கேட்டு ஷைகு நிஜாமுத்தீன் வாயடைத்து நின்ற பொழுது, அவரின் அருகே நின்று கொண்டிருந்த அலீ பிஹாரி என்பவர் பாபா அவர்களை நோக்கி, ''நாங்களோ தூய்மை யற்றவர்கள். தாங்களோ தூய்மையாளர்கள். எவ்வாறு தூய்மை யற்றவர்களின் இறைஞ்சுதலால் தூய்மையாளர்களுக்குப் பலன் ஏற்படப் போகிறது?'' என்று கூறினார். அவர் கூறியது பாபா அவர்களின் செவியில்



சரியாக விழாததால் ஷைகு நிஜாமுத்தீன், அலீ பிஹாரீ கூறியதைத் திரும்பவும் எடுத்துரைத்தார். அப்பொழுது பாபா அவர்கள் ஷைகு நிஜாமுத்தீனை நோக்கி, ''உங்களுடைய அனைத்து இறைஞ்சுதல் களையும் ஏற்றருளுமாறு நான் இறைஞ்சிவிட்டேன். நீர் இப்பொழுது மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக்கையும் அழைத்துக் கொண்டு, அங்குச் சென்று இறைஞ்சி விட்டு வாரும்'' என்று கூறித் தம்முடைய 'அஸா'வை எடுத்து அவரிடம் கொடுத்தனர். அவ்விதமே அவர்கள் இருவரும் அங்குச் சென்று, ஓரிரவு தங்கி இறைஞ்சி விட்டு வந்த பொழுது ''உங்களின் இறைஞ்சுதல் நற்பலனளித்தது'' என்று கூறி அவர்களைப் புகழ்ந்தனர் பாபா.

ஆன்மீகப் பாட்டையில் அடியெடுத்து வைப்பவர்கள் பாபா அவர்களின் ஜமாஅத் கானாவிற்குள் நுழைந்து, தம்மைச் சீடராக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டின், அவர்களின் தகுதியை உணர்ந்து பாபா அவர்கள், அவர்களைத் தம் ஜமாஅத் கானாவில் சேர்த்துக் கொள்ளவோ, சேர்த்துக் கொள்ளாமல் இருக்கவோ செய்து வந்தனர். பாபா அவர்கள் ஒருவரைத் தம் சீடர் குழுவில் சேர்த்துக் கொள்ளும் சடங்கை மிகவும் சீர்மையாகவும், எளிமையாகவும் செய்வர். முதலில் அவரை சூரா ஃபாத்திஹாவையும், சூரா இக்லாஸையும், இன்னும் சில சூராக் களையும் ஓதுமாறு கூறுவர். அவர் அவற்றை ஓதி முடித்ததும், தமக்கும், தம் ஆன்மீகக் கொடி வழியின் முன்னோர்களுக்கும், பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் அடி பணிந்து, விசுவாசமாக நடப்பதாக உறுதிப் பிரமாணம் செய்யுமாறு அவரிடம் கூறுவர். அவர் அவ்விதமே செய்து முடித்ததும், பாபா அவர்கள் அவரை நோக்கி ''நீர் உம்முடைய கரங் களையும், கால்களையும், கண்களையும் கட்டுப்பாட்டுடன் பேணிப் பாதுகாத்து வருவதுடன், 'ஷரீஅத்'தைப் பேணி நடப்பதாக அல்லாஹ் விடம் உறுதிப் பிரமாணம் செய்து தருவீராக!'' என்று கூறுவர். அவ்வாறே அவர் செய்து முடித்ததும், 'வ லிபாஸுத் தக்வா ஃதாலிக்க கைர்; வல் ஆக்கிபத்து லில் முத்தகீன்' (இதுவே இறையச்சத்தின் உடுப்பாகும். மறுமையின் பலன், பயபக்தி உடையவர்களுக்கேயாகும்) என்று கூறிய வண்ணம் பாபா அவர்கள், அவருக்குக் கிர்க்காவை அணிவிப்பர். அதன்பின் அவர்கள் அவரை நோக்கி, எவருக்கும் கைகளாலோ, கண் களாலோ, நாவாலோ எவ்விதத் தீமையும் விளைவிக்கக் கூடா தென்றும், மனத்தை அல்லாஹ்வின் நினைவிலேயே செலுத்தி, அவனையே அல்லும் பகலும் தியானித்து வரவேண்டுமென்றும், தீய எண்ணங்களை உள்ளத்தில் புகவிடாது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்றும் அறிவுறுத்துவர்.

சீடராகச் சேர எவர் வரினும், அவரின் தலை முடியைச் சிரைத்து விடுவது வழக்கமாக இருந்தது. அப் பணியைச் சிலபொழுது மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் செய்து வந்தார். தலைமுடி நீக்குவது ஒருவர் இறை வழியில் அனைத்தையும் தியாகம் செய்வதான வெளிப்படை அறிகுறியாகக் கருதப்பட்டு வந்தது.

மத்ரஸாவில் உயர்தர மார்க்கக் கல்வி பயின்று வந்த நஸீர் என்பவர், பாபா அவர்களின் சீடர் குழுவில் சேர்வதற்காக, அவர்களின் ஜமாஅத் கானா வந்தார். அப்பொழுது அவரின் தலைமுடி சிரைக்கப்பட்ட பொழுது, அவருக்கு என்னவோ மாதிரியாக இருந்தது. ஒருநாள் ஒரு யோகியைச் சந்தித்து, தலைமுடி விரைவில் வளர ஏதாவது மருந்து கூறுமாறு வேண்டினாராம். ஆனால், இதற்குச் சில நாட்களுக்குப் பின் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களின் பேரர், காஜா வஹீதுத்தீன் வந்து ஜமாஅத் கானாவில் சேர்ந்தபொழுது, அவரின் தலை முடியும் மழிக்கப்பட்ட பொழுது, ''இத்துணை பெரிய மகானின் வழித் தோன்றலுக்கே இவ்வாறு செய்யப்படும் பொழுது நாம் எம்மாத்திரம்?'' என்று கூறி மன நிறைவு பெற்றார் அவர்.

பாபா அவர்களின் இறைஞ்சுதலும், ஆசியும் வேண்டி, பிரச்சினைகளைச் சுமந்துகொண்டு, அவர்களின் ஜமாஅத் கானாவுக்கு வருவோர் அனைவரும், பாபாவுக்குக் காணிக்கை செலுத்துவதற்காக ஏதாவதொன்றைத் தட்டுடன் சுமந்து கொண்டே வந்தனர். தம்மைக் காண வருவோர்களுக்கு, தமக்கு வந்த காணிக்கைப் பொருள்களில் ஏதாவதொன்றை எடுத்துக் கொடுப்பதை பாபா அவர்கள், தங்களின் நீங்காத வழக்கமாகக் கொண்டிருந்தனர். வந்த காணிக்கைப் பொருள்களை ஜமாஅத் கானாவில் உள்ளவர்களுக்குப் பங்கு வைத்துக் கொடுக்கும் பணியை, மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் செய்து வந்தார். அன்று வந்தவற்றை அன்றே பங்கு வைத்துக் கொடுத்து விடுமாறும், அடுத்த நாளைக்கென யாதொன்றையும் மீதம் வைக்கக்கூடாதென்றும், அவ்விதம் செய்வது இறையருளில் உள்ள நம்பிக்கைக்கு இழுக்கை உண்டு பண்ணும் என்றும், அது இறையாதரவுக்கு (தவக்குலுக்கு) மாற்றமானதென்றும் பாபா அவர்கள் கண்டிப்பான உத்தரவிட்டிருந்தனர்.

அஜோதனிலிருந்து சற்றுத் தொலைவிலேயுள்ள மூல்த்தானில், ஷைகு பஹாவுத்தீன் ஜகரிய்யா (ரஹ்) அவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மீது பாபா அவர்கள் அளவற்ற மதிப்பு வைத்திருந்தனர் அவர்களைக் குறிப்பிட நேரும் பொழுதெல்லாம், 'ஷைகுல் இஸ்லாம்' என மரியாதையுடன் குறிப்பிட்டு வந்தனர். சுஹ்ரவர்தி தரீக்காவின் மூலபீடமாகிய அவர்களின் கான்காஹ்வுக்கும், சிஷ்தி தரீக்காவின் மூலபீடமாகிய பாபா அவர்களின்



ஜமாஅத் கானாவிற்கும், பெரிதும் வேற்றுமை இருந்தது. ஷைகு பஹாவுத்தீன் ஜகரிய்யா (ரஹ்) அவர்களின் கான்காஹ்வோ பெரிய கட்டடத்தில் அமையப் பெற்றிருந்தது. அங்கு வசிப்பவர்களுக்கு தனித்தனி அறைகள் கொடுக்கப்பட்டிருந்தன. ஷைகு அவர்கள் எவருக்கு அனுமதி வழங்குகிறார்களோ, அவருக்கு மட்டுமே அங்கு தங்க அனுமதியளிக்கப்பட்டது. உயரிய உணவு அங்கு பரிமாறப்பட்டது. அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே அங்கு உணவுண்டனர். பொது மக்கள் அங்கு வருவதை ஷைகு பஹாவுத்தீன் ஜகரிய்யா (ரஹ்) அவர்கள் அனுமதிக்கவில்லை.

பேட்டி நேரம் என ஒரு நேரத்தை ஒதுக்கி அந்நேரத்திலேயே அவர்கள் தாம் விரும்பும் நபருக்கு மட்டும் பேட்டியளித்து வந்தனர். மற்ற நேரங்களில் இல்லை. கான்காஹ்விற்கென தனியாகத் தானியக் களஞ்சியமும், கருவூலமும் இருந்தன. அவற்றில் தானியங்களும் பணமும் குவிந்து கிடந்தன.

ஆனால் பாபா அவர்களின் ஜமாஅத் கானாவோ, நள்ளிரவு வரையில் திறந்திருந்தது. எவர் வேண்டுமானாலும் அங்கு வரலாம். வருபவர்களை உபசரித்து உணவளிப்பதை அங்குள்ளோர் தம் கடமையாகக் கொண்டிருந்தனர். விருந்தினர்களை உபசரிக்க உணவில்லையெனில், பாபா அவர்கள் தம் தொழுகை விரிப்பையோ அல்லது தம் மனைவியின் போர்வையையோ விற்று வரச் செய்து, உணவு சமைத்து விருந்தினருக்கு உணவு அளிக்க ஏற்பாடு செய்வர். இவ்விதச் சூழலிலும் அவர்கள், அரசர்களிடமிருந்தோ, அமைச்சர்களிடமிருந்தோ வரும் எவ்வித அன்பளிப்பையும் ஏற்றுக் கொள்ளாத மனோ நிலையைப் பெற்றிருந்தனர். அவ்விதம் தாம் மட்டும் இருந்ததோடல்லாது, தம் சீடர்களையும் நோக்கி, ''நீங்கள் ஆன்மீகத்தில் உச்சமான படித்தரத்தை எய்த விரும்பின், அரசர்களுடனோ, அரசாங்க அதிகாரிகளுடனோ தொடர்பு கொள்ளாதிருங்கள்'' என்று அறிவுரை பகர்ந்து வந்தார்கள்.

சையிதி மௌலானா என்பவர் டில்லிக்குச் செல்ல பாபா அவர்களிடம் அனுமதி வேண்டிய பொழுது, அவருக்கு அரை மனத்தோடு அனுமதி வழங்கிய பாபா அவர்கள், அவரை நோக்கி, ''ஆனால் ஒன்றை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளும். அரசர்களுடனோ, பிரபுக்களுடனோ, எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம். அவர்கள் உம் இருப்பிடம் வருவதை, பெரிய பீடை என்று கருதுவீராக! அரசர்களுடனும், பிரபுக்களுடனும் தொடர்பு கொள்ளும் எந்த தர்வேஷும் உருப்படமாட்டான். அழிந்தே விட்டான்'' என்று அருள் எச்சரிக்கை பகர்ந்தனர். ஆனால் அவரோ, அந்த அருள் எச்சரிக்கையை மதித்து நடக்காததன் காரணமாகப் பெரிதும் இழிவுக்கு இலக்கானார்.

பாபா அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று அவர்களைச் சந்திக்க விரும்பினார் சுல்தான் நாஸிருத்தீன். ஆனால், அவரை அவ்விதம் செய்யா வண்ணம் தடுத்துவிட்டார் அவரின் அமைச்சர் உலுக்கான். பின்னர் ஒரு பஞ்சம் ஏற்பட்ட பொழுது, தாம் பாபா அவர்களை அணுகி மழை வேண்டி இறைஞ்சுமாறு கேட்டு வரத் தமக்கு அனுமதியளிக்குமாறு சுல்தானை வேண்டினார் அமைச்சர். அவ்விதமே செய்துவர சுல்தான் அனுமதியளித்த பொழுது, அவர் அஜுூதன் வந்து பாபா அவர்களின் கால்களைத் தொட்டு முத்தமிட்டு, தாம் கொண்டு வந்த காணிக்கைகளான பணமுடிப்புகளையும், நான்கு கிராமங்களுக்கான பத்திரங்களையும், அவர்களின் காலடியில் வைத்து, ''பணம் இங்குள்ள தர்வேஷ்களுக்கு; கிராமங்கள் தங்களுக்கு' என்று வினயமாக கூறி பொழுது, ''பணத்தை தர்வேஷ்களுக்குப் பங்கு வைத்துக் கொடுத்து விடும். கிராமங்களுக்கான பத்திரங்களை எடுத்துச் செல்லும். அவை எனக்கு வேண்டாம். அவை தேவைப்பட்டோர் ஏராளமானோர் இருக்கின்றனர். அவர்களுக்கு அவற்றைக் கொடும்'' என்று கூறினார்கள் அவர்கள்.

மற்றொரு தடவை அரசாங்க அதிகாரி ஒருவர், அவர்களுக்கு இது போன்று பொற்காசுகளையும், கிராமங்களையும் காணிக்கை வழங்க முன் வந்த பொழுது, ''நான் இவற்றை ஏற்றுக் கொள்ளின், மக்கள் என்னை தர்வேஷ் என்று கூறமாட்டார்கள். மாறாக, தனவான் என்றும், ஜமீன்தார் என்றும் அழைப்பார்கள். நான் இறைவனின் நல்லடியார்களின் கண்களில் விழிக்க இயலாது போய்விடும்'' என்று கூறி, அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர்.

சிலபொழுது அவர்கள் ஏதேனும் சன்மானங்களை ஏற்றுக் கொள்வார்களாயின், அவற்றை வறிஞர்களுக்கும், தர்வேஷ்களுக்கும் விநியோகம் செய்து விட்டே மறுவேலை பார்ப்பர். தமக்குக் காணிக்கையாக வரும் பழங்களையும், தின்பண்டங்களையும், ஏழைச் சிறுவர் சிறுமியருக்கு வாரி, வாரி வழங்கி மகிழ்வர். ''அல்லாஹ்வின் பாதையில் எத்துணை அளவு அதிகமாகச் செலவு செய்யினும், அது இஸ்லாஃப் (கடப்பு) ஆகாது. வேறு வழியில் செலவு செய்வதே இஸ்ராஃப் (கடப்பு) ஆகும்'' என்று அவர்கள் அடிக்கடி கூறுவர்.

உலுக்கான், கியாஸுூத்தீன் பல்பன் என்ற பெயருடன் டில்லி அரியணை ஏறிய பொழுது, அவர்களுக்குக் காணிக்கையாக 'தங்கா'க்களை பொழுதடையும் நேரத்தில் அனுப்பி வைத்த பொழுது, அவற்றை வேண்டா வெறுப்போடு ஏற்றுக் கொண்ட அவர்கள், உடனே மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக்கை அழைத்து, அவற்றை ஏழை, எளியவர்களுக்குப் பங்கு வைத்துக் கொடுக்குமாறு பணித்தனர். அவ்



விதமே செய்த அவர், ஏதேனும் நாணயம் கீழே கிடக்கிறதா என்பதை விளக்கைக் கொண்டு வந்து தேடிப் பார்த்த பொழுது, ஒரு நாணயம் ஒரு மூலையில் கிடப்பதைக் கண்டு, அதை எடுத்து, காலையில் எவரேனும் வரின் கொடுக்கலாமென்று தம் தொப்பியில் வைத்துக் கொண்டார்.

இஷாத் தொழுகை தொழுவிப்பதற்காக பாபா அவர்கள் பள்ளிவாயிலுக்கு வந்த பொழுது, இமாமாக நின்று அவர்கள் மூன்று முறை தக்பீர் கட்டி விட்டுவிட்டார்கள். அவர்களின் மனத்தைத் தொழுகையில் ஒருமைப்படுத்த இயலாது போய்விட்டது. அப்பொழுது பாபா அவர்கள் திரும்பி, தம் பின்னால் நின்று கொண்டிருந்த மௌலானா பத்ருத்தீனை நோக்கி, ''தங்காக்கள் அனைத்தையும் விநியோகம் செய்து விட்டீரா?'' என்று வினவினர். ''ஆம்; ஆனால் ஒரே ஒரு தங்கா மட்டும் மிச்சம் உள்ளது'' என்று பதிலுரைத்தார் அவர். அதுகேட்ட பாபா அவர்கள், அதனை அவரிடமிருந்து பெற்று வெஞ்சினத்துடன் வெளியே வீசி எறிந்தனர். அன்றிரவு முழுவதும் பாபா அவர்கள் சரியாக உறங்கவில்லை. தாம் அந்த நாணயத்தைத் தொட்டதற்காக அவர்கள் வருந்திக் கொண்டிருந்தார்கள்.

பல்பன், சுல்தான் நஸீருத்தீனின் கீழ், முதல் அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுதே, தம் உள்ளின் உள்ளே, தாமே அடுத்து அரியணை ஏறவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்ததாகவும் அந்த எண்ணத்தோடு அவர் ஒரு தடவை பாபா அவர்களைக் காண வந்த பொழுது, அவரின் உள்ளத்தைத் தம் உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட பாபா அவர்கள், அவரை ஆசீர்வதித்ததாகவும், அதன் காரணமாகவே அவர் அரியணை ஏறினார் என்றும் கூறப்படுகிறது.

அவர் அரியணை ஏறிய பின் அவர் பாபா அவர்களைத் தரிசிக்க, அவர்களின் ஜமாஅத் கானாவுக்கு வந்தபொழுது, ஜமாஅத் கானா, மக்கள் வெள்ளத்தால் நிறைந்து வழிந்தது. அது கண்டு பாபா அவர்கள் சிறிது எரிச்சலுற்ற பொழுது, ''எரிச்சலுற வேண்டாம்'' என்று அசரீரி ஒன்று கூறியதென்றும், அதிலிருந்து தம்மைக் காண எவ்வளவு பேர் வந்த போதினும் பாபா அவர்கள், எரிச்சலுறுவதில்லை என்றும், 'ஸியருல் அக்தாப்' என்ற நூலில் பொறிக்கப்பட்டுள்ளது.

சுல்தான் பல்பன், பாபா அவர்களின் தாசானு தாசராக இருந்த போதினும், பாபா அவர்கள், அவருடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளாது ஒதுங்கியே இருந்தனர். ஒரு தடவை துன்பத்தில் உழன்ற ஒருவர், பாபா அவர்களை அணுகி, தம் துன்பத்தை எடுத்துரைத்து சுல்தான் பல்பனுக்கு ஒரு பரிந்துரை மடல் எழுதித் தரின், தம் துன்பமெல்லாம்

நீங்கிவிடும் என்று பெரிதும் வேண்டிக் கொண்டார். துவக்கத்தில் மறுத்த அவர்கள், பின்னர் அவரின் தொந்தரவு தாங்க இயலாது, அவருக்கு உதவி செய்யும் நோக்குடன் சுல்தான் பல்பனுக்கு ஒரு மடல் எழுதி, அவரிடம் கொடுத்தனர். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

''நான் இவர் விஷயத்தை முதலில் அல்லாஹ்விடம் சமர்ப்பித்து, பின்னர் உம்மிடம் தெரியப்படுத்துகிறேன். ''நீர் இவருக்கு ஏதாவது உதவி செய்யின், உண்மையில் இவருக்கு உதவியவன் அல்லாஹ்வே ஆவான். அதற்கான பலனை நீர் எய்தப் பெறுவீர். அதற்கு மாறாக நீர் இவருக்கு யாதும் உதவி செய்யாவிடின், அவ்விதம் செய்யாது உம்மைத் தடுத்தவன் அல்லாஹ்வே ஆவான். அதற்காக நீர் குற்றம் பிடிக்கப்படமாட்டீர்!'

இவ்வாசகங்களிலுள்ள தன் மதிப்பையும், தாழ்மையையும் பாருங்கள். தன் மதிப்பு என்று கூறிக் கொண்டு, தற்பெருமையில் உழல் பவர்கள் போன்றில்லாது, பாபா அவர்கள் தாழ்மையின் திருவுருவாகவே விளங்கினர்.

ஒரு தடவை அவர்கள் தம் கால்களில் வீக்கம் ஏற்பட்ட பொழுது, ஒரு கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்தனர். அப்பொழுது அவர்களின் மாணவர்கள் கீழே அமர்ந்திருப்பதைக் கண்ட பாபா அவர்கள், ''எனக்குக் கால்களில் வீக்கம் ஏற்பட்டிருப்பதனால் கால் மடித்து அமர இயலாததன் காரணமாகவே கட்டிலில் அமர்ந்திருக்கிறேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்'' என்று கூறினர்.

மற்றொரு தடவை அவர்களின் இல்லத்திற்கு சில தர்வேஷ்கள் வந்தபொழுது, வீட்டில் சோளத்தைத் தவிர வேறு யாதோர் உணவும் இல்லை என்று கூறப்பட்ட பொழுது அவர்களே வீட்டிற்குள் சென்று, சோளத்தை அரைத்து, ரொட்டி தயாரித்து வந்து அவர்கள் முன் வைத்து, 'உண்ணுக! உண்ணுக!!' என்று உபசரித்து நின்றனர்.

தாழ்மையை மேற்கொள்ளுமாறு அவர்கள் தம் ஆன்மீக மாணவர் களுக்கு அருளுரை பகர்ந்து வந்தார்கள். அதற்கு ஆதரவாக ஷைகு அபூ ஸயீது அபுல் கைர் (ரஹ்) அவர்களின் வரலாற்றிலிருந்து ஓர் இனிய நிகழ்ச்சியையும், அவர்கள் தம் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

ஒருநாள் ஷைகு அபூ ஸயீது அபுல் கைர் (ரஹ்) அவர்கள் குதிரை மீது இவர்ந்து சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது ஒருவன் ஓடோடி வந்து, அவர்களின் முழங்காலை முத்தமிட முயன்றான். அது கண்ட அவர்கள் 'இன்னும் கீழே' என்று கூறினர். அவன் அவர்களின் பாதத்தை முத்தமிட்டான். அப்பொழுது ஷைகு அவர்கள் அவனை நோக்கி



'இன்னும் கீழே' என்று கூறினர். அவன் குதிரையின் குளம்பை முத்த மிட்டான். 'இன்னும் கீழே' என்று ஷைகு அவர்கள் கூற, அவன் பூமியை முத்தமிட்டான். அப்பொழுது ஷைகு அவர்கள் அவனை நோக்கி 'இன்னும் கீழே', 'இன்னும் கீழே' என்று நான் கூறியதன் நோக்கம், நீ எனக்கு மரியாதை செய்ய வேண்டுமென்றல்ல. நீ எவ்வளவுக் கெவ்வளவு தாழ்மையை மேற்கொண்டாயோ அவ்வளவுக்கவ்வளவு நீ ஆன்மீகப் படித்தரத்தில் உயர்ந்து செல்வாய் என்பதை உனக்கு அறிவுறுத்துவதற் காகவே அவ்வாறு கூறினேன்'' என்று பகர்ந்தனர்.

பாபா அவர்கள் தம் மாணவர்களுக்குப் பல்வேறு விஷயங்கள் பற்றியும் அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார்கள். ''நீங்கள் அகில உலகத்தையும், உங்களுக்கு விரோதியாக ஆக்கிக் கொள்ள விரும்பின், பெருமையை மேற்கொள்ளுங்கள்'' என்று கூறிய அவர்கள், ''பெருமைக் காரர்களுடன், பெருமையுடன் தான் நடந்து கொள்ள வேண்டும்'' என்றும் எடுத்துரைத்தார்கள்.

எதிரிகளைப் பற்றி அவர்கள் கூறும் பொழுது, ''உன்னைக் கண்டு எவன் அஞ்சுகின்றானோ, அவனுக்கு நீயும் அஞ்சுவாயாக! உன்னுடைய எதிரி, உன்னுடன் எவ்வளவு தான் நட்புறவுடன் பழகியபோதினும், அவனுடன், எச்சரிக்கையாய் இரு'' என்று கூறியதுடன் ''உன்னுடைய எதிரியுடன் ஆலோசனை கலந்து, அவனைத் தோற்கடிப்பாயாக! உன்னுடைய நண்பர்களுடன் மென்மையாகப் பழகி, அவர்களுடைய உள்ளங்களைக் கவர்வாயாக!'' என்று அவர்கள் அறிவுரை பகர்ந்தார்கள்.

ஆன்மீக வாழ்வின் முக்கிய நோக்கமே, மக்களின் உள்ளத்தில் அன்பை விதைப்பதேயாகும் என்று பாபா அவர்கள் கருத்துக் கொண் டிருந்தார்கள். ஒருநாள் ஒருவர் பாபா அவர்களிடம் வந்து, அவர்களுக்கு ஒரு கத்தரியை அன்பளிப்புச் செய்தார். அதுகண்ட பாபா அவர்கள் சிரித்துக் கொண்டு, ''எனக்கு ஊசியை அன்பளிப்பாகத் தாருங்கள். நான் பிரிந்ததை ஒன்று சேர்த்து இணைப்பவனேயன்றி ஒட்டிக் கொண்டிருப்பதை வெட்டித் துண்டு செய்பவனவல்ல'' என்று கூறி னார்கள்.

தம் மாணவர்கள் இறையருளில் மாசு மறுவற்ற பரிபூரண நம்பிக்கை கொண்டவர்களாக விளங்க வேண்டுமென்று பாபா அவர்கள் விரும்பினர். ஒருநாள் ஒரு கழிமீது சாய்ந்து கொண்டிருந்த அவர்கள், திடீரென அக் கழியைத் தூக்கி எறிந்தனர். இதைக் கண்ட ஷைகு நிஜா முத்தீனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. அவர்கள் பாபா அவர் களை அணுகி, அதற்கான காரணத்தை வினவிய பொழுது, ''இறை

வனைத் தவிர்த்த வேறொன்றின் மீது நான் ஆதரவு வைத்ததன் காரணமாக இஅறவன் என்னைக் கண்டித்தான்'' என்று பதில் கூறினர் பாபா.

ஒரு நாள் பாபா அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''எழுநூறு பக்கீர்களிடம் நான்கு கேள்விகள் கேட்கப்பட்டன. அவர்கள் அனைவரும் ஒருமித்து, அவற்றிற்கு ஒரே விதமான விடைகளையே பகர்ந்தனர்.

''அறிவாளி என்றால் யார்?'' என்று அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''இவ் உலகைத் துறந்து வாழ்பவன்'' என்று அவர்கள் அனைவரும் ஒருமித்து விடை பகர்ந்தனர்.

''மகான் என்றால் யார்?'' என்று அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''சலனமில்லாது ஒரே வித மனோ நிலையுடன் எப்பொழுதும் இருப்பவன்'' என்று அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தாற்போல் பதில் மொழிந்தார்கள்.

''மனிதர்களில் மிகப்பெரும் செல்வன் யார்?'' என்று அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''மனநிறைவுடன் வாழ்பவன்'' என்று அவர்கள் அனைவரும் மறுமொழி பகர்ந்தார்கள்.

''பேராசைக்காரன் யார்?'' என்று அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''மனநிறைவு இல்லாதவன்'' என்று அவர்கள் அனைவரும் பதில் கூறினர்'' என்று பாபா அவர்கள் எடுத்துரைத்தனர்.

அவர்கள் தம் மாணவர்களை நோக்கி ''உங்களுக்கு எதுவேண்டினும், அதனை இறைவனிடமே கேட்க வேண்டு''மென்று அறிவுரை பகர்ந்த பின்னர், ''ஏந்திய கரங்களை வெறுமனே திருப்பி அனுப்ப இறைவன் நாணமுறுகிறான்'' என்றும் கூறினர்.

உங்களுடைய நாட்டம் நிறைவேற, சுப்ஹில் சுன்னத்துத் தொழுகைக்கும் ஃபர்ளு தொழுகைக்கும், இடையில், சூரா பகராவை மூன்று நாட்கள் தொடர்ந்து ஓதி வாருங்கள் என்று கூறினர். அல்லது எழுபது தடவை சூரா அன்ஆமை ஓதி இறைஞ்சுங்கள் என்றும், அறிவுரை பகர்ந்தார்கள். இரணம் விரிவாக 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். யா தாயிமுல் இஸ்ஸு வல்முல்க்கி வல் பகாயி, யா தல் ஜலாலி வல் ஜஃதி வல்ஃபழ்லி வல் அதாயி யா வதூது ஃதுல் அர்ஷில் மஜீதி யா ஃப ஆலுன் லிமா யுரீது' என்று அதிகமதிகமாக ஓதி வருமாறும் அவர்கள் அருளுரை மொழிந்தார்கள்.

''வீண்பேச்சைத் தவிர்ந்து கொள்ளுமாறும், பேசினால் இறைவன் பற்றிய பேச்சுக்களையே பேசுமாறும் தம் மாணவர்களிடம் கூறிய பாபா



அவர்கள், புத்தாடைகளை அணியும் ஒரு தர்வேஷ் கஃபன் துணியையே அணிகின்றானே அன்றி வேறில்லை'' என்றும் கூறினர்.

ஜகாத் பற்றி அவர்கள் கூறும் பொழுது, ''ஜகாத் மூன்று வகைப் படும். அவை 1) ஜகாத்தெ-ஷரீஅத் 2) ஜகாத்தெ-தரீக்கத் 3) ஜகாத்தெ-ஹகீகத் ஆகியவையாம். இவற்றில் ஜகாத்தெ ஷரீஅத் என்பது, இருபது பாகங்களில், ஐந்து பாகங்களை அறம் செய்வதாகும். ஜகாத்தெ தரீக்கத் என்பது இருபது பாகங்களில், ஐந்து பாகங்களை மட்டும் தனக்கென வைத்துக் கொண்டு, மீதி பதினைந்து பாகங்களை அறம் செய்வதாகும். ஜகாத்தெ ஹகீகத் என்பது, தனக்கென ஒன்றையும் வைத்துக் கொள்ளாது அனைத்தையும் அறம் செய்துவிடுவதாகும்'' என்றும் விரித்தோதினர்.

''ஒருவன் மார்க்கத்தில் விதிக்கப்பட்ட வண்ணம், தன்னுடைய ஜகாத்தை வழங்காவிடின், அவனுடைய உடைமையில் விருத்தி ஏற்படா வண்ணம் அல்லாஹ் தடுத்து விடுகிறான். ஒருவன் குர்பானி கொடுக்க வில்லையாயின், அவனிடமிருந்து அல்லாஹ் சுகத்தை நீக்கி விடுகிறான். ஒருவன் தொழுகையை விட்டு விடுவானாயின், அவன் இறக்கும் தறுவாயில் அவனிடமிருந்து ஈமானை அல்லாஹ் பறித்து விடுகிறான்'' என்றும் அவர்கள் கூறினர்.

'ஷரீஅத்'தைப் பின்பற்றுவதில் மிகவும் பேணுதலாக இருந்த அவர்கள், அதற்கு அணுவத்தனையும் மாறாகத் தம் வாணாளில் ஒரு போதேனும் நடந்ததில்லை. சில பொழுது மயக்கமுற்ற நிலையில் இருக்கும் அவர்கள், தொழுகை நேரம் வந்ததும் விழிப்புற்றுத் தொழத் துவங்கி விடுவார்கள். இறைவன் படைத்த பதினெட்டாயிரம் உலகங் களிலும், அடிப்படையாகவும், ஆணிவேராகவும் அமைந்தது தொழுகையே என்று அவர்கள் கூறுவர். ''இருவராக இருந்த போதினும், ஜமாஅத்தாகத் தொழுவதே மாண்புடைத்து'' என்று அவர்கள் மொழிந்தனர்.

மார்க்க மேதைகளான உலமாக்களையும், ஆன்மீக மேதைகளான பக்கீர்களையும் அவர்கள் ஒப்பிட்டுப் பேசும் பொழுது, ''உலமாக்கள் பொதுமக்களை விட மேலானவர்கள். பக்கீர்களோ அனைவரிலும் மேலானவர்கள். விண்மீன்களிடையே தண்மதி மாண்புடன் ஒளிர்வது போன்று, உலமாக்களிடையே பக்கீர்கள் மாண்பு பெற்று விளங்கு கின்றனர்'' என்று கூறினர்.

'ஸமஅ' என்ற பேரின்ப இசை நிகழ்ச்சியைப் பெரிதும் விரும்பிய பாபா அவர்கள் ''ஸமஅ உள்ளத்தை நெகிழ்வித்து இறைகாதல் என்ற நெருப்பால் அதனைத் தகிக்கச் செய்கிறது'' என்று கூறினர். மார்க்க

மேதைகள் அதனை வெறுக்கின்றனரே என்று கூறப்பட்ட பொழுது, ''சுப்ஹானல்லாஹ்! ஒருவர் அதனால் எரிந்து சாம்பலாகிறார். மற்றொருவர் அதனைக் கூடாது என்று கூறுகிறார்'' என்று வியப்பு மொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

குர்ஆன் ஓதுவதைப் பெரிதும் புகழ்ந்து பேசிய அவர்கள், ''அதைப் போன்ற நன்மை வேறு எவ்வணக்கத்திலும் இல்லை. குர்ஆனை ஓதுபவன், இறைவனுடன் உரையாட வல்லவோ செய்கிறான். இதைப் போன்ற நற்பேறு வேறு என்ன உள்ளது?'' என்று கூறினர்.

அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்போ அளப்பரியதாகும். உரையாடலின் போது, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருப்பெயர் குறிப்பிடப்படும் போதெல்லாம் அவர்கள் தேம்பித் தேம்பி அழுவார்கள். ஒரு தடவை அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நிர்யாணமடைந்ததை எடுத்துரைத்து வந்த பொழுது, திடீரென உணர்ச்சி மீக்குற்றுப் பெரும் சப்தமிட்ட வண்ணம், கைகளை ஓங்கித் தரையிலே அறைந்து கொண்டு, மெய்மறந்து கீழே சாய்ந்தார்கள். பின்னர் உணர்வு பெற்று எழுந்த பொழுது, ''எவருக்காக வேண்டி அண்ட கோளங்களையெல்லாம் அல்லாஹ் படைத்தானோ, அவர்களையே தன்பால் எடுத்துக் கொண்ட பொழுது, ஏனையோரின் பிரிவு பற்றி என்ன கவலை கொள்ள வேண்டியுள்ளது? நாம் ஒரு வழிப்போக்கர். ஓர் விடுதியில் தங்கியிருப்பது போன்று இவ் உலகில் வந்து தங்கி இருக்கிறோம். மறுமைப் பயணத்தை நாம் மேற்கொள்ளு முன், அதற்கான உணவுப் பொருள்களை நாம் இங்கேயே சேகரித்துக் கொள்ள வேண்டும். அதுவே அறிவுடைமையாகும்'' என்று கூறினர்.

பாபா அவர்கள் சிறந்த ஆன்மீக ஞானியாக மட்டுமல்லாது, மாண்பு மிகு அறிஞராகவும், கல்விமானாகவும் விளங்கினர். எனினும் அதனை அவர்கள் வெளியே காட்டிக் கொள்ளாது அடக்கமாகவே இருந்தனர். கல்வி ஒருவனுக்கு அடக்கத்தையும், தாழ்மையையும் வழங்க வேண்டும். அதற்கு மாறாக, அது ஒருவனுக்குத் தற்பெருமையையும், அகங் காரத்தையும் நல்கின், அவன் எதற்காகக் கல்வி கற்றானோ, அந்த நோக்கமே சிதறுண்டு போகிறது'' என்று அவர்கள் மொழிந்தனர்.

ஒரு தடவை டில்லியின் மாபெரும் அறிஞரான மௌலானா ஜியாவுத்தீன், பாபா அவர்களைக் காண அஜூதன் வந்தார். அவர் பல கல்விகளில் விற்பன்னராக இருந்த போதினும், பிக்ஹிலும், நஹ்விலும் சிறந்த புலமை பெற்றிருக்கவில்லை. எனவே, அவை பற்றி பாபா அவர்கள் தம்மிடம் பலர் முன்னிலையில் வைத்து வினவின், தம்



நிலைமை மோசமாகிவிடுமே என்று அவர் தம் உள்ளின் உள்ளே எண்ணி அஞ்சிக் கொண்டிருந்தார். ஆனால் பாபா அவர்களோ, அவருக்குப் புலமையுள்ள கல்விகளைப் பற்றியே அவருடன் உரையாடினரே அன்றி வேறு எதுபற்றியும் அவருடன் உரையாடவில்லை. பாபா அவர்களுடன் உரையாடிவிட்டு அவர் மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் திரும் பினார். இத்தகு பண்பு பாபா அவர்களிடம் இயற்கையாகவே அமைந் திருந்தது.

பாபா அவர்களுக்கு திருக்குர்ஆனின் வெளிப்படையான, அந்தரங்க மான பொருள்பற்றி ஆழ்ந்த புலமை இருந்தது. திருக்குர்ஆனை ஆய்வதிலேயே அவர்கள் தம்முடைய அதிகமான ஆற்றலையும், நேரத்தையும் செலவழித்தார்கள். திருக்குர்ஆனை மனனம் (ஹிஃப்ளு) செய்ய விரும்புவோர், சூரா யூசுஃபிலிருந்து மனனம் செய்யத் துவங்க வேண்டும் என்று அவர்கள் கூறுவர். அவர்கள் தம் ஆன்மீக மாணவர் ஷைகு நிஜாமுத்தீனுக்கு திருக்குர்ஆனின் ஆறு 'ஜுஸ்உ'களை ஓதிக் கொடுத்தனர். அதனை பாபா அவர்கள் இனிய குரலெடுத்து ஓதுவதை ஷைகு நிஜாமுத்தீன் பிற்காலத்தில் ஒரு போதேனும் மறக்கவில்லை.

'தஸவ்வுஃப்' என்ற மெய்ஞ்ஞானம் பற்றியும், பாபா அவர்களுக்குச் சிறந்த புலமை இருந்தது. ஷைகு ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்கள் எழுதிய ஆன்மீக நூலான, 'அவாரிஃபுல் மஆரிஃப்' என்பதனை அவர்கள் பெரிதும் புகழ்ந்துரைப்பார்கள். ஒரு மாணவன் அதனைப் படித்து முடிக்காதவரை, அவனுக்கு எந்த ஷைகும் கிலாஃபத் நாமா வழங்கக் கூடாது என்று அவர்கள் கூறுவார்கள். அவர்கள் அதற்கு ஒரு சிறந்த விரிவுரை எழுதியிருப்பதாக, 'குல்ஸாரெ-அப்ரார்' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாபா அவர்கள், ஷைகு ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களை நேரில் சந்தித்துள்ளனர் என்றும், அப்பொழுது அவர்கள் தாம் எழுதிய அவாரிஃபுல் மஆரிஃபின் பிரதியை பாபா அவர்களிடம் கொடுத்து, ''இதை நீர் படியும். இதனை நான் உமக்காகவே இயற்றினேன்'' என்று அவர்கள் கூறியதாகவும், 'ஜவாஹிருல் ஃபரீதி' என்ற நூலில் பொறிக்கப் பட்டுள்ளது.

தம் ஆன்மீக ஆசான் காஜா குத்புத்தீன் பக்தியார் காக்கி (ரஹ்) அவர் களின் அன்புத்தோழர், காஜி ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்கள் எழுதிய நூல்களையும், பாபா அவர்கள் பெரிதும் விரும்பிப் படித்து வந்தனர். அதனைப் படித்து விளங்கிக் கொள்வது சிரமமாக இருந்த போதினும், அதில் ஆழிய ஆன்மீகக் கருத்துக்கள் பொதிந்து கிடந்தன. அதைப்பற்றி

ஒருவர் தம் மாணவர்களிடம் எடுத்துரைக்கும்பொழுது, ''நீங்கள் படித்த விஷயங்கள் அனைத்தும் காஜி ஹமீதுத்தீனின் நூல்களில் உள்ளன. நீங்கள் படிக்காத விஷயங்கள் அனைத்தும், அந்நூல்களில் உள்ளன. நான் படித்ததும், அவற்றில் உள்ளது. படிக்காததும் அவற்றில் உள்ளது'' என்று கூறியிருப்பதிலிருந்து, நாம் அவற்றின் மாண்பினை உணரலாம். அவற்றை ஆழ்ந்து படித்த பாபா அவர்கள், அவற்றை மிகவும் எளிமையாகத் தம் மாணவர்களுக்கு போதித்து வந்தார்கள். பாபா அவர்களிடம் ஆன்மீக இலக்கியம் பற்றிய ஒரு நூல் நிலையமே இருந்து வந்தது. அரபி இலக்கணத்திலும் அவர்கள் சிறந்த புலமை பெற்று விளங்கினார்கள்.

பாபா அவர்கள் ஓர் அறிஞராக மட்டுமல்லாது, கவிஞராகவும் சிறப்புற்று விளங்கினர். அவர்களின் எழுதுகோல் முனையிலிருந்து அரபியிலும், பார்ஸியிலும் கவிதைகள் பிரவாகம் செய்தன. ஆனால் சீக்கிய வேத நூலான குருகிரந்தில், ஷைகு ஃபரீதின் சுலோகங்கள் என்ற தலைப்புடன் உள்ள 112 சுலோகங்களும், பாபா அவர்கள் இயற்றிய சுலோகங்கள் அல்லவென்றும், அவை பாபா அவர்களின் வழித் தோன்றலும், குருநானக்கின் சமகாலத்தவருமான ஷைகு இப்ராஹீமால் இயற்றப்பட்டனவென்றும், முஸ்லிம் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பாபா அவர்களிடம் முஸ்லிம்கள் மட்டுமல்லாது, இந்துக்களும் வந்தனர். அவர்கள் அஜுதனுக்கு முதன் முதலாக வந்த பொழுது, ஜாலவித்தைகளில் பெரும்புலமை பெற்றிருந்த ஷம்பூநாத் என்பவர் தம் மாணவர் குழாத்துடன் பாபா அவர்களைக் காண வந்தார். பாபா அவர் களைக் கண்டதும், அவருக்கு ஏற்பட்ட அச்சத்திற்கும் நடுக்கத்திற்கும் அளவில்லை. அடுத்த கணம் அவர் பாபா அவர்களின் பாதாரவிந்தங் களில் தம்மை அறியாமல் வீழ்ந்தார். அதன்பின் என்ன? அவரும், அவருடைய மாணவர் குழாமும், பாபா அவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவினர்.

மற்றொரு நாள் பாபா அவர்களின் மாண்பினைச் சோதித்து அறியும் நோக்குடன், சில இந்துக்கள் முஸ்லிம் பக்கீர்கள் போன்று உடையணிந்து, பாபா அவர்களைக் காண வந்தனர். அவர்களின் உள்நோக்கைத் தம்முடைய உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட பாபா அவர்கள், அக் கூட்டத்தின் தலைவரைப் பிடித்து ஓர் அறையில் அடைக்குமாறும் ஏனை யோருக்கு உணவளிக்குமாறும், தம் மாணவர்களுக்குக் கட்டளை இட்டனர். அவ்விதமே செய்யப்பட்டது.

மூன்றாம் நாள் பாபா அவர்கள், அக் குழுவின் தலைவர் அடைக்கப் பட்டிருந்த அறைக்குச் சென்று, ''நீர் இஸ்லாத்தைத் தழுவின் நான் உம்மை விடுதலை செய்கிறேன்'' என்று அவரிடம் கூறினர். இதைக் கேட்டு பாபா அவர்களின் மாணவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. ''என்ன! பாபா அவர்கள், ஒரு முஸ்லிமைப் பார்த்து இஸ்லாத்தைத் தழுவு என்று கூறுகிறார்கள்'' என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால், அதுகேட்டு அக் குழுத்தலைவர் அடைந்த வியப்பும், மகிழ்ச்சியும் இவர்களைவிடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது.



பாபா அவர்களின் காலடியில் வீழ்ந்து கண்ணீர் சிந்திய அவர், ''நான் முப்பது ஆண்டுகளாக குராஸானிலும், இந்தியாவிலும் உள்ள முஸ்லிம் மகான்களின் ஜமாஅத் கானாவுக்கு, முஸ்லிம் போன்று வேடம் தரித்துச் சென்றுள்ளேன். ஆனால், ஒருவருமே என்னை எவரென இலக்குக் கண்டு கொள்ளவில்லை. தாங்கள் தாம் என்னை உண்மையில் இலக்குக் கண்டீர்கள். தங்களின் உள்ளுணர்வால் என்னை, எவனென அறிந்து கொண்டீர்கள். மகான் என்றால் தாங்கள் தாம் மகான்'' என்று கூறி வாயார்ந்து, தம் மேலங்கியைக் கழற்றி, அதன் கீழே தம் உடலில் ஒட்டிய வண்ணம் ஒளிந்து கொண்டு கிடந்த பூணூலை எடுத்து அங்கிருந்தோரிடம் காட்டி, அதனை அறுத்தெறிந்து, அடுத்தகணம் கலிமாச் சொல்லி இஸ்லாத்தைத் தழுவினார்.

பாபா அவர்களின் அருளுரைகளால் கவரப்பட்டு, பல்வேறு இராஜபுத்திரக் கூட்டத்தினரும், ஏனையோரும் இஸ்லாத்தைத் தழுவினர். இன்று அஜுதனிலும், அதன் சூழலிலும் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள், அக்கூட்டத்தினரின் வழித்தோன்றல்களே அன்றி வேறில்லை.

பாபா அவர்களின் ஆன்மீக உரைகளைக் கேட்டு மகான்களானோர் பலர். எவரையும் புறக்கணிக்காது, அவர்களை அரவணைத்து, சிஷ்தி தரீக்காவில் இணைத்து, அந்தத் தரீக்காவை இந்தியாவில் வலுப்படுத்திய பெருமை பாபா அவர்களையே சாரும். சிறு அளவில் இருந்த அதனைப் பெரிய அளவில் மக்கள் இயக்கமாக ஆக்கி, மக்களிடையே ஒரு மார்க்க விழிப்பை ஏற்படுத்தி, பாபா அவர்கள் வெற்றி கண்டார். தம்மைப் போற்றுகின்றவர்களையும், தூற்றுகின்றவர்களையும், அவர்கள் ஒரே விதமாக வரவேற்று அருளுரை பகர்ந்தார்கள்.

பாபா அவர்களின் ஆன்மீக மாணவர்களை இருவகையாகப் பிரிக்கலாம். முதல் வகையினர் ஆன்மீக அறிவைப் பெற்றுக் கொண்டு உலகாயுதத் தொழில் துறைகளில் ஈடுபட்டிருந்தவர்களாவர். இவர்களிட மிருந்து பாபா அவர்கள் எதிர்பார்த்ததெல்லாம், அவர்கள் மார்க்கத்தைப் பேணி, ஏவல்களை எடுத்தும், விலக்கல்களைத் தவிர்ந்தும் ஒழுக

வேண்டும் என்பதேயாகும். இரண்டாம் வகையினர் தங்களுடைய உடைமைகள் முழுவதையும் மட்டுமல்லாது, தங்களையே இறை வனளவில் ஒப்படைத்தவர்களாவர். அவர்களிலிருந்தே பாபா அவர்கள், தங்களின் கலீபாக்களைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களை நோக்கி பாபா அவர்கள் பின்வருமாறு அறிவுரை பகர்ந்தனர்.

1) இயந்திரம் போன்று தொழுதால் மட்டும் ஆன்மீக முன்னேற்றத்தை எய்தப் பெற இயலாது. ஆன்மாவைச் செம்மையுடன் கண்காணித்து புற வாழ்வைத் தூய்மையுறச் செய்வதிலேயே ஆன்மீக முன்னேற்றம் அடங்கியுள்ளது. மஃரிபாவை (ஆன்மீக உச்சத்தை) எய்தப் பெற வேண்டுமானால், சினம், பொறாமை, வெறுப்பு ஆகியவற்றை உள்ளத்திலிருந்து வேரறக் கிள்ளி, வீசி எறிய வேண்டும்.

2) அரசர்களோடு தொடர்பு கொண்டுள்ளவர்களால், ஆன்மீகப் படித்தரங்களை எய்தப் பெற இயலாது. அத்தொடர்பு அவர்களின் ஒழுக்கத்தைப் பலவீனப்படுத்தி, அவர்களுடைய ஆன்மாவின் சுதந்திரத்தைக் கொன்று விடுகிறது.

3) நிறுவனப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வது ஆன்மீகத் துறைகளில் மனமொன்றி ஈடுபடுவதற்கு இடையூறாக அமையும். எனவே அதனை ஏற்றுக் கொள்ளுதல் கூடாது.

4) எவரும் பிணங்கிக் கொள்ளக்கூடாது. எதிரிகளுடனும் அன்பாகவும், ஆதரவாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

5) கடமைகளை ஒழுங்குடன் நிறைவேற்ற வேண்டும்.

6) ஆன்மீகத் துறையில் அடியெடுத்து வைக்குமுன், மார்க்க அறிவு பெற்றிருப்பது இன்றியமையாததாகும்.

இவ்வாறு அறிவுரை பகர்ந்த பாபா அவர்கள், தம் மாணவர்களுக்கு ஆன்மீக நூல்களைப் படித்துக்காட்டி, விளக்கம் பகர்ந்து பரிபக்குவப் படுத்தி வந்தனர்.

தம்முடைய ஜமாஅத் கானாவுக்கு வந்து, ஆன்மீகப் பயிற்சி பெற விரும்பிய அனைவரையும், பாபா அவர்கள் வரவேற்று ஏற்றுக் கொண்டனர் என்பது நிஜாமுத்தீன் ஔலியா ஒருவரைத் தம் முன்வர அனுமதி மறுத்த பொழுது, ''என்ன! தங்களின் ஆசான் ஷைகுல் இஸ்லாம் பரீதுத்தீன் எல்லோரையும் வரவேற்றனரே!'' என்று அவர் கூறியதிலிருந்து நன்கு தெரிய வருகிறது.



பாபா அவர்கள் தம்மிடம் வருபவர்கள் அனைவரையும் ஏற்றுத் தம் ஆன்மீகக் குழுவில் இணைத்துக் கொண்ட போதினும், கிலாஃபத் வழங்குவதில் பெரிதும் எச்சரிக்கையுடன் இருந்தார்கள். கண்ட கண்ட பேர்களுக்கெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு, சில போலி ஷைகு மார்கள் கிலாஃபத் வழங்கி வந்ததை பாபா அவர்கள் பெரிதும் வெறுத் தனர். ''உண்மையான ஷைகுமார்கள் மூன்று விதமான முறைகளில் கிலாஃபத் வழங்கி வந்தார்கள். முதலாவது, ரஹ்மானி முறையாகும். அதுவே சிறப்பும், உறுதியும், இறையருளும் வாய்ந்ததாகும். இறைவனே ஷைகின் உள்ளத்தில் இன்னாருக்குக் கிலாஃபத்தைக் கொடுக்குமாறு உதிப்பை ஏற்படுத்துவதாகும். இரண்டாவது முறை, ஒரு ஷைகே, தம் மாணவர்களில் எவர் சிறந்தவர் என்று கருதுகிறாரோ, அவருக்கு கிலாஃபத் வழங்குவதாகும். ஷைகின் அம் முடிவு சரியாகவும் இருக்கலாம்; தவறாகவும் இருக்கலாம். மூன்றாவது முறை, ஒரு ஷைகு, பிறரின் பரிந்துரை மீதோ அல்லது இரக்கப்பட்டோ ஒருவருக்கு கிலாஃபத் வழங்குவதாகும்'' என்று பாபா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

ஒரு தடவை பாபா அவர்கள் தாம் கிலாஃபத் கொடுக்க விரும்பிய சிலருக்குக் கிலாஃபத் நாமா தயாரிக்குமாறு மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் (ரஹ்) அவர்களிடம் கூறினர். பாபா அவர்களுக்கு ஊழியம் புரிந்து கொண்டு நெடுங்காலமாக அவர்களுடன் இருந்த ஒருவர், தமக்கு பாபா அவர்கள் கிலாஃபத் வழங்க முன் வராததைக் கண்டு வெகுண்டு, ''ஷைகு அவர்கள் எனக்கு கிலாஃபத் தராவிட்டால் பாதகமில்லை. நானே அவர்கள் தந்தாற்போன்று ஒரு கிலாஃபத் நாமாவைத் தயார் செய்து கொண்டு, மாணவர்களைச் சேர்ப்பதில் மும்மரமாக ஈடுபடுவேன்'' என்று கூறினார். இதனை பாபா அவர்கள் கேள்வியுற்றதும், பெரிதும் அதிர்ந்து போயினர். ''இது இன்னாரால் எழுதப்பட்டது என்று எழுதி, ஒவ்வொரு கிலாஃபத் நாமாவின் அடியிலும் உம் கைச்சாத்திடும்'' என்று மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் அவர்களுக்கு அவர்கள் பணித்தார்கள்.

இவ்வாறு கிலாஃபத் நாமா வழங்கப் பெறுவதில், ஊழல் ஏற்படாமல் எச்சரிக்கை ஏற்பாடுகள் செய்த பாபா அவர்கள், பிறரின் பரிந் துரைக்காக வேண்டி, தகுதியற்றவர்களுக்கு கிலாஃபத் நாமா வழங்கா மலும், பெரிதும் எச்சரிக்கையாக இருந்தனர். பில்கிராமில் பெரிதும் செல்வாக்குடன் வாழ்ந்துவந்த மௌலானா ஃபக்ருத்தீன் ஸஃபாஹானி என்பவர் தாவூத் என்பவரை தமக்குக் கிலாஃபத் பெற்று வருமாறு பாபா அவர்களிடம் அனுப்பினார். ஆனால் பாபா அவர்களோ, அவருடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். தாவூதோ, பாபா அவர்களின் ஜமாஅத் கானாவில் சில நாட்கள் தங்கியிருந்து, பக்ருத்தீனுக்

காகப் பரிந்துரை செய்யுமாறு ஷைகு நிஜாமுத்தீன் ஒளலியாவையும், பாபா அவர்களின் மகன் மௌலானா ஷிஹாபுத்தீனையும் பெரிதும் நச்சரித்ததின் பேரில், அவர்களிருவரும் பாபா அவர்களின் திருமுன் வந்து பக்ருத்தீனுக்குக் கிலாஃபத் வழங்குமாறு பரிந்துரைத்தனர். அதுகேட்ட பாபா அவர்கள், ''இது இறைவனின் அலுவலாகும். வேண்டுவோர்க் கெல்லாம் கொடுக்கப்படுவதல்ல. தகுதியுள்ளவர்களுக்குக் கேளாமலே கொடுக்கப்படும்'' என்று கூறி விட்டார்கள். ஷைகு நிஜாமுத்தீன் ஒளலியா மறுவார்த்தை பேசவில்லை.

பின்னர் பாபா அவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கும் சமயத்தில் மீண்டும் ஒருமுறை பக்ருத்தீனுக்காக, நிஜாமுத்தீன் ஒளலியா, பாபா அவர்களிடம் பரிந்துரைத்த பொழுது, அவர்களும் அதற்கு வேண்டா வெறுப்பாக இணங்கி, அவருக்குக் கிலாஃபத் நாமா அனுப்பிவைத்தனர். பிற்காலத்தில் நிஜாமுத்தீன் ஒளலியா இதைப்பற்றிக் கூறும் பொழுது, ''மௌலானா பக்ருத்தீன் ஸஃபஹானி தம் ஆன்மீக அலுவல்களில் பெரும்வெற்றி காணவில்லை. அவருக்கு பாபா அவர்கள் மனமுவந்து கிலாஃபத் வழங்காததே அதற்கான காரணமாகும்'' என்று கூறினர்.

ஒருவரைப் பார்த்த கணமே, பாபா அவர்களின் உள்ளுணர்வு அவரை எவர் என அவர்களுக்குப் படம் பிடித்துக் காட்டியது. எனவே அவர்கள், ஒருவருக்குக் கிலாஃபத் வழங்குவது பற்றி, அவரின் தகுதிக்குத் தக்க படி முடிவு செய்தார்கள். தகுதியற்றவர்கள், எவ்வளவு தான் செல்வாக்குள்ள வராக இருந்தபோதினும், அவருக்கு பாபா அவர்கள் கிலாபத் வழங்குவ தில்லை.

ஒரு தடவை பாபா அவர்கள் தம் ஆன்மீக மாணவர் ஷைகு ஆரிஃபை, ஓர் அலுவலின் நிமித்தம் சிவிஸ்தானுக்கு அனுப்பி வைத்தனர். உச்சின் ஆளுநர் அவரிடம் ஒரு நூறு தங்காக்களைக் கொடுத்து, அவற்றை பாபா அவர்களிடம் தம்முடைய காணிக்கையாக வழங்குமாறு வேண்டிக் கொண்டார். ஆனால் ஷைகு ஆரிஃபோ, பாபா அவர்களிடம் ஐம்பது தங்காக்களைக் கொடுத்து மீதி ஐம்பது தங்காக்களைத் தம்மிடமே வைத்துக் கொண்டார். அதனை உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட பாபா அவர்கள், ''ஆரிஃப்! நீர் அத் தொகையை சகோதர முறையில் பங்கு வைத்துக் கொண்டீரோ?'' என்று சிரித்துக் கொண்டு வினவினர். தாம் செய்த தவற்றை பாபா அவர்கள் விளங்கிக் கொண்டார்கள் என்பதை உணர்ந்ததும், ஷைகு ஆரிஃபுக்கு ஏற்பட்ட நாணத்திற்கு அளவில்லை. தம் ஜேபியில் ஒளித்து வைத்திருந்த ஐம்பது தங்காக்களையும் பாபா அவர்களின் காலடியில் வைத்துத் தம்மை



மன்னித்தருளுமாறு வேண்டி நின்றார். அதுகண்டு பாபா அவர்களின் மென்மை உள்ளம் இரங்கியது. உடனே சென்று தலைமுடியை மழித்துக் கொண்டு வந்து, மீண்டும் தம் ஆன்மீகக் குழுவில் புதிதாகச் சேருமாறு பணித்தார்கள் அவரை. அவரும் அவ்விதமே செய்தார்.

இதன்பின் பயபக்தி மிகுந்த நெறி வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார் ஆரிஃப். அவருக்கு பாபா அவர்கள் கிலாஃபத் வழங்கி, மீண்டும் அவரை சிவிஸ்தானுக்குச் செல்லுமாறு பணித்தனர். ஆனால், அவரோ பாபா அவர்களிடம் வந்து, அவர்கள் வழங்கிய கிலாஃபத் நாமாவை அவர்களிடமே திருப்பிக் கொடுத்து, ''நானோ பலவீனன். என்னால் இந்தப் பொறுப்பு வாய்ந்த பதவியை மேற்கொள்ள இயலாது. மாபெரும் ஷைகுமார்கள் செய்ய வேண்டிய இந்த ஆன்மீகப் பிரச்சார அலுவலை என்னால் ஆற்றல் சாலாது'' என்று தம் ஆற்றாமையை எடுத்துரைத்தார். அது கேட்ட பாபா அவர்கள் அவரை மக்கா சென்று 'ஹஜ்'ஜு செய்யுமாறு பணித்தனர்.

பாபா அவர்கள் தம் இளவல் நஜீபுத்தீன் முதவக்கிலுக்கும் கிலாபத் நல்கினார்கள். கல்வி கற்பதற்காக டில்லி சென்ற அவர், அங்கேயே நிரந்தரமாகத் தங்கி வாழ்ந்தார். அவருடைய வாழ்வு வறுமையிலேயே கழிந்து வந்தது. அவரைப்பற்றி ஷைகு நிஜாமுத்தீன் ஒளலியா கூறும்பொழுது, ''எழுபது ஆண்டுகளாக ஷைகு நஜீபுத்தீன், இந்நகரிலேயே வாழ்ந்து வந்தார். அவருக்கு எவ்விதச் சொத்துக்களும் கிடையாது. எவரிட மிருந்தும் அவருக்கு யாதோர் உதவிப் பணமும் வருவது கிடையாது. அல்லாஹ்வின் மீதே 'தவக்குல்' வைத்து அமைதியாகவும், மகிழ்வாகவும் வாழ்ந்து வந்தார். அவரைப் போன்ற ஒருவரை நான் இந்நகரில் பார்க்க வில்லை'' என்று எடுத்துரைத்தனர்.

அவரும், அவருடைய குடும்பத்தினரும், ஒரு சிறு அறையில் வாழ்ந்து வந்தனர். அவருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் இருந்தனர். ஓர் ஈத் பெருநாளின் போது, சில கலந்தர்கள் அவரின் இல்லம் வந்தனர். வீட்டிலோ அவர்களுக்கு அளிப்பதற்கு ஒன்றுமில்லை. வீட்டிலுள்ள எதையாவது விற்று, வந்த விருந்தினர்களை உபசரிக்க அவர் எண்ணினார். தம் மனைவியின் போர்வையை எடுத்துப் பார்த்தார். அதுவோ கிழிந்து ஒட்டுப் போடப்பட்டிருந்தது. அதன் பின், அவர் தம் தொழுகை விரிப்பை எடுத்துப் பார்த்தார். அதுவோ, அதைவிட மோசமான நிலையில் இருந்தது. இந் நிலையில் என் செய்வதென்றறியாத அவர், அவர்களுக்குத் தண்ணீரை அளித்து உபசரித்தார்.

அவர் தம் அண்ணனைக் காண்பதற்காக அஜுமீதனுக்குப் பத்தொன்பது தடவை வந்துள்ளார். இறுதி முறையாக அவர் தம் தமயனாரைப் பார்த்துவிட்டு விடை பெறும்பொழுது, முன்பெல்லாம் செய்தது போன்று தமயனார், அவர் மீண்டும் வந்து தம்மைச் சந்திக்க வேண்டுமென்று இறைஞ்சவில்லை. இதன்பின் அவர் மீண்டும் அஜுமீதன் வரவே இல்லை. தமயனார் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பே அவர் இறப்பெய்தி விட்டார்.

பாபா அவர்களின் கலீபாவான ஷைகு ஜமாலுத்தீன், ஹான்ஸியில் வாழ்ந்து வந்தபோதினும், தம் ஆசானைக் காண்பதற்காக ஏழு தடவை அஜுமீதன் வந்துள்ளார். உடல் நலிவின் காரணமாக அவர் வர இயலாத பொழுது, அவர் தம் பணிப்பெண்ணை பாபா அவர்களிடம் அனுப்பி ஆலோசனை கலந்து வரச் செய்வார். ஒரு தடவை அவரின் பணிப்பெண் பாபா அவர்களிடம் வந்த பொழுது, ''என்னுடைய ஜமால் எவ்வாறு உள்ளார்?'' என்று அவர்கள் வினவினர். ''தங்களிடம் தீட்சை பெற்றதிலிருந்து அவர் தம் நிலபுலன்களையும் சொத்து சுகங்களையும் துறந்து, வறுமையிலும், துன்பத்திலும் உழன்று கொண்டிருக்கிறார்'' என்று அவள் பதிலிறுத்தாள். அந்த பதில் பாபா அவர்களை வருத்தமுறச் செய்வதற்குப் பதிலாக மகிழ்வுறச் செய்தது. ''எல்லாப் புகழும் இறைவனுக்கே! ஜமால் மகிழ்வுடன் இருக்கிறார்'' என்று அவர்கள் திருவாய் மலர்ந்தனர்.

ஜமால் இறந்தபின் அவரின் பணிப் பெண், ஜமாலின் இளமகன், புர்ஹானுத் தீனை பாபா அவர்களிடம் அழைத்து வந்த பொழுது, பாபா அவர்கள் அவ் இளவலை அன்புடன் உபசரித்து, அவருக்கு கிலாஃபத் நாமாவை வழங்கியதோடு, டில்லி சென்று ஷைகு நிஜாமுத்தீனின் சகவாசத்தில் இருக்குமாறு அவரைப் பணித்தனர்.

புர்ஹானுத்தீனுக்கு சின்னஞ்சிறு வயதிலேயே கிலாஃபத் வழங்கியதைக் கண்டு, அந்தப் பணிப்பெண் வியப்புற்று, ''காஜா புர்ஹானுத்தீன் சின்னஞ்சிறு பாலகனல்லவோ?'' என்று கூறிய பொழுது, ''தலைப்பிறையும், சின்னஞ் சிறியதாகத்தான் இருக்கிறது'' என்று புன்முறுவலுடன் பதிலிறுத்தனர் பாபா.

பாபா அவர்களின் ஆணைப்படி, காஜா புர்ஹானுத்தீன் டில்லி சென்று, ஷைகு நிஜாமுத்தீன் ஔலியாவின் சகவாசத்தில் வாழ்ந்து வந்த போதினும், அவர் எவருக்கும் 'பைஅத்' வழங்கவில்லை. ''ஹலரத் நிஜாமுத்தீன் முஹம்மது இங்கு இருக்கும் பொழுது, நான் எவருக்கும் 'பைஅத்' வழங்குவது முறையாகாது'' என்று அவர் கூறிவிட்டார்.



ஹிஜ்ரி 664-ஆம் ஆண்டு ரமலான் பிறை 13 அன்று பாபா அவர்கள் ஷைகு நிஜாமுத்தீன் ஔலியாவுக்கு கிலாஃபத் நாமாவை வழங்கினர். பாபா அவர்கள் நிஜாமுத்தீன் ஔலியா மீது கொண்டிருந்த அன்போ அளப்பரியதாக இருந்தது. ''இறைவனே, அவர்களைத் தம்முடைய ஆன்மீக வாரிசாகத் தேர்ந்தெடுத்துள்ளான்'' என்று பாபா அவர்கள் எண்ணினார்கள்.

ஒரு தடவை பாபா அவர்கள் தம் மக்களுடனும், ஆன்மீக மாணவர்களுடனும் படகில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது பாபா அவர்களையும், நிஜாமுத்தீன் ஔலியாவையும் தவிர்த்து ஏனையோர் அனைவரும் உறங்கிவிட்டனர். அப்பொழுது பாபா அவர்கள் 'நிஜாம்' என்று அழைத்தனர். 'இதோ வந்துவிட்டேன்' என்று கூறிக் கொண்டே, நிஜாமுத்தீன் ஔலியா, பாபா அவர்களிடம் சென்றனர் ''நான் உம்மை அழைக்கவில்லை. என் மகன் நிஜாமுத்தீனை அழைத்தேன்'' என்றனர் பாபா. சற்றுநேரம் கழிந்தது. மீண்டும் பாபா அவர்கள், நிஜாம் என்று அழைக்க, மீண்டும் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களே, அவர்களின் முன் வந்து நின்றனர். அதுகண்ட பாபா அவர்கள் நிஜாமுத்தீன் ஔலியாவை அருகே அழைத்து, ''மஸ்வூத், தம் மகன் நிஜாமை ஆசீர்வதிக்க விரும்பினார். ஆனால் இறைவனோ, நான் உம்மை ஆசீர்வதிப்பதையே விரும்புகிறான்'' என்று கூறி, நிஜாமுத்தீன் ஔலியாவை ஆசீர்வதித்தனர்.

டில்லியில் வாழ்ந்து வந்த நிஜாமுத்தீன் ஔலியா மூன்று தடவை பாபா அவர்களைச் சந்திப்பதற்காக அஜுமீதன் வந்துள்ளனர். அவர்கள் மூன்றாவது தடவை அஜுமீதன் வந்தபொழுது, ''நான் உமக்கு இரு உலகங்களையும் வழங்கியுள்ளேன். போய், இந்திய அரசாங்கத்தின் ஆட்சியை மேற்கொள்ளும்'' என்று பாபா அவர்கள் நிஜாமுத்தீன் ஔலியாவை ஆசீர்வதித்து அனுப்பி வைத்தனர். இதுவே ஆசானுக்கும் மாணவருக்கும் இடையேயுள்ள இறுதிச் சந்திப்பாக இருந்தது. இதன் பின் அவர்களிருவரும் சந்திக்கவே இல்லை.

ஹிஜ்ரி 665-ஆம் ஆண்டு, பிறந்ததிலிருந்தே பாபா அவர்களின் உடல் நலியத் துவங்கியது. நாளுக்கு நாள் அவர்களின் உடல் நிலை சீர்கெட்டுக் கொண்டே வந்தது. அதற்கு முந்திய ஆண்டில் ரமலானின் போது, நோன்பு நோற்க இயலாத பலவீன நிலையிலானார்கள். ஆண்டு முழுவதும் நோன்பு நோற்று வந்த அவர்களுக்கு அவ் ஆண்டு கடமை நோன்பைக் கூட நோற்க இயலாது போய்விட்டது. இவ் ஆண்டோ, வாய்வுத் தொந்தரவினால் அவர்கள் பெரிதும் துன்புற்றார்கள். ஈட்டி போன்று அது

அவர்களின் வயிற்றைக் குத்திக் குடைந்து கொண்டிருந்தது. தம் முடிவு நெருங்கி விட்டது என்பதை பாபா அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

அவர்கள் நிர்யாணமடைவதற்குச் சில நாட்களுக்கு முன், சையிது முஹம்மது கிர்மானி என்பவர், பாபா அவர்களைக் காண்பதற்காக டில்லியிலிருந்து அஜுதன் வந்து சேர்ந்தார். பாபா அவர்களின் மக்களும், மாணவர்களும் பாபா அவர்களின் அறைக்கு வெளியே குழுமி நின்று, பாபா அவர்களின் ஆன்மீக வாரிசாக எவரை நியமிப்பது என்பது பற்றி ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். பாபா அவர்களைக் காண அவர் எவ்வளவோ விரும்பிய போதினும் ''இப்பொழுது அவர்களைப் பார்க்க இயலாது'' என்று பாபா அவர்களின் மக்கள் கூறிவிட்டனர்.

எனினும், அவர்களின் சொற்களைப் பொருட்படுத்தாது உள்ளே நுழைந்த அவரை, பாபா அவர்கள் அக மலர, முக மலர வரவேற்று ''சையிதே! நலமாக இருக்கிறீரா? எப்பொழுது வந்தீர்!'' என்று அன்புடன் விசாரித்தனர். ''இப்பொழுது தான் வந்தேன்'' என்று பதில் கூறிய சையிது முஹம்மது கிர்மானி, நிஜாமுத்தீன் ஔலியாவின் ஸலாத்தையும் பாபா அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்பினார். அவ்விதம் கூறின் பாபா அவர்களும் நிஜாமுத்தீன் ஔலியாவுக்குப் பதில் ஸலாம் உரைத்து ஆசீர்வதிப்பர். இது பாபா அவர்களின் மக்களுக்கு எரிச்சலை உண்டு பண்ணும் என்று கருதிய சையித், டில்லியில் வாழ்ந்து வந்த மற்ற மகான்களைப் பற்றியெல்லாம் பாபா அவர்களிடம் எடுத்துரைத்த பின், நிஜாமுத்தீன் ஔலியாவையும் பற்றிக் கூறி, அவர்களின் ஸலாத்தையும் பாபா அவர்களுக்கு எடுத்தோதினர்.

நிஜாமுத்தீன் ஔலியாவின் பெயரைக் கேட்டதும், பாபா அவர்களின் முகம் மலர்ந்தது. கண்கள் ஒளிர்ந்தன. ''அவர் எவ்வாறு உள்ளார்? நலமாக உள்ளாரா?'' என்று ஆவலுடன் வினவினர். அதன்பின் தம்முடைய கிர்கா, தொழுகை விரிப்பு, கைத்தடி ஆகியவற்றை எடுத்து சையிது முஹம்மது கிர்மானியிடம் கொடுத்து, அவற்றைப் பத்திரமாக எடுத்துச் சென்று நிஜாமுத்தீன் ஔலியாவிடம் ஒப்படைத்து விடுமாறு பணித்தனர் பாபா. இது கண்டு பாபாவின் மக்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவில்லை.

இச் சமயத்தில் பாபா அவர்களைக் கவிஞர் ஷம்சுத்தபீர் காண வந்து, சில கவிதைகளைப் பாடினார். அதுகேட்டு பாபா அவர்கள் சொக்கி, மெய் மறந்திருந்தார்கள். மயக்கம் தெளிந்ததும், அக் கவிஞருக்குத் தம் ஆடை ஒன்றை அன்பளிப்பாக வழங்கினர். இதன்பின் அவர்கள் எவருடனும்



பேசாது, தம் நேரத்தைத் திருக்குர்ஆனை ஓதுவதிலும், வணக்கத்திலும் கழித்து வந்தார்கள்.

இதன்பின் சின்னாட்கள் சென்றன. பாபா அவர்களின் இறுதி நேரமும் நெருங்கிக் கொண்டு வந்தது. தாம் நிர்யாணமடைவதற்குமுன், பாபா அவர்களுக்குத் தம் அன்பு மகன் காஜா நஜீமுத்தீனுடையவும், தம் அருமை மாணவர் நிஜாமுத்தீன் ஔலியாவுடையவும், நினைவு வந்தது. அவர்களின் மகன் காஜா நஜீமுத்தீனோ, படையணியில் சேர்ந்து பாட்டியாலியில் இருந்து வந்தார். நிஜாமுத்தீன் ஔலியாவோ, ஷவ்வால் மாதமே டில்லி புறப்பட்டுவிட்டனர். புறப்படுமுன் பாபா அவர்கள் தம் மாணவரை நோக்கி, ''நான் என் ஆசானின் இறப்பு வேளையில் அவருடன் இருக்காதது போன்று, நீரும் என்னுடைய இறப்பு வேளையில் என்னுடன் இருக்கமாட்டீர்'' என்று கூறியிருந்தனர். இப்பொழுது அவர்களுக்கு நிஜாமுத்தீன் ஔலியாவின் நினைவு வரவே, ''ஷைகு நிஜாமுத்தீன்!'' என்று தம்மை அறியாமல் உரத்துக் கூறினர். அதன்பின் அவர்களே ''அவர் டில்லியிலல்லவோ இருக்கிறார்'' என்று தமக்கே தாம் ஆறுதல் கூறிக் கொண்டனர். பின்னர் அவர்கள் ''என் மகன் நிஜாமுத்தீன் வந்து கொண்டிருக்கிறார். வந்து என்ன பயன்? அவர் என்னைச் சந்திக்க முடியாதே'' என்று கூறினர்.

இதன்பின் மயக்க நிலையில் இருந்த அவர்கள் எழுந்து 'உளூ'ச் செய்து, இஷாத் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுதனர். அதன்பின் மீண்டும் அவர்களை மயக்கம் ஆட்கொண்டது. சற்று நேரம் கழித்து மயக்கம் தெளிந்து கண்களைத் திறந்த அவர்கள், தம்மைச் சூழ வீற்றிருந் தவர்களை நோக்கி, ''நான் தொழுது விட்டேனா?'' என்று வினவினர். ''ஆம்'' என்று அவர்கள் பதிலுரைத்ததும் ''நான் மீண்டும் அதனை ஒரு முறை தொழுது கொள்கிறேன். இதன் பின் என்ன நிகழப்போகிறது என்பதை எவர் அறிவார்?'' என்று கூறினர். அதன்பின் மீண்டும் இஷாத் தொழுகையைத் தொழுத அவர்கள், மீண்டும் மயக்க நிலையிலாயினர். சற்று நேரம் கழித்து தன்னுணர்வு பெற்ற அவர்கள், மீண்டும் பதற்றத்துடன் தம்மைச் சூழ இருந்தவர்களை நோக்கி, 'நான் தொழுது விட்டேனா?'' என்று வினவினர். ''ஆம்'' என்று அவர்கள் பதிலுரைத்ததும், அதனால் பாபா அவர்கள் மனநிறைவுறாது மீண்டும் ஒரு முறை இஷாத் தொழுகையைத் தொழுதனர். தொழுது முடிந்ததும், மயக்கம் அவர்களை ஆட்கொண்டது. அப்படியே அவர்கள் கீழே சாய்ந்தனர். அவர்களுடைய நா ''ஹையுல் கையூம்'' என்று உச்சரித்தது. அடுத்தகணம் அவர்களுடைய ஆன்மா அவர்களுடைய உடலை விட்டும் பறந்து சென்றது. இது நிகழ்ந்தது கி.பி. 1265-ஆம் ஆண்டு, அக்டோபர் 15ஆம் நாள், அதாவது

ஹிஜ்ரி 665ஆம் ஆண்டு முஹர்ரம் 5ஆம் நாள் சனிக்கிழமையாகும். அப்பொழுது அவர்களுக்கு வயது 95.

பாபா அவர்களின் இறுதிக் காலம் சொல்லொணா வறுமையில் கழிந்தது. ஷவ்வால் மாதத்தில் நிஜாமுத்தீன் ஔலியா டில்லி புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த பொழுது, பாபா அவர்கள் ஒரு சுல்தானி பொன் நாணயத்தை அவர்களுக்கு அன்பளிப்பாக நல்கியிருந்தனர். அன்றிரவு வீட்டில் அனைவரும், பட்டினியோடுதான் படுக்கைக்குச் செல்ல வேண்டி இருந்ததைக் கண்ட ஔலியா அவர்கள், அந்தப் பொன் நாணயத்தை பாபா அவர்களின் காலடியில் காணிக்கையாக வைத்தனர். அதைச் செலவழித்தே அன்றிரவு அனைவரும் உணவுண்டனர்.

பாபா அவர்கள் இறந்த இரவும் அதே வறிய நிலையே நீடித்தது. பாபா அவர்களின் வெற்றுடலைப் போர்த்த கஃஃபன் துணி வாங்குவதற்குக் கூட வீட்டிலுள்ளோரிடம் காசில்லை. அதுகண்ட அமீர் குர்துவின் பாட்டியார் ஒரு வெள்ளைத் துணியை அனுப்பி வைத்தனர். பாபா அவர்கள் வாழ்ந்து வந்த வீட்டின் மதிளை உடைத்து, அவர்களின் அடக்கவிடம் அமைப்பதற்கான சுடாத செங்கல் எடுக்கப்பட்டது. இவ்வாறு பாபா அவர்களின் இறுதிச் சடங்குக்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

பாட்டியாலியில் இருந்த காஜா நிஜாமுத்தீனுக்கு தம் தந்தையின் நிலை கனவின் மூலம் அறிவிக்கப்படவே, அவர் அங்கிருந்து புறப்பட்டு அஜுதன் வந்து சேர்ந்தார். அப்பொழுது பொழுதடைந்து விட்டதால், நகர வாயில் அடைக்கப்பட்டுவிட்டது. எனவே, அவர் அன்றிரவை நகரின் வெளியிலுள்ள விடுதியில் கழித்துவிட்டு, விடிந்தெழுந்ததும் நகருக்குள் வந்து கொண்டிருந்தார். அப்பொழுது பாபா அவர்களின் புனித உடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்காக நகருக்கு வெளியிலுள்ள பொது அடக்கவிடத்திற்கு எடுத்து வரப்படுவதைக் கண்ணுற்றார். உடனே அவர் தம் உடன் பிறந்தார்களையும், உறவினர்களையும் அணுகி ''என்ன வேலை செய்தீர்கள் நீங்கள்? தந்தையார் அவர்களை நகருக்கு வெளியே உள்ள பொது அடக்கவிடத்தில் அடக்கி விடின், மக்கள் அங்கு சென்று 'பாத்திஹா' ஓதி விட்டுச் சென்றுவிடுவரே. அவர்களின் குடும்பத்தை ஏறிட்டுப் பார்ப்பவர் எவருமில்லாமல் போய்விடுமே. திருப்பி வீட்டிற்கே கொண்டு செல்லுங்கள்'' என்று கூறினார். அவர் கூறியது அறிவாகப் படவே, பாபா அவர்களின் புனித உடல் அவர்களின் இல்லம் திருப்பிக் கொணரப்பட்டு, அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டது. முன்னர் அவர்களுக்கு நல்ல வீடு ஒன்று நிர்மாணித்துக் கொடுக்க முன் வந்த அந்த நல்லாரே, இப்பொழுதும் முன்வந்து அவர்களின் அடக்க இடத்தின் மீது



கட்டடம் எழுப்பினார். பிற்காலத்தில் அவர்களின் அடக்க இடம் சுல்தான் ஃபைரோஸ் ஷா துக்ளக்கினால் பழுது பார்க்கப்பட்டது.

பாபா அவர்களின் அடக்கவிடத்தை தரிசித்து அவர்களின் ஆசியைப் பெறுவதற்காக, அரசர் முதல் ஆண்டி வரை அவரின் அடக்கவிடத்திற்கு அன்று முதல் இன்று வரை வந்த வண்ணமாகவே உள்ளனர். தைமூர் தம்முடைய சூறாவளிப் படையெடுப்பின் போது, அஜுதனுக்கு மரியாதையுடன் வந்து, பாபா அவர்களின் அடக்க இடத்தைத் தரிசித்துச் சென்றார். முகலாயப் பேரரசர் அக்பரும் இங்கு வந்து பாபா அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்ததுடன், அஜுதன் என்ற பெயரையும், பாபா அவர்களின் புனிதத்தைக் கருதி பாக்பட்டன் (புனித நகரம்) என்று மாற்றியமைத்தார்.

பாபா அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிப்பதற்காக முஸ்லிம்கள் மட்டுமல்லாது இந்துக்களும், சீக்கியர்களும் வந்து போய்க் கொண்டிருக் கிறார்கள். கி.பி. 1836 ஆம் ஆண்டில் வங்காள ஆசிய சொஸைட்டியின் சஞ்சிகையில் முன்ஷி மோஹன்லால், பாபா அவர்களைப் பற்றி எழுதும் பொழுது, ''இந்நாட்டு இந்துக்கள், அவரை ஒரு மகான் எனக் கருதி முஸல் மான்கள் போன்று அவருடைய அடக்க இடத்திற்கு வந்து மரியாதை செலுத்துகிறார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பொழுது ஃபரீத்கோட் என்று வழங்கப் பெறும் நகரம் பாபா அவர்களின் நினைவாகவே நிறுவப்பட்டது என ஆங்கிலத்திலுள்ள இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் எடுத்துரைக்கிறது.

பாபா அவர்களுக்கு ஐந்து ஆண் மக்களும், மூன்று பெண் மக்களும் இருந்தனர். அவர்களில் முதலாமவர் காஜா நஸீருத்தீன் ஆவார். அவர் உழுதுண்டு வாழ்ந்து வந்தார் என்றும், தனிமையிலும் 'ஜமாஅத்'துடன் சேர்ந்தும் இறைவனைத் தொழுது வந்தார் என்றும் அமீர்குர்து குறிப்பிடுகின்றார்.

இரண்டாமவர் காஜா ஷிஹாபுத்தீன் ஆவார். ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களின் நினைவாக, இவருக்கு இப்பெயரைச் சூட்டிய பாபா அவர்கள், இவரின் இனிமையான பேச்சைப் பெரிதும் விரும்பினர். தந்தையின் ஜமாஅத் கானாவிலேயே தங்கி இறைவனை வணங்கிக் கொண்டிருந்தார்.

மூன்றாமவர் ஷைகு பத்ருத்தீன் சுலைமான் ஆவார். இவர் சிஷ்தைச் சேர்ந்த வலிமார்களிடமிருந்து நேரடியாகக் கிலாஃபத்தைப் பெற்றார் என்று கூறப்படுகிறது. சிஷ்திலுள்ள தர்க்காவின் மூலபீடம் காலியான

பொழுது, எவரை அப் பீடத்தில் அமர்த்துவதென்பது பற்றித் தகராறு ஏற்பட்ட பொழுது, காஜா ஸஊர், காஜா கௌர் என்ற இரு மகான்கள் டில்லி வந்து, அங்கு வாழ்ந்து வந்த ஷைகு அலீ சிஷ்தி (ரஹ்) அவர்களை சிஷ்த் திரும்பி, அவரின் அண்ணன் வீற்றிருந்த பீடத்தில் அமருமாறு வேண்டினர். ஷைகு அலீ சிஷ்தி (ரஹ்) அவர்கள் மீது, அளவற்ற மதிப்பு வைத்திருந்த சுல்தான் பல்பனோ, அதுகேட்டு அவர்கள் டில்லியைவிட்டு நீங்கின் தாம் முடி துறக்கப் போவதாகக் கூறவே, ஷைகு அலீ சிஷ்தி (ரஹ்) அவர்கள் சிஷ்த் சொல்லவில்லை.

சிஷ்திலிருந்து வந்த இரண்டு வலிமார்களும் ஊர் திரும்பும் வழியில் அஜூதன் வந்த பொழுது, பாபா அவர்கள் அவர்களைச் சிறப்பாக வர வேற்று உபசரித்ததுடன், இரண்டு தொப்பிகளை அவர்களிடம் கொடுத்து, அவற்றைத் தம் இருமக்களான ஷைகு பத்ருத்தீன் சுலைமானுடையவும், ஷைகு நிஜாமுத்தீனுடையவும் தலைகளில் அணிவிக்குமாறு வேண்ட, அவர்களும் அவ்விதமே செய்தனர்.

ஷைகு பத்ருத்தீன் சுலைமானின் மகனான ஷைகு அலாவுத்தீன், பதினாறு வயதிலேயே தந்தைக்குப்பின் ஆன்மீக பீடத்தில் அமர்ந்து ஏறத்தாழ ஐம்பது ஆண்டு காலம் ஆன்மீகச் செங்கோலோச்சினர். அவர் களின் புகழ் அலக்ஸாண்ட்ரியா வரையிலும் பரவி இருந்தது. அவரை ஒழுக்கம், வணக்கம் ஆகியவற்றின் திரு உருவம் என்றும், சுல்தான் அலாவுத்தீன் கில்ஜியின் காலத்தில் இந்தியாவுக்குக் கிடைத்த மாபெரும் அருட்பேறு என்றும், பரணி புகழ்ந்துரைக்கிறார். ஆண்டுதோறும் விலக்கப் பட்ட ஐந்து நாட்களைத் தவிர, ஏனைய நாட்கள் அனைத்திலும் நோன்பு நோற்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்த அவர்கள், வெள்ளிக் கிழமை அன்று 'ஜும்ஆ'வுக்காகவே, தம் ஜமாஅத் கானாவிலிருந்து வெளியே வந்தனர்.

அவர்களின் மாண்பினை உணர்ந்த சுல்தான் முஹம்மது பின் துக்ளக், அவர்களிடம் 'பைஅத்' பெற்றார். அவர்களிடம் 'பைஅத்' பெறுவதற்காக, எவரும் வரின், அவரைத் தம் பாட்டனாரின் அடக்க இடத்திற்கு அழைத்துச் சென்று, அவரின் தலையில் தொப்பியை அணிவிக்குமாறு அவர்கள் பணிப்பர்.

அவர்களின் ஜமாஅத் கானா, மக்களுக்கு ஓர் அடைக்கல பூமியாக இருந்து வந்தது. குற்றமிழைத்தோர் எவரும், அரசாங்க ஆக்கினைக்கு அஞ்சி அங்கு அடைக்கலம் புகின், அவர்களைத் தொட சுல்தானே அஞ்சினார்.



அவர்கள் மிகவும் தூய உணர்வுள்ளவர்களாக இருந்தார்கள். இதனை இப்னு பதூதா 'வஸ்வஸா' என்று தவறாகத் தம்முடைய பயண நூலில் குறிப்பிடுகிறார். இந்தியாவில் சுஹ்ரவர்தியா தரீக்காவின் தலையாய மகானாக விளங்கிய ஷைகு ருக்னுத்தீன் மூல்தானி (ரஹ்) அவர்கள், டில்லியிலிருந்து தம் தாயகம் திரும்பும் வழியில், பாக்பட்டன் வந்து பாபா அவர்களின் அடக்க இடத்தைத் தரிசித்தார்கள். அதிலிருந்து அவர்கள் வெளியே வந்த பொழுது, ஷைகு அலாவுத்தீன் (ரஹ்) அவர்களைக் கண்டதும், உணர்ச்சி மீக்குற்று அவரைக் கட்டித் தழுவி, ''இறைவன் தங்களுக்கு உள உறுதியைக் கொடுத்துள்ளான். தங்களை எவராலும் இங்கிருந்து அசைக்க இயலாது. ஆனால், உலக பாசத்தில் மூழ்கியுள்ள நானோ, உறவினர்களைக் காண்பதற்காக அங்குமிங்கும் அலைந்து கொண்டுள்ளேன்'' என்று கூறினர்.

இதன்பின் இல்லம் மீண்ட ஷைகு அலாவுத்தீன் (ரஹ்) அவர்கள், உடனே குளித்து உடை மாற்றிக் கொண்டார்கள். இதனைக் குண்டுணி ஒருவன் ஷைகு ருக்னுத்தீன் (ரஹ்) அவர்களிடம் ஓடோடி வந்து கூறியதும், ''ஐஷைகு அலாவுத்தீன் (ரஹ்) அவர்கள் அடைந்திருக்கும் படித்தரத்தைப்பற்றி நீர் யாதொன்றும் அறியமாட்டீர். அவ்விதம் செய்தல் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டதேயாகும். உலக வாடை என்னிலிருந்து வெளியாகிறது. அவர்களோ அதைவிட்டும் அகன்று தூய வாழ்வு வாழ்கின்றார்கள்'' என்று எடுத்துரைத்தனர்.

ஷைகு அலாவுத்தீன் (ரஹ்) அவர்களின் அடக்க இடம் பாபா அவர்களின் அடக்க இடத்தின் அண்மையிலேயே உள்ளது. அதன் மீது முஹம்மது பின் துக்ளக் அழகிய குப்பா ஒன்று நிர்மாணித்துள்ளார்.

ஷைகு அலாவுத்தீன் (ரஹ்) அவர்களுக்கு ஷைகு முயிஸ்ஸுத்தீன், ஷைகு அலமுத்தீன் என இருஆண் மக்கள் இருந்தனர். இவர்களில் ஷைகு முயிஸ்ஸுத்தீன், நிஜாமுத்தீன் ஔலியாவின் ஆன்மீக மாணவர் மௌலானா வஜீஹுத்தீன் பாய்லியிடம் கல்வி கற்றார். ஒரு தடவை மௌலானா வஜீஹுத்தீன் பாய்லி, பாபா அவர்களின் அடக்க இடத்திற்கு தரிசனத்திற்காகச் சென்றபொழுது, ''வருக, வருக! அபூ ஹனீஃபா பாய்லியே!'' என்று அடக்கவிடத்திலிருந்து சப்தம் வந்ததாகக் கூறப்படுகிறது.

பாபா அவர்களின் நன்காவது மகன் ஷைகு நிஜாமுத்தீனாவார். அவரையே பாபா அவர்கள், தம்முடைய ஆன்மீக வாரிசாக நியமிக்க விரும்பினர். ஆனால், இறைவனுடைய நாட்டமோ, வேறுவிதமாக இருந்தது. அவர் பல்பனின் போரணியில் சேர்ந்து வீர மரணம் அடைந்தார்.

பாபா அவர்களின் ஐந்தாவது மகன் ஷைகு யஃகூப் ஆவார். அவர் மால்மத்தி தர்வேஷ்களின் கொள்கைகளைப் பின்பற்றினார். மால் மத்திகளோ, உண்மையான விசுவாசி எவரெனில், மக்களால் இழிவுக் கண்களோடு நோக்கப்படுவதைப் பொறுமையுடன் சகித்துக் கொள் பவரேயாவார் என்று கூறி, அதற்காக வேண்டி, மார்க்கக் கடமைகளைப் புறக்கணிப்பதுடன், மார்க்கத்திற்கு முரணான செயல்களையும் பகிரங்கமாகச் செய்து வந்தார்கள்.

அவரின் இரண்டு மக்களான காஜா அஸீஸுத்தீனும் காஜா காதியும், நிஜாமுத்தீன் ஔலியாவிடம் ஆன்மீகக் கல்வி பயின்று வந்தனர். ஒரு மஜ்லிஸில் மௌலானா வஜீஹுத்தீன் பாயில், காஜா அஸீஸுத்தீனை விட உயரிய இடத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டதும், தம் ஆன்மீக ஆசானின் வழித்தோன்றலுக்கு, மேலான இடத்தில் தம் ஆன்மீக மாணவர் அமர்ந்திருக்கிறாரே என்று நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் வருத்த முற்றார்கள்.

ஒருநாள் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள், பாபா அவர்களின் வழித் தோன்றல்களான காஜா அஸீஸுத்தீனையும், காஜா கமாலுத்தீனையும் அருகழைத்து, அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் ஒரு ஜலாலி நாணயத்தை வைத்து, காஜா அஸீஸுத்தீனை தேவகிரிக்கும் காஜா கமாலுத்தீனை மால்வாவுக்கும் போகுமாறு பணித்தனர்.

இதன்பின் வெளியே வந்த ஷைகு அஸீஸுத்தீன், ஷைகு கமாலுத் தீனை நோக்கி "இந்த ஒரு ஜலாலி நாணயத்தால் நமக்கு என்ன விளையப் போகிறது?" என்று வினவியபொழுது "அமைதியாக இரு. ஷைகு அவர்கள் இதன் மூலம் நமக்கு ஜலாலியை (கௌரவத்தை) வழங்கி யுள்ளனர்" என்று பதிலுரைத்தனர் ஷைகு கமாலுத்தீன்.

உண்மையில் அவ்விதமே நிகழ்ந்தது. மால்வா சென்ற ஷைகு கமாலுத்தீன், அங்கு சிஷ்தி தரீக்காவைப் பரப்பி மாண்புடன் வாழ்ந்து வந்தார். சுல்தான் முஹம்மது பின் துக்ளக்கின் ஆணைக்கேற்ப தேவகிரி சென்ற அமீர் குர்து, அங்கு ஷைகு அஸீஸுத்தீனுக்கு இருந்த சீரையும், சிறப்பையும், செல்வாக்கையும் கண்டு பிரமிப்படைந்து விட்டார் என்று கூறப்படுகிறது.

பாபா அவர்களின் பெண் மக்களான, பீபி மஸ்தூரா, பீபி ஷரீஃபா, பீபி பாத்திமா ஆகிய மூவரும், மாதர் குல மாணிக்கங்களாக விளங்கினர். அவர்களில் பீபி ஷரீஃபாவைப் பற்றி பாபா அவர்கள் கூறும்பொழுது, "பெண்களுக்கும் கிலாஃபத் நாமா வழங்க அனுமதியிருப்பின், நான் என் அன்பு மகள் பீபி ஷரீஃபாவுக்கும், அதனை வழங்கியிருப்பேன். அவர் போன்று ஏனைய பெண்களும் இருப்பின், பெண் இனம் ஆண் இனத்தை மிகைத்திருக்கும்" என்று கூறினர்.



பாபா அவர்களுக்குப்பின் அவர்களின் வழித்தோன்றல்களும், ஆன்மீக வாரிசுகளும் நாடெங்கணும், அவர்களின் சிஷ்தி தரீக்காவைப் பரப்பி, அதனை நந்தா விளக்காக எரியச் செய்து கொண்டிருந்தார்கள்.